V. MATHAVAN.

III FORM.

HISTORY Book.

S. S. GURUKULAM.

29.6.43.

History Work.

V. Srinivasa

III FORM

HISTORY-

V. Srinivasan.

III Form

History

Gurukulam

History test

III F. B

I முதல் மைசூர் யுத்தத்தின் நிகழ்ச்சி
கள் யாவை? 2½

II ரெகுலேடிங் ஆக்ட் என்பதில் உள்ள
ஷரத்துக்கள் என்னென்ன?

III இரண்டாம் மைசூர் யுத்தத்தைப்
பற்றி அறிக்கை எழு

IV பிட் இந்தியா சட்டம் யாரால்
இயற்றப்பட்டது? ஷரத்துக்கள்
என்ன?

III F A

I வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்த
சீர்திருத்தங்கள் யாவை?

II முதல் மஹாராஷ்டிர யுத்தத்தின்
நிகழ்ச்சிகளைப் பற்றி எழுது.

III வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது
குற்றஞ்சாட்டப்பட்டதின்
காரணம் என்ன? கூறும்.

~~Geography~~

III F. B

I தீர்க்கரேகைக் காலத்தின்
எவ்வாறு காலத்தை அறியலாம்
(உ.ம்) எழுது

IV நம் இந்தியாவில் எத்தி
சைக் காற்றுகள் வீசுகின்றன?

V நம் தென்னிந்தியாவில் எந்த
திசைக்காற்றுகளால் [illegible]
[illegible] மழை [illegible]
[illegible] ஏன்?
[illegible]

நமது தேச சரித்திரம்

மூன்றும் புத்தகம்

(மூன்றும் பாரம்—எட்டாம் வகுப்பு)

ஆசிரியர் :

எஸ். திருவேங்கடாச்சாரியார், M.A., L.T.

சரித்திராசிரியர், ஸ்ரீ ராமகிருஷ்ண உயர்கலாசாலை,
தியாகராயநகர்

பி. ஜி. பால் அண்டு கம்பெனி

4 பிரான்ஸிஸ் ஜோசப்புத் தெரு, சென்னை

பிப்புரிமை] 1941 [விலை அணா 1

முதல் பதிப்பு ஜனவரி, 1941

From

A Postal Compl

PM PL Muthiah

Sirukudalpatti

6-2-45

To

The Post-mast

Sirukudalpatti

Sir,

My father remitted me

RS from Madras on 30-1-45. I

have received it on 6-2-45.

1940-ம் வருஷத்திய புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதப்பட்டது.

Therefor I think that the money or

was delayed for fivedays by the

Post Peon. So I request you to

~~inquir~~ inquired in to the matter

Yours truly,

PL Muthiah

Printed at The Liberty Press, G.T., Madras.

முன்னுரை

புதிய எழுத்தாளரும், பழைய ஆசிரியருமான ஸ்ரீமான் சு. திருவேங்கடாச்சாரியைத் தமிழுலகத்திற்கு அறிமுகஞ் செய்வதில் எனக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகிறது. நம் பாரத தேசத்தின் பழம் பெருமையைச் சிறப்புறச் சிறுவர்கட்கு எடுத்துக்காட்டினல், அவர்கள் பிற்காலத்தில் சிறந்த இந்தியர்களாக விளங்குவார்கள் என்பது உறுதி. இந் நூலில் நம்நாட்டு வரலாறு நன்ருக விளக்கப்பட்டிருக்கிறது.

இந் நூலின் நடை இனிய எளிய நடை. சிறுவர்கள் மனதில் தங்கமுடியாத விஷயங்கள் நீக்கப்பட்டு, முக்கியமான விஷயங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அழகிய படங்கள் பல இப்புத்தகத்திற்கு அணிகலன்களாக இருக்கின்றன. ஒவ்வொரு தலைப்பின் கீழ் உள்ள குறிப்புகளும், நூலின் கடைசியிலுள்ள பயிற்சிக் கேள்விகளும் மிகவும் பயன் தருபவை.

இந்நூல் தமிழ்ச்சிருர்கட்குப் பெரு நலந்தரும் என்னும் உறுதி உடையேன்.

பச்சையப்பன் கல்லூரி,
சேத்துபட்டு, சென்னை.
27—1—41.

அ. முத்தையா.

ல் பதிப்பு ஜனவரி, 1941

நூன் முகம்

இப்புத்தகத்தில் அடங்கியுள்ள விவரங்கள் ஆராய்ந்து எடுக்கப்பட்டவை. சிறுவர்களின் மனோபாவத்திற்கு எட்டக்கூடியவையும், அனுபவத்திற்கு உட்பட்டவைகளுமான விவரங்களையே இதில் காணலாம். ஆதிகாலம் தொட்டுச் சமூகம் எவ்விதங்களில் அபிவிருத்தி அடைந்துள்ளது, நம் நாடு எவ்வகைகளில் நாகரிகத்தில் மேன்மையுற்றிருந்தது, என்பன போன்ற விஷயங்களுக்கு இதில் முக்கிய இடம் தந்திருப்பதை நோக்குதல் அவசியமாகும். இப்புத்தகம் சிறுவர்களுக்கு நன்கு பயன்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் எழுதப்பட்டதாதலின், இதன் நடை மிகவும் எளியதாகச் செய்யப்பட்டிருக்கிறது.


இதை எழுதும்போது என் நண்பர்கள் யாவரும் எனக்கு உதவிபுரிந்தனர். சென்னை மியூஸியத்தில் உயர்ந்த பதவியை வகித்துவரும் ஸ்ரீமான் C. சிவராமமூர்த்தி அவர்கள் தாம் எழுதிய சில சித்திரங்களைத் தந்து உதவினார். அன்னாருக்கு என் நன்றியறிதல் உரித்தாகுக.

இப்புத்தகத்திற்கு, மதிப்புரை தந்து உதவிய, பச்சையப்பன் உயர் கல்லூரி பேராசிரியர் ஸ்ரீமான் அ. முத்தையா, M.A., அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டுளேன்.

தியாகராயநகர்
19—1—'41

S. திருவேங்கடாச்சாரி

பொருளடக்கம்



நமது தேச சரித்திரம்

1. முன் பாகங்களின் சுருக்கம்

திராவிடர்கள் — மகத ராஜ்யத்தின் சிறப்பு — குப்த ஸாம்ராஜ்யச் சிறப்பு—ஸ்ரீஹர்ஷர்—ராஜபுத்ரர்கள்—தென்னிந்தியாவின் மேன்மை — முகம்மதியர்கள் வருகை — டில்லியில் ஆண்ட சுல்தான்களும், மொகலாய மன்னர்களும் — மஹாராஷ்டிரர்கள் — ஆங்கிலேயர் ஓங்குதல்.

திராவிடர்கள்

நீங்கள் சில வருஷங்களாகச் சரித்திரம் பயின்று வருகின்றீர்கள். நம் நாடு ஹிந்து அரசர்களால் ஆளப்பட்டு வந்தபோது எவ்வித நிலையிலிருந்தது என்பதை முதலில் அறிந்துகொண்டீர்கள். முகம்மதியர் ஆட்சி எவ்வித பயன்களை அளித்தது என்பதைப் பிறகு தெரிந்துகொண்டீர்கள். அதையும் தவிர, ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களுடன் போட்டியிட்டு இந்தியாவில் தங்களுடைய வியாபாரத்தை எவ்வாறு ஓங்கச்செய்தனர், என்பதையும் அறிந்துகொண்டீர்கள். இதுவரையில் நீங்கள் அறிந்துகொண்டதன் சுருக்கத்தை முதலில் கவனித்துவிட்டுப் பிறகு சரித்திரத்தை மேலே தொடங்குவோம்.

நம் தேசம் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன்னமே மனிதர்கள் உறைவிடமாக இருந்தது. நம் நாட்டு மக்கள் ஆதிகாலத்தில் நாகரிகத்தில் சிறந்து விளங்கி

னர். நம் நாட்டு ஆதி குடிகளான திராவிடர்கள் பெரிய மரக்கலங்களைக் கட்டி, அவற்றில் தேக்கு, அரிசி, தந்தம், மஸ்லின் முதலிய பொருள்களை ஏற்றிக்கொண்டு அன்னிய தேசங்களாகிய பாரசீகம், ஆசியா மைனர், மெஸபடோமியா முதலியவற்றோடு வியாபாரம் செய்துவந்தனர்.

மகத ராஜ்யத்தின் சிறப்பு

திராவிடர்கள் எவ்வாறு சிறந்திருந்தனரோ அவ்வாறே வட இந்தியா முழுவதிலும் குடியேறியிருந்த ஆரியர்களும் சிறந்திருந்தனர். அவர்களுடைய நூல்களாகிய நான்கு வேதங்களிலிருந்தும், இதிஹாஸ புராணங்களிலிருந்தும் அவர்களுடைய ராஜீய வாழ்க்கையும், சமூக வாழ்க்கையும் எவ்வாறு இருந்தன என்பதை அறிந்து கொள்ளலாம்.


புத்தர்

பிற்காலத்தில் வடஇந்தியாவில் தோன்றிய ராஜ்யங்களில் மகத ராஜ்யமே முக்கியமானதாகும். இதை முதலிலாண்ட அரச வமிசம் சிசுநாக வமிசம் என்பதாம். இதன் அரசர்களான பிம்பிசாரரும் அஜாத சத்ருவும் சமர்த்தர்கள். இவ்வமிசத்தினர் ஆண்ட காலத்தில் தான் ஜைன மதமும் புத்தமதமும் ஏற்பட்டு, பிரபலமடைந்தன. புத்தரும் பிம்பிசாரரும் சமகாலத்தவர். இவர்களுக்குப் பிறகு அரசாண்ட நந்த வமிசத்தினர் இவர்களைப்போல் அவ்வளவு திறமையுள்ளவர்களாக இல்லையாதலின், அவர்களுடைய ஆட்சியை ஒழித்துச் சந்திரகுப்தர், மௌரிய வமிசத்தின

ரின் ஆட்சியை ஏற்படுத்தினர். இவ்வமிசம் கீர்த்தியுடனும் செல்வாக்குடனும் பலகாலம் ஆட்சி செலுத்தியது. இவ் வமிசத்தை ஏற்படுத்தியதால் சந்திரகுப்தர் இந்திய மக்களுக்கு ஒரு நன்மையைச் செய்தாரென்றே கருதவேண்டும். ஏனெனில் இவர் காலத்துக்கு முன்பு வட இந்தியாவிலிருந்த சிறு ராஜ்யங்கள் ஒற்றுமை யடைந்திருக்கவில்லை. அன்னியர்கள் இந்தியாவுக்கு வடமேற்குக் கணவாய்களின் வழியாக வந்து, படையெடுப்பது மிகவும் சுலபமாயிருந்தது. நந்தர்கள் ஆட்சி செலுத்திக்கொண்டிருந்தபோது கிரேக்கதேசத்தைச் சேர்ந்த அலெக்ஸாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்து, இந்தியாவின் வடமேற்கே யாண்ட அரசர்களைத் தமக்குக் கீழ்ப்படும்படியாகச் செய்தார். நல்லகாலமாக அவர் மகத ராஜ்யத்தின்மீது படையெடுக்கவில்லை. இதற்குப் பிறகுதான் சந்திரகுப்தர் வட இந்தியாவிலிருந்த பல சிறு ராஜ்யங்களை அழித்து ஒரு ஸாம்ராஜ்யத்தை ஏற்படுத்தினர்.



அலெக்ஸாந்தர்

மௌரிய அரசர்களில் அசோகர் தனிச்சிறப்பு எய்துவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் அவர் தரும வழியைப் பின்பற்றி, மக்களின் நன்மைக்காகப் பாடுபட்டது சிறந்ததாகும். இவருடைய முயற்சியால் பௌத்தமதத்தின் கொள்கைகள் எங்கும் பரவலாயின.

குப்த ஸாம்ராஜ்யச் சிறப்பு

அசோகருக்குப் பின் மௌரிய ஸாம்ராஜ்யம் பலம் குன்றி, பல சிறிய ராஜ்யங்களுக்கு இடம் கொடுத்தது. இவற்றில் பல, அன்னியர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. ஆயினும் சில ஹிந்து ராஜ்யங்களும் பிரசித்தி அடைந்திருந்தன. அவற்றுள் புஷ்ய மித்திரர் ஸ்தாபித்த சுங்க ராஜ்யம் ஒன்றாகும். புஷ்யமித்திரர்காலத்தில் ஹிந்து மதம் ஓங்கலாயிற்று. அன்னிய அரச வமிசத்தினரில் குஷான் வமிசத்தினரே பேரும், புகழும் அடைந்துள்ளனர். அதற்குக் காரணர் அதன் சிறந்த அரசரான கனிஷ்கரேயாவர். இவர் காலத்தில் பௌத்த மதம் பரவியது மல்லாமல், புத்தர் தெய்வமாகவும் கொண்டாடப்பட்டார்.



அசோகர்

மேற்கூறிய சிறு ராஜ்யங்கள் சிறிது காலத்திற்குள் மறையவே, குப்த ஸாம்ராஜ்யம் ஏற்பட்டது. குப்த அரச வமிசத்தினர் ஹிந்து மதம் ஓங்குதற்பொருட்டுப் பெரிதும் பாடுபட்டனர். குப்த அரசர்களில் சந்திரகுப்தர், சமுத்திரகுப்தர், சந்திரகுப்த விக்கிரமாதித்யர் முதலியவர்களைச் சிறந்தவர்களாகக் கருதவேண்டும். குப்தருடைய ஆட்சிக் காலம் கல்விகளிலும், கலைகளிலும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. உலகப்பிரசித்தி பெற்ற ஸம்ஸ்கிருத மஹா கவி காளிதாசர் இக்காலத்தில் இருந்தவராவர்.

ஸ்ரீ ஹர்ஷர்

குப்த ஸாம்ராஜ்யம் அழிவுற்றதின் காரணம் அன்னியர்களான ஹூணர்கள் வட இந்தியாவில் பரவி, குழப்பத்தை உண்டுபண்ணியதேயாகும். ஆயினும் சிறிது காலத்தில் ஹர்ஷர் என்ற வீரர் தோன்றி ஹூணர்களை எதிர்த்தது மல்லாமல் கன்னோசியைத் தலைநகராக்கிக்கொண்டு ஒரு பெரிய ஸாம்ராஜ்யத்தையும் ஏற்படுத்திக்கொண்டார். ஹர்ஷர் பௌத்தமதத்தைப் பின்பற்றியபோதிலும், இக்காலத்தில் ஹிந்து மதமே செழித்து ஓங்கிற்று. ஹர்ஷர் ஸம்ஸ்கிருதத்தில் புலமை வாய்ந்தவர்; ஸம்ஸ்கிருதத்தில் புலமைவாய்ந்த பாணர்போன்ற கல்விமான்களையும் ஆதரித்தார். ஹர்ஷர் இறந்தபிறகு அவர் ஏற்படுத்திய ஸாம்ராஜ்யமும் அழிந்தது.

ராஜபுத்ரர்கள்

இதற்குப் பிறகு வட இந்தியாவில் ராஜபுத்ரர்கள் சிறு ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொண்டு ஆட்சி செலுத்தி வந்தனர். ராஜபுத்ர ராஜ்யங்களில் டில்லியிலும், கன்னோசியிலும் ஏற்பட்டவைகள், சரித்திரப்பிரசித்தி அடைந்துள்ளன. டில்லியில் ஆண்ட அரசர்களில் பிரதிவிராஜனும், கன்னோசியில் ஆண்டுவந்த ஜயசந்திரனும் சிறந்து விளங்கினர். ராஜபுத்ரர்களுக்கிடையே, ஒற்றுமை இல்லாமல்போகவே, அன்னியர்களான முகம்மதியர்கள் இந்தியாவில் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்திக்கொள்ள முடிந்தது.

தென்னிந்தியாவின் மேன்மை

இக்காலங்களில் வட இந்தியா சிறந்திருந்ததுபோல் தென்னிந்தியாவும் சிறந்திருந்தது. தென்னிந்தியாவில்

ஆண்ட அரசவமிசத்தினிரில், ஆந்திரர்கள், சேரர், சோழர், பாண்டியர், பல்லவர், சாளுக்கியர், ராஷ்டிரகூடர் முதலிய வர்கள் முக்கியமானவர்கள். பல்லவர் காலத்தில்தான் முதன் முதலில் கருங்கல் கட்டடங்கள் கட்ட ஆரம்பிக்கப் பட்டன. பல்லவர்களுக்குப் பின் மறுபடியும் பிரபல மடைந்த சோழர்காலத்திலும், பாண்டியர்கள் காலத்தி லும், தென்னிந்தியாவிலும் பல அழகிய கட்டடங்கள் கட் டப் பட்டன.

முகம்மதியர்கள் வருகை

முன்னமேயே, முகம்மதியர்கள் இந்தியாவில், ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டனர் என்று பிரஸ்தா பித்துள்ளோம். இவ்வாறு ஏற்பட்ட முகம்மதிய ராஜ்யம் டில்லியைத் தலைநகராகக்கொண்டு, பல நூற்றாண்டுகள் இருந்துவந்தது. இந்த ராஜ்யம், வட இந்தியாவில் மாத் திரம் செழித்துத் தென்னிந்தியாவில் ஓங்காத காரணங் களில் விஜயநகர ஸாம்ராஜ்யம் ஏற்பட்டது ஒன்றாகும். ஆயினும் விஜயநகர ஸாம்ராஜ்ய அழிவிற்குப் பிறகு தென் னிந்தியாவிலும் முகம்மதிய ஆட்சி பரவிற்று.

டில்லியில் ஆண்ட சுல்தான்களும், மோகலாய மன்னர்களும்

டில்லியில் முதலில் ஆண்ட முகம்மதிய அரசவமிசத்தி னர்கள் உண்மையான முகம்மதியர்கள் ஆவர். இவர்களில் அடிமை வமிசத்து அரசரான பால்பன் என்பவரும், கில்ஜி வமிசத்து அரசரான அல்லா உதீன் கில்ஜி என்பவரும், துக் ளக் அரசவமிசத்தினரான முகம்மது துக்ளக் என்பவரும் பிரபல மடைந்துள்ளனர். பிறகு ஆண்ட முகம்மதிய அர சர்கள் மங்கோலிய வமிசத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இவர்கள் ஆதியில், எம் மதத்தையும் பின்பற்ருமல் வெகு காலம் கழித்து, முகம்மதிய மதத்தைப் பின்பற்றியதால் புதிய முகம்மதியர் என்றழைக்கப்பட்டனர். இந்த அரசவமிசத்தினரைப் பொதுவாக மொகலாயர்கள் என்று கூறுவதுண்டு. மொகலாயர்களில் பாபரே முதலரசராவர். இவருடைய மகன் ஹுமாயூனின் ஆட்சிக்காலத்தில், ஷெர்ஷா என்பவர் டில்லி ராஜ்யத்தைக் கைப்பற்றி ஹுமாயூனை ராஜ்யத்தை விட்டு ஓடும்படி செய்தார். இதனல் மொகலாய அரசர்களின் ஆட்சி முடிவடைந்து விடும் என்று சந்தேகம ஏற்பட்டபோதிலும், ஹுமாயூன் திரும்பி வந்து, ராஜ்யத்தை அடைந்தார். ஹுமாயூன் மகன் அக்பரே மொகலாய அரசர்களில் சிறந்தவராகக் வதுண்டு, இவர் ஹிந்துக்களையும், முகம்மதியர்களையும் சமமாகப் பாவித்ததனல் இவரை யாவரும் கொண்டாடினர்.


அக்பர்

அக்பருக்குப் பிறகு, ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கஜேப் முதலியவர்கள் ஆண்டனர். ஷாஜஹானுடைய பெயர், அவர் கட்டிய தாஜ்மஹால் என்ற அழகிய கட்டடத்தின்மூலமாக, இன்றும் விளங்குகிறது. ஔரங்கஜேப் காலத்தில் பிரபலமடைந்த சீக்கியர்கள் என்பவர்கள், சிறிது காலத்தில் பஞ்சாபில் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

மஹாராஷ்டிரர்கள்

இக்காலத்தில் தக்ஷிணத்தில் மஹாராஷ்டிரர்கள் தோன்றி, சிவாஜி என்ற வீரரின் தலைமையின்கீழ் முகம்

மதிய ஆட்சியை எங்கும் எதிர்க்கலாயினர். சிவாஜி, தமக்கென ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டு சிறப்புடன் ஆட்சி செலுத்தினர். இவ்வாறு ஏற்பட்ட மஹாராஷ்டிர ராஜ்யம் ஔரங்கஜேப் உயிருடன் இருந்தவரையில் அதிகமாகச் செழிக்காமல் இருந்தபோதிலும், ஔரங்கஜேப் இறந்த பிறகு, செழித்து ஓங்கலாயிற்று. இதைப் பல காலம் சிவாஜியின் சந்ததியாரும், அவர்களுக்குப் பிறகு, முதலில் மந்திரி பதவியை வகித்திருந்தவரான பேஷ்வாக்கள் என்பவரும் ஆண்டனர்.



சிவாஜி

ஆங்கிலேயர் ஓங்குதல்

இக்காலத்திற்குள், ஐரோப்பிய வர்த்தகர்கள் இந்தியாவின் பல பாகங்களிலும் கிடங்குகளை ஏற்படுத்திக்கொண்டு ஒருவரோடொருவர் போட்டியிட்டுக்கொண்டிருந்தனர். இவ்வாறு வந்த ஐரோப்பியர்களில் போர்த்துகீசியர்களும், டச்சுக்காரர்களும், இந்தியாவில் வலுக்கவில்லை. பிரெஞ்சுக்காரர்களில் டூப்ளே என்பவர், பாண்டிச்சேரியில் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது ஓங்கியபோதிலும், பிற்காலத்தில் அவர்களால் ஆங்கிலேயருடன் போட்டியிட முடியவில்லை. தென்னிந்தியாவில் பிரெஞ்சுக்காரர் செல்வாக்கை அழித்தவர் கிளைவ் என்ற ஆங்கில தளகர்த்தராவர். கிளைவ் தென்னிந்தியாவில் ஆங்கிலேயருடைய செல்

வாக்கை அதிகரிக்கச் செய்ததுமல்லாமல், வங்காளத்திலும் ஓங்கச்செய்தார். முதலில் தளகர்த்தராய் இருந்த இவர், தம்முடைய திறமையினுல் வங்காளத்தில் இருமுறை கவர்ன ராக இருந்து, பல சீர்திருத்தங்களையும் செய்து அழியாப் புகழ்பெற்றார். இவருக்குப் பிறகு, வங்காளத்தில் கவர்ன ராக வந்த இருவர்கள் திறமையற்றவர்களாதலின் கம் பெனியார் வாரன்ஹேஸ்டிங்ஸ் என்பவரை வங்காள கவர்னராக நியமித்தனர். வாரன்ஹேஸ்டிங்ஸ் காலத்தி லிருந்து ஆங்கிலேயர்கள் சிறிது சிறிதாக இந்தியாவின் பல பாகங்களையும் ஜயித்துத் தங்களுடைய ஆட்சிக்கு உட் படுத்தினர். இந்த வரலாற்றையே இப்புத்தகத்தில் அறிந்துகொள்வோம்.


2. வாரன் ஹேஸ்டிங்ஸ்

முதல் மைசூர் யுத்தம் — ஹேஸ்டிங்ஸ் வருகை — சீர் திருத்தங்கள் — அன்னிய விவகாரங்களில் தலையிடுதலும் ரெகுலேடிங் ஆக்டும் — முதல் மஹாராஷ்டிர யுத்தம் — இரண்டாவது மைசூர் யுத்தம் — வாரன் ஹேஸ்டிங்ஸின் அக்கிரமம்—பிட் ஏற்படுத்திய இந்திய சட்டம்—விசாரணை யும் விடுதலையும்.

முதல் மைசூர் யுத்தம்

கிளைவ் இந்தியாவை விட்டுப் போனபிறகு, தென்னிந் தியாவிலும் வட இந்தியாவிலும் குழப்பம் ஏற்பட்டது. தென்னிந்தியாவில் **ஹைதர் அலி** என்பவர் தோன்றி ஆங் கிலேயரை எதிர்க்க ஆரம்பித்தார். ஹைதர் அலி மைசூர்

சுல்தானவர். அவரைச் சென்னை அதிகாரிகள் பகைத்துக் கொண்டனர். அவர்களுடன் மஹாராஷ்டிரர்களும் நிஜாமும் சேர்ந்து கொண்டனர். இவர்கள் ஹைதரைச் **சங்கமா, திருவண்ணமலை** முதலிய இடங்களில் எதிர்த்து வென்றனர். ஆயினும் ஹைதர் தம்முடைய செயல்களை நிறுத்தவில்லை. ஒரு சமயம் ஆங்கிலேயரை எதிர்பாராத வண்ணமாய்ச் சென்னையிலேயே எதிர்த்தார். ஆங்கிலேயர் பயந்து சமாதானம் செய்து கொண்டனர். இவ்வாறு ஹைதருக்கும் ஆங்கிலேயருக்கும் ஏற்பட்ட யுத்தத்தை **முதல் மைசூர் யுத்தம்** என்று கூறுவதுண்டு.



வாரன் ஹேஸ்டிங்ஸ

ஹேஸ்டிங்ஸ் வருகை

இதனல் சென்னையிலிருந்த ஆங்கிலேயருக்கு மிகுந்த நஷ்டம் உண்டாயிற்று.

கல்கத்தாவிலோ என்றல் அதிகாரிகளின் அக்கிரமங்கள் சொல்லொணுதவைகளாக இருந்தன. நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு, அதனல் லக்ஷக் கணக்கான ஜனங்கள் தவித்துக் கொண்டிருந்தனர். நல்ல வேளையாக



ஹைதர் அலி

ஆங்கிலேயர், இச்சமயத்தில் அரசாங்க முறையில் தேர்ந்த ஒருவரை வங்காள கவர்னராக நியமித்தார்கள். இவ்வாறு நியமிக்கப்பட்டவர் **வாரன் ஹேஸ்டிங்ஸ்** என்பவராவர்.

சீர்திருத்தங்கள்

வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னராக வந்தபிறகு பல குறைகளை நீக்கினர். பிறகு அரசாங்க முறையை ஒழுங்கு

கர்நாடக மைசூர் யுத்தங்களை விவரிக்கும் படம்



படுத்துவதற்கெனப் பல ஏற்பாடுகளைச் செய்தார். வங்காளத்தைப் பல ஜில்லாக்களாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒரு **கலெக்டரை** நியமித்தார். வரி வசூல் செய்வதையே கலெக்டருடைய முக்கிய வேலையாக ஆக்கினர்.

நியாயம் வழங்குவதற்கெனக் கல்கத்தாவில் இரண்டு பெரிய நியாய ஸ்தலங்களை ஏற்படுத்தினர்.

அன்னிய விவகாரங்களில் தலையிடுதலும், ரெகுலேடிங் ஆக்டும்

வாரன் ஹேஸ்டிங்ஸிடம் பல நற்குணங்கள் அமையப் பெற்றிருந்தபோதிலும், அவரிடம் ஒரு குறையும் இருந்தது. அது, அவர் பல அன்னிய அரசாங்கங்களின் விவகாரங்களில் அனுவசியமாகத் தலையிட்டதேயாகும். முதலில் இவர் அயோத்தி நவாபுடன் சேர்ந்து அவருக்கு அடிக்கடித் தொந்தரவையளித்த **ரோகில்லர்கள்** என்பவர்களை அடக்கினர். ரோகில்லர்கள் ரோஹில் கண்டு என்ற நாட்டைச் சேர்ந்த பட்டாணி வீரர்கள் ஆவர். ரோகில்லர்களை அடக்குவதற்கு வாரன் ஹேஸ்டிங்ஸ் தமக்கு உதவிபுரிந்ததற்காக அயோத்தி நவாப் வாரன் ஹேஸ்டிங்ஸுக்கு ஐம்பது லக்ஷ ரூபாய் அளித்தார்.

ஆங்கிலேய வர்த்தக கம்பெனியார் இந்திய சமஸ்தானங்களின் விவகாரங்களில் அதிகமாகத் தலையிடுகிறார்கள் என்பதைக் கேள்வியுற்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கம்பெனியின் ஆட்சியை ஒழுங்குபடுத்துவதற்கென ஒரு சட்டத்தை ஏற்படுத்தினர். இதற்கு **ரெகுலேடிங் ஆக்ட்** என்று பெயர். இதன் பிரகாரம் வங்காள கவர்னர், வங்காள கவர்னர் ஜெனரல் என்று வழங்கலானார். கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூறுவதற்கென நான்கு அங்கத்தினர்கள் அடங்கிய ஒரு ஆலோசனை சபை ஏற்படுத்தப்பட்டது. மற்ற இரண்டு ராஜதானிகளாகிய பம்பாய், மதராஸ் முதலியவற்றின் கவர்னர்கள் வங்காள கவர்னர் ஜெனரல் அதிகாரத்துக்கு உட்படவேண்டும் என்று ஏற்படுத்தப்பட்டது. மேலும், கம்பெனியார் அனுவசியமாகப் பிற

விவகாரங்களில் தலையிடுதல் கூடாது என்பதும் இதனால் வற்புறுத்தப்பட்டது. வழக்குகளை விசாரித்து நியாயம் அளிப்பதற்கென இரண்டு நியாய ஸ்தலங்களும் ஏற்படுத்தப்பட்டன.

முதல் மஹாராஷ்டிர யுத்தம்

ரெகுலேடிங் ஆக்ட் அன்னிய விவகாரங்களில் ஆங்கிலேயர் தலையிடுவதைக் கண்டித்தபோதிலுங்கூட, பம்பாய் அரசாங்கத்தார் மஹாராஷ்டிரருடைய விவகாரங்களில் தலையிட்டனர். **ரகுநாத ராவ்** என்ற மஹாராஷ்டிரபேஷ்வா தமது ராஜ்யத்தை இழந்து அதைத் திரும்பவும் பெறுவதற்கென ஆங்கிலேயருடைய உதவியை நாடினர். ஆங்கிலேயர்களும் அவருக்கு உதவி புரிவதாக வாக்களித்தனர். இதன் பிறகுதான் மஹாராஷ்டிர தேசத்தில் யுத்தம் ஏற்பட்டது. இதில் பம்பாய் அதிகாரிகள் கலந்துகொண்டனர். வாரன் ஹேஸ்டிங்ஸுக்கு இதில் கலக்க இஷ்டமில்லை என்றாலும், பம்பாய் கவர்மெண்டாரைக் காட்டிக்கொடுக்க இஷ்டமில்லாதவராய் ஒரு பெரும் சைனியத்தை அனுப்பி உதவினர். முடிவில் **ஸால்பய்** என்னும் இடத்தில் சமாதானம் ஏற்பட்டது. இதனால் ஆங்கிலேயருக்கு **ஸால்ஸெட்** என்ற பிரதேசம் கிடைத்தது. ரகுநாத ராவுக்கு ராஜ்யம் கிடைக்காமற் போய்விட்டபோதிலும் மஹாராஷ்டிர அரசாங்கத்தார் அவருக்கு மாதம் 25,000 ரூபாய் கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர். இவ்வாறு **முதல் மஹாராஷ்டிர யுத்தம்** முடிவு பெற்றது.

இரண்டாவது மைசூர் யுத்தம்

தென்னிந்தியாவில் ஹைதர் அலி ஆங்கிலேயரை எதிர்க்கத் தக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்.

ஒருசமயம் சென்னைக்குத் தெற்கேயுள்ள சில நகரங்களில் புகுந்து அவர் அவற்றை இரக்கமின்றி அழித்தார். மேலும் அவர் **பேரம்பாக்கம்** என்னும் ஊரில் ஒரு ஆங்கிலேயப் படையை எதிர்த்து அதைச் சின்ன பின்னப் படுத்தினர். இவற்றையெல்லாம் கேள்வியுற்ற வாரன் ஹேஸ்டிங்ஸ், ஸர் ஐர் கூட்டை ஒரு படையுடன் தென்னிந்தியாவுக்கு அனுப்பினர். ஐர் கூட், ஹைதர் அலியைப் **பரங்கிப் பேட்டை, சோளிங்கபுரம்** முதலிய இடங்களில் எதிர்த்துத் தோற்கடித்துத் துரத்தினர். ஆயினும் இதற்குப் பிறகும் ஹைதர் அலியும், அவருடைய மகனான திப்புவும் ஆங்கிலேயருக்குத் தொல்லைகளை அளித்து வந்தனர். சிலகாலத்தில் ஹைதர் இறந்து விட்டார். **திப்பு** மைசூர் சுல்தானாக ஆனார்.



திப்பு சுல்தான்

ஆங்கிலேயர் மறுபடியும் ஒருசைனியத்தை மைசூருக்கு அனுப்பினார்கள். சிறிதுகாலம் யுத்தம் நடந்தபின் திப்பு ஆங்கிலேயருடன் சமாதானம் செய்து கொண்டார். இதற்கு மங்களூர் உடன்படிக்கை என்று பெயர். இத்துடன் **இரண்டாவது மைசூர் யுத்தம்** முடிவடைந்தது.

வாரன் ஹேஸ்டிங்ஸின் அக்கிரமம்

வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக இருந்த போது கம்பெனிக்கு மிகுந்த பொருளைத்தேடி வைத்தார். ஆனால் அவர் இதற்காக அக்கிரமமாக நடந்துகொண்டார். இவர், காசி அரசரான **சேயித் சிங்கை** ஒரு காரணமுமின்றி எதிர்த்து அவரை ராஜ்யத்தினின்றும் நீக்கித் தமக்கு

வேண்டியவரும், காசியரசரின் உறவினருமான ஒருவரை அரசராக நியமித்தார். அவரிடமிருந்து மிகுந்த பொருளை அடைந்து திரும்பினர். இது போலவே அயோத்தி நவாபி னுடைய தாயாரையும் பாட்டியாரையும் துன்புறுத்தி மிகுந்த பொருளை அடைந்தார்.

பிட் ஏற்படுத்திய இந்திய சட்டம்

ரெகுலேடிங் ஆக்ட் என்ற சட்டம் கம்பெனியி லிருந்த பல குறைகளை நீக்கிற்று. ஆயினும் இதிலிருந்த சில ஷரத்துக்கள் நன்கு விளங்கவில்லை. ஆகவே பல சந் தேகங்கள் எழுந்தன; பல சச்சரவுகள் ஏற்பட்டன. இந்தச் சட்டம் ஏற்பட்டுப் பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு, அதாவது. 1784-ம் வருஷம் இதிலிருந்த குறை பாடுகளை நீக்குவதற்கென மற்றொரு சட்டம் ஏற் பட்டது. அதற்குப் **பிட் என்பவருடைய இந்தியா சட்டம்** என்று பெயர். இங்கிலாந்தில் பிட் என்பவரே இந்தச் சட்டம் எற்படுத்துவதற்குப் பாடுபட்டபடியால் இதற்கு இப் பெயர் கிடைத்தது. இதில் கவர்னர் ஜெனரலுடைய அதிகாரம் இன்னதென்பதென்று விளக்கப்பட்டது. கவர்னர் ஜெனரலுடைய ஆலோசனை சபைக்கு மூன்று அங்கத்தினர்களே போதுமானது என இதனல் ஏற் பட்டது. இவ்வாறு ஏற்பட்டதனல் கவர்னர் ஜெனர லுக்கும் அவருடைய அங்கத்தினர்களுக்கும் இடையே அதிக மனஸ்தாபங்கள் ஏற்படாமல் இருந்தன. ஏனெனில் நான்கு அங்கத்தினர்கள் இருந்தகாலத்தில், அங்கத்தின ரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபடியால், கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் இல்லாமல் போயிற்று. இப்போது அக்குறை நீங்கியது. இந்தச் சட்டமும், ஆங்கி

லேய கம்பெனியார், அனுவசியமான விவகாரங்களில் தலையிடுவதைத் தடுத்தது. ஆனல் இவற்றையெல்லாம் விட முக்கியமான அம்சம் ஒன்று இருந்தது. அதாவது கம்பெனி விஷயங்களைக் கவனிப்பதற்கும், கம்பெனியார் அனுவசியமான விவகாரங்களில் தலையிடாமல் இருக்கிறார்களா என்பதைப் பார்ப்பதற்குமென இங்கிலாந்தில் ஒரு சபை ஏற்பட்டது. இது ஆறு பார்லிமென்டு அங்கத்தினர் அடங்கியது. இந்தச் சபையை, ஆங்கிலத்தில் **போர்டு அப் கன்ட்ரோல்** என்று வழங்குவதுண்டு. முதன் முதலாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியாவிலிருந்த கம்பெனி விவகாரங்களைக் கவனிக்க ஆரம்பித்தது இக்காலத்திலே தான்.

விசாரணையும் விடுதலையும்

1784-வருஷம் வாரன் ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்துக்குத் திரும்பினர். இதற்குள் இவர் செய்த கொடிய காரியங்களின் விவரம் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்குத் தெரிந்திருந்தது. ஆகவே, அரசாங்கத்தார் இவரைத் தண்டிப்பதற்கென ஒரு பெரிய விசாரணை நடத்தினர்கள். அதிர்ஷ்டவசமாக இவர் தண்டிக்கப்படாமல் விடுதலை அடைந்தார். இவர் செய்த தவறுகளுக்காக இவரைச் சில ஆங்கிலேயர்கள் வெறுத்தபோதிலும், இவர் இந்தியாவில் செய்த பல நன்மைகளைக் குறித்துப் பலர் இவரை மிகவும் பாராட்டினர்.

முக்கிய வருஷங்கள்

கி. பி.	1772—1774.	வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னராக இருந்த காலம்.
,,	1773.	ரெகுலேடிங் ஆக்ட்.
,,	1773—1774.	ரோகில்லருடன் சச்சரவு.

கி. பி.	1774—1785.	வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னர் ஜெனரலாக இருந்த காலம்.
,,	1775.	முதல் மஹாராஷ்டிர யுத்தம்.
,,	1778.	செயித்சிங் விவகாரங்களில் தலையிடுதல்.
,,	1780—1784.	இரண்டாம் மைசூர் யுத்தம்.
,,	1782.	ஸால்பய் உடன் படிக்கை.
,,	1784.	மங்களூர் உடன் படிக்கை.
,,	1784.	பிட் இந்திய சட்டம்.

3. காரன்வாலிஸ்

சாசுவத நில வருமான ஏற்பாடு — இந்த ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணங்கள் — ஏற்பாட்டின் முக்கிய அம்சங்கள் — ஏற்பாட்டின் நன்மை தீமைகள் — சீர்திருத்தங்கள் — மூன்றாவது மைசூர் யுத்தம்.

சாசுவத நிலவருமான ஏற்பாடு

வாரன் ஹேஸ்டிங்ஸுக்குப் பிறகு காரன்வாலிஸ் என்பவர் வங்காளத்தின் கவர்னர் ஜெனரல் ஆனார். அவர் இந்தியாவுக்கு வந்த பிறகு, அரசாங்கத்தில் சீர்திருத்தங்கள் அவசியமாயிருப்பதைக் கண்டார். எல்லாவற்றையும் விட நில வருமான ஏற்பாடு தகுந்த முறையில் இல்லாததைக் கண்டு, அதைத் தாம் சீர்திருத்த எண்ணங் கொண்டார். காரன்வாலிஸ் செய்த



காரன்வாலிஸ் பிரபு

சீர்திருத்தங்களில் அவருடைய நிலவருமான ஏற்பாடுகள் முக்கியமானதாகும்.

இந்த ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணங்கள்

இந்த ஏற்பாட்டை அவர் செய்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. நிலவரிப்பணம் அதிகமாய் வசூல் செய்யப்படாமல் இருந்து வந்தது. நிலவரி வசூல் செய்வதற்கென ஏற்பட்டிருந்த ஜமீன்தார்கள் ஊக்கம் காட்டவில்லை. வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதாவது, நிலங்களைப் பலபாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தின் வரிவசூலையும், எவர் ஐந்து வருஷ காலத்தில் அதிகவரி வசூல்செய்து கொடுப்பதாகச் சொல்லுகிறாரோ அவரிடம் ஒப்புவித்தார். ஆனால் இம்முறை கம்பெனியாருக்கு அதிக நஷ்டத்தை விளைவித்தது. ஏனெனில், அவ்வாறு வரிவசூல் செய்ய ஒப்புக் கொண்டவர்கள் முதலில் ஊக்கம் காட்டினார்களே ஒழிய, முழுப் பணத்தையும் வசூல் செய்யவில்லை. மேற்கூறிய காரணங்களைக்கொண்டுதான் காரன்வாலிஸ் 1793-ம் வருஷம் இப் புதிய ஏற்பாட்டைச் செய்தார்.

ஏற்பாட்டின் முக்கிய அம்சங்கள்

இப்புதிய ஏற்பாட்டின் பிரகாரம் காரன்வாலிஸ் நில வரியைச் சாசுவதமாகச் செய்தார். நிலங்களை ரகவாரியாகப் பிரித்து ஒவ்வொரு ரக நிலத்திலும் எவ்வளவு கிடைத்தால் போதும் என்பதை ஏற்படுத்தினார். ஒவ்வொரு ரக நிலத்திற்கும் எவ்வளவு குறைந்த வரியை விதிக்கலாமோ அவ்வளவு குறைந்த வரியையே விதித்தார். நிலவரி வசூல் செய்யும் பொறுப்பு ஜமீன்தார்களிடம் ஒப்புவிக்கப்பட்டது. இந்த

ஏற்பாட்டைச் சாசுவத நிலவருமான ஏற்பாடு என்று வழங்குவது உண்டு.

இந்த ஏற்பாடு இன்னும் வங்காளத்தில் அமுலில் இருக்கிறது. மற்ற மாகாணங்களிலுள்ள நிலவரி ஏற்பாடுகளோ வேறுவிதமானவை. சென்னை மாகாணத்திலுள்ள ஏற்பாட்டிற்கு ரயத்வாரி ஏற்பாடு என்று பெயர். கவர்மென்டார் ரயத்துகளிடம் (அல்லது குடியானவர்களிடம்) ஜமீன்தார் மூலம் அல்லாமல் நேரான சம்பந்தம் வைத்திருப்பதால் இந்த ஏற்பாட்டிற்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கிறது. மேலும் நிலவரி அடிக்கடி மாறிவருகிறது.

ஏற்பாட்டின் நன்மை தீமைகள்

காரன்வாலிஸ் செய்த ஏற்பாடு பலவிதங்களிலும் நன்மையளித்தது. நிலவரியைக் குறைத்துச் சாசுவதமாக ஆக்கியதால் விவசாயம் அபிவிருத்தி யடைவதற்கு அனுகூலமாயிருந்தது. அரசாங்கத்தினருக்கு நிலவரி விஷயமாக அதிக சிரமம் ஏற்படவில்லை. குறித்த காலத்தில் ஜமீன்தார்கள் வரியை வசூல்செய்து அனுப்பிக்கொண்டிருந்தனர். ஆனால், இந்த ஏற்பாட்டினால் பல தீமைகளும் விளைந்தன. ஜமீன்தார்கள் குடிகளை அக்கிரமமாக நடத்த ஆரம்பித்தனர். தங்களைப் பணக்காரர்களாக ஆக்கிக்கொண்டு குடிகளை ஏழைகளாக்கினார்கள். மேலும் சாசுவதமாக நிலவரியை ஏற்படுத்தி விட்டதனால், அரசாங்கத்தாருக்கு அதிக பண உதவி வேண்டும்போது நிலவரியை உயர்த்த முடியவில்லை. இவ்வாறு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுபடுத்துவதற்குச் சென்னை, பம்பாய் முதலிய ராஜதானிகளிலிருந்த குடிகளின்மேல் அதிக வரிகளைச் சுமத்தும்படி நேர்ந்தது.

லார்ட் காரன்வாலிஸுக்குப் பிந்திய இந்தியா



ஆயினும் இந்த ஏற்பாட்டினால் நிலவரி வசூல் செய்த கம்பெனி அதிகாரிகளுக்கிடையே இருந்த ஊழல்கள் நீங்கின.

சீர்திருத்தங்கள்

காரன்வாலிஸ் செய்த மற்ற ஏற்பாடுகளில் முக்கிய மானது அவர் பல நீதிஸ்தலங்களை ஏற்படுத்தியதே ஆகும். அவர் போலீஸ் இலாகாவையும் ஒழுங்குபடுத்து அமைத்தார்.

காரன் வாலிஸை இந்தியாவுக்கு அனுப்பும்போது பிரிட்டிஷ் அரசாங்கத்தார், அவரை அனாவசியமான விவகாரங்களில் தலையிடவேண்டாம் என்று எச்சரிக்கை செய்தனுப்பினர். காரன்வாலிஸும் அவ்வாறே இருந்துவிட வேண்டும் என்ற தீர்மானத்துடன் வந்தார். ஆனால், இந்தியாவுக்கு வந்தபிறகு அவர் பல விஷயங்களில் தலையிடும் படியாக நேர்ந்தது. சந்தர்ப்பங்கள் அவரை அவ்வாறு செய்யுமாறு தூண்டின.

மூன்றாவது மைசூர் யுத்தம்

தென்னிந்தியாவில் திப்பு சுல்தானின் அதிகாரம் நாளுக்குநாள் வலுவடைந்துகொண்டே வந்தது. அவர் பிரெஞ்சுக்காரருடன் நேசம் பாராட்டி அவர்களுடைய உதவியைப்பெற்று ஆங்கிலேயர்களைத் தொலைத்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடனிருந்தார். மேலும் கம்பெனியாரின் நண்பரான திருவாங்கூர் மகாராஜாவைப் பலவிதங்களிலும் துன்புறுத்தினார். ஆகவே காரன்வாலிஸ் திப்புவை எதிர்ப்பது எனத் தீர்மானித்தார். இவ்வாறு **மூன்றாவது மைசூர் யுத்தம்** ஏற்பட்டது. காரன்

வாலிஸே நேராக வந்து திப்புவை எதிர்த்தார். முடிவில் திப்பு தோல்வியுற்றார். பிறகு ஆங்கிலேயரும் அவருக்கு உதவிபுரிந்த நிஜாம் மன்னரும் திப்புவின் ராஜ்யத்தில் பாதியை அபகரித்துத் தமக்குள் பங்கு போட்டுக்கொண்டனர். (ஆங்கிலேயர்கள் மலையாளத்தில் பல நாடுகளையும், மதுரை, திண்டுக்கல், சேலம் முதலிய இடங்களையும் எடுத்துக்கொண்டனர். நிஜாம், கடப்பை முதலிய நாடுகளைப் பெற்றுக்கொண்டார். இதற்குப் பிறகு திப்புவின் அதிகாரம் ஓங்கவேயில்லை.)

முக்கிய வருஷங்கள்

கி. பி.	1786—1793.	காரன்வாலிஸ் கவர்னர் ஜெனரலாக இருந்த காலம்.
,,	1790—1792.	மூன்றுவது மைசூர் யுத்தம்.
,,	1793.	சாசுவத நில வருமான ஏற்பாடு.

4. ஸர் ஜான் ஷோர்

ஸர் ஜான் ஷோர் காலத்தில் மஹாராஷ்டிரர் நிலை—அயோத்தி விவகாரங்களில் தலையிடுதல்—குடிகளின் அன்னை அகல்யாபாய்.

ஸர் ஜான் ஷோர் காலத்தில் மஹாராஷ்டிரர் நிலை

ஸர் ஜான் ஷோர், கம்பெனி விவகாரங்களில் ஏற்கெனவே அதிக அனுபவம் பெற்றிருந்தார். அவர், காரன் வாலிஸுக்கு, நிலவரி ஏற்பாடு விஷயமாகப் பெரிதும் உதவிபுரிந்தார்.

இவர் காரன்வாலிஸுக்குப் பிறகு கவர்னர் ஜெனரலாக வந்தவுடன், பல விஷயங்களைக் கவனிக்க நேர்ந்தது. காரன்வாலிஸைப் போலவே இவரும் பிறர் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற நோக்கத்துடனே தான் பதவியேற்றார். ஆனால், இவர் அவ்வாறு இருக்கச் சந்தர்ப்பங்கள் அனுமதிக்கவில்லை. ஸர் ஜான் ஷோருடைய காலத்தில் மஹாராஷ்டிரருடைய அதிகாரம் ஓங்கலாயிற்று. குவாலியரில் **மாகாதஜி ஸிந்தியா** என்பவர் செல்வாக்கிலும் பலத்திலும் சிறந்த மஹாராஷ்டிர அரசராக விளங்கினர். இவர் பல பிரெஞ்சுக்காரர்களைத் தம் ராஜ்யத்தில் அதிகாரிகளாக நியமித்து, வட இந்தியாவில் பல நாடுகளைக் கைப்பற்ற முயன்றார். இது பூனா அரசாங்கத்தின் மந்திரியான **நானா பத்னவிஸுக்கு** அச்சத்தை விளைவித்தது. ஆயினும் ஸிந்தியாவினால் நானா பத்னவிஸுக்கு ஒருவித கெடுதியும் நேரவில்லை; நன்மையே விளைந்தது. ஸிந்தியா, பேஷ்வாவை மொகலாய அரசரின் பிரதிநிதி என்று மொகலாய அரசரான ஷா ஆலத்தை ஒப்புக் கொள்ளும்படி செய்தார். இதன் பிறகு அவர் தம்மைப் பேஷ்வாவின் பிரதிநிதி என்று அழைத்துக் கொண்டார். இதன் பிறகு மஹாராஷ்டிரர்கள், மாகாதஜி ஸிந்தியாவின் தலைமையின் கீழ் ஒன்று சேர்ந்து நைஜாமைத் தாக்கினர். நைஜாம் ஆங்கிலேயரின் உதவியை நாடி நின்றார். ஸர் ஜான் ஷோர் இவ்விவகாரங்களில் தலையிட இஷ்டமில்லாதவராய், தனித்து


நானா பத்னவிஸ்

நின்றுவிட்டார். ஆகவே ஆங்கிலேயர்களிடமிருந்து நைஜாமுக்கு அதிக உதவி கிடைக்கவில்லை.

அயோத்தி விவகாரங்களில் தலையிடுதல்

ஆயினும், ஸர் ஜான் ஷோர் அயோத்தி விவகாரங்களில் தலையிட்டார். இதுகாறும் அயோத்தியின் நவாபாக இருந்த **அஸப் உத் தௌலா** இறந்துவிடவே, அவருக்குப் பின் **வஸீர் அலி** என்ற **மீர்ஸா** அலி நவாபாக ஆனார். மீர்ஸா அலி, அஸப் உத் தௌலாவின் மகன் என்று யாவரும் எண்ணியிருந்தனர். ஷோரும் அவ்வாறே நினைத்திருந்தார். ஆனால் சிறிதுகாலத்தில், மீர்ஸா அலி, அஸப் உத் தௌலாவின் பட்டமகிஷியின் புத்திரர் அல்லர் என்ற வதந்தி கிளம்பவே ஷோர், மீர்ஸா அலியைப் பட்டத்திலிருந்து நீக்கி அஸப் உத் தௌலாவின் ஸகோதரரான **ஸாதத் அலி கான்** என்பவரை அயோத்தியின் நவாபாக முடிசூட்டினர். ஸாதத் அலியும், ஷோருடைய உதவியைப் பெரிதும் பாராட்டி, ஆங்கிலேயருக்கு அலகாபாத்தைக் கொடுத்தார்.

குடிகளின் அன்னை அகல்யாபாய்

ஸர் ஜான் ஷோர் காலத்தில், பல ராஜ்யங்கள் செழித்தபோதிலும், **இந்தூர்** ராஜ்யமே சிறந்து விளங்கிற்று. இதற்குக் காரணம் அதனை ஆண்ட **அகல்யாபாய்** என்ற ராணி மிகவும் திறமை வாய்ந்திருந்ததே யாகும். அக்காலத்தில் மஹாராஷ்டிரர்களுக்கு இடையே பல சச்சரவுகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்றிலும் தலையிடாமல் தம் குடிகளின் நன்மைக்காகவே பாடுபட்டது அகல்யாபாயின் மேன்மையை விளக்கும். அகல்யாபாய்க்கு உதவியாக **துகாஜி** என்ற அவருடைய சேனைத் தலைவர்

இருந்து வந்தார். அகல்யாபாயின் காலத்தில் அதுவரை யிலும் சிறிய கிராமமா யிருந்த இந்தூர் பெரிய நகரமாக ஆக்கப்பட்டது. அவர் குடிகளிடம் மிகவும் அன்பாக இருந்து வந்தார். பக்ஷிகளும் மிருகங்களும் கூட அவ ருடைய பிரியத்திற்குப் பாத்திரமாக இருந்தனவாம்.

அகல்யாபாய் சகல சாஸ்திரங்களையும் நன்ருகக் கற்றிருந்தார். அவருடைய திறமையையும் குடிகளிடம் வைத்திருந்த அன்பையும் நோக்கிய யாவரும் அவரைத் தேவியின் அவதாரம் என்றே கருதினர்.

முக்கிய வருஷங்கள்

கி. பி.	1793—1798.	ஸர் ஜான் ஷோர் கவர்னர் ஜெனர லாக இருந்த காலம்.
,,	1794.	நாஞ பத்ஞவிஸ் செல்வாக்கில் சிறந்து விளங்குதல்.

5. வெல்லெஸ்லி பிரபு

நைஜாம் மன்னருடன் வெல்லெஸ்லி செய்து கொண்ட ஒப்பந்தம்—திப்புவின் தோல்வி—சுதேச மன்னர்களுடன் ஒப்பந்தம் — ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்ட மன்னர்கள்— இரண்டாம் மஹாராஷ்டிர யுத்தம் — யுத்தத்தின் முக்கிய சம்பவங்கள் — பிரிட்டிஷ் அரசாங்கம் முதன் முதல் ஸ்தா பிக்கப் படுதல்.

நைஜாம் மன்னருடன் வெல்லெஸ்லி செய்து கொண்ட ஒப்பந்தம்

ஸர் ஜான் ஷோருக்குப் பிறகு வெல்லெஸ்லி பிரபு கவர்னர் ஜெனரல் ஆனர்.

வெல்லெஸ்லி எட்டு வருஷ காலம் பதவியை வகித்தார். இவர் காலத்தில் ஆங்கிலேய அதிகாரம் வலுத்ததுமல்லாமல் அவர்களுடைய ஆட்சி இந்தியாவில் ஸ்திரப்பட்டது. இவர் காலத்துக்குள் பிரெஞ்சுக்காரருடைய எதிர்ப்பு அடியோடு அழிந்து விட்டது. ஆங்கிலேயர்களே இந்தியாவின் பெரும் பாகத்திற்கும் எஜமானர்கள் ஆனார்கள்.



வெல்லெஸ்லி பிரபு

ஆயினும் வெல்லெஸ்லிக்குக் கஷ்டங்கள் ஏற்படாமலில்லை. திப்பு சுல்தான் பிரெஞ்சுக்காரருடன் சேர்ந்துகொண்டு பல சூழ்ச்சிகளைச்செய்து கொண்டிருந்தார். வெல்லெஸ்லி திப்புவை அடக்குவதென எண்ணி, நைஜாமுடைய உதவியை நாடி அவருடன் ஒரு ஏற்பாட்டைச் செய்து கொண்டார். இதன்படி நைஜாம் மன்னர் ஆங்கிலேயருக்கே உதவி புரிவதென்றும் ஆங்கிலேயரிடம் பயிற்சி பெற்ற ஒரு சைனியத்தைத் தம் செலவில் வைத்துக் கொள்வதென்றும் ஏற்பாடாயிற்று.

திப்புவின் தோல்வி

இதன் பிறகு வெல்லெஸ்லி தம்முடைய சகோதரரை அனுப்பித் திப்புவை அடக்கி வருமாறு ஏவினார். ஆங்கிலேய சைனியமும் திப்புவைப் பல யுத்தங்களில் வென்றது. திப்புவும் தோல்வியுற்று யுத்தத்தில் மடிந்தார். திப்பு இறந்தபிறகு வெல்லெஸ்லி மைசூர் ராஜ்யத்தை ஹைதர்

காலத்துக்கு முன்பு ஆண்ட ஹிந்து அரசவமிசத்தினரின் சந்ததியாரிடம் திரும்பவும் கொடுத்தார். இந்த யுத்தத்தினுல் ஆங்கிலேயருக்கும் நைஜாமுக்கும் அதிகலாபம் கிடைத்தது.

ஆங்கிலேயர்களுக்குக் கன்னடப் பிரதேசம் முழுதும் கிடைத்தது. நைஜாமுக்கு வடகிழக்குப்பாகத்தில் சில பிரதேசங்கள் கிடைத்தன. ஆனுல் நைஜாம், சிறிது காலத்தில் ஆங்கிலேயருக்குத் தாம் கொடுக்கவேண்டிய ஒப்பந்தத் தொகைக்குப் பதிலாகத் தாம் அவர்களிடமிருந்து பெற்ற நாடுகளேத் திருப்பிக் கொடுத்துவிட்டார். அந்நாடுகளுக்கு, திருப்பிக் கொடுக்கப்பட்ட நாடுகள் என்ற பெயரும் ஏற்பட்டு விட்டது. அது இப்பொழுதும் வழங்கி வருகிறது.

சுதேச மன்னர்களுடன் ஒப்பந்தம்

இவர் நைஜாம் மன்னரிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப்போல் இந்தியாவிலிருந்த மற்ற அரசர்களுடனும் ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, அவர்களேயும் ஆங்கிலேய ஆட்சியின் கீழ்க் கொண்டு வரவேண்டும் என்று எண்ணினுர். இவ்வாறே ஒப்பந்தங்களேயும் செய்து கொண்டார். இவற்றின் முக்கியமான அம்சங்களாவன: ஆங்கில உதவியை நாடிய எந்த ராஜ்யமும், ஆங்கிலேயருக்கு விரோதமான ஒருவரையும் ராஜ்யத்தில் வைத்திருக்கக் கூடாது; ஆங்கிலேயர்களுக்கு விரோதமாகவும் அவர்களுடைய சம்மதமின்றியும் ஒரு ராஜ்யம் மற்ருெரு ராஜ்யத்தோடு எவ்வித ஒப்பந்தமும் செய்து கொள்ளக் கூடாது; அந்த ராஜ்யம் ஆங்கிலேய தளகர்த்தர்களேக் கொண்ட ஒரு சைனியத்தை வைத்துப் பாதுகாக்க வேண்டும். இதற்குப் பதிலாக ஆங்கிலேயர்கள் அந்த ராஜ்யத்திற்கு எவ்வித உதவியும் புரியத் தயாராயிருந்தனர்.

ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்ட மன்னர்கள்

இந்த ஒப்பந்தத்தை இந்தியாவில் பல அரசர்கள் ஒப்புக் கொண்டனர். சில அரசர்கள் தங்கள் ராஜ்யத்தை ஆங்கிலேயரிடம் விட்டுவிட்டு அதற்குப் பதிலாக ஒவ்வொரு வருஷமும் ஒரு தொகையைப் பெற்றனர். உதாரணமாக தஞ்சாவூரை ஆண்ட மஹாராஷ்டிர அரசர், வருஷத்திற்கு ஆறு லக்ஷம் ரூபாய் பெற்றுக் கொள்ளச் சம்மதித்து ராஜ்யத்தை ஆங்கிலேயரிடம் விட்டுவிட்டார். இந்த நிபந்தனைகளை ஒப்புக் கொண்டவர்களில் அயோத்தி நவாபும் ஒருவராவர். இதனால், ஆங்கிலேயருடைய அதிகாரம் மிகவும் ஓங்கலாயிற்று.

இரண்டாம் மஹாராஷ்டிர யுத்தம்

ஆனால் மஹாராஷ்டிரர்கள் இந்த ஒப்பந்தத்தை ஒப்புக் கொள்ள மறுத்தனர். இதனால் வெல்லெஸ்லிக்குக் கோபம் ஏற்பட்டது. எப்படியாவது மஹாராஷ்டிரர்களை ஒப்பந்தத்தை ஒப்புக் கொள்ளச் செய்யவேண்டுமென்று அவர் ஆலோசித்திருந்தார். இக்காலத்தில் ஏற்பட்ட சில சந்தர்ப்பங்கள் அவருக்கு அனுகூலமாக இருந்தன.

நைஜாம் மன்னர் ஆங்கிலேய பாதுகாப்புக்கு உட்படவே மஹாராஷ்டிரர் அவரது ராஜ்யத்தின் மீது படையெடுக்கவோ, அதைக் கொள்ளை யடிக்கவோ முடியாமல் போயிற்று. அவர்கள் இதற்காக என்ன செய்யலாம் என்று ஆலோசித்துக் கொண்டிருக்கும்போது மஹாராஷ்டிர ராஜ்யத்தில் ஒரு சச்சரவு ஏற்பட்டது. நானுபத்னவிஸ் இறந்துவிடவே, அக்காலத்தில் குவாலியரை ஆண்ட **தௌலத் ராவ்** என்பவர் தாமே தலைமை வகிக்க உரிமை யுடையவர் என்று சொல்லிக் கொண்டார். இவ

ருக்குப் போட்டியாக இந்தூரையாண்ட **ஜஸ்வந்தராவ்** என்பவர் தோன்றினர். இவர்களுக் கிடையே ஏற்பட்ட யுத்தத்தினல் பூனவை ஆண்ட **இரண்டாம் பாஜிராவ்** என்ற பேஷ்வா பயந்து ஓடி ஆங்கிலேயரின் உதவியை நாடினர். இரண்டாம் பாஜிராவ் தௌலத்ராவின் கட்சியைச் சேர்ந்தவர். வெல்லெஸ்லி இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் பாஜிராவைத் தம் ஒப்பந்தத்தை ஒப்புக் கொள்ளும்படி செய்தார்.



மஹாராஷ்டிர யுத்தங்களை விளக்கும் படம்

யுத்தத்தின் முக்கிய சம்பவங்கள்

இவ்வாறு பாஜிராவ் ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டது மஹாராஷ்டிரர்களுக்கு அவமானத்தை விளைவித்தது. ஆகவே மஹாராஷ்டிர அரசர்களான ஸிந்தியா, பான்ஸ்லே முதலியவர்கள் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயரை வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் எதிர்த்தனர். ஆங்கிலேயர்கள் மஹாராஷ்டிர சைனியங்களை, **அஸ்ஸாய்**, **அலிகார்**, **லஸ்வாரி** முதலிய இடங்களில் தோற்கடித்து, வட இந்தியாவில் டில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றினர்கள்.

லார்ட் வெல்லெஸ்லிக்குப் பிந்திய இந்தியா




குஜராத்தில் ஆங்கிலேயர் **புரோச்** என்ற நாட்டையும், ஒரிஸ்ஸாவில் **கட்டக்** என்ற நாட்டையும் கைப்பற்றினர். தங்களுடைய முயற்சி பலியாமற் போகவே, மஹாராஷ்டிர அரசர்கள் தனித்தனியே ஆங்கிலேயரோடு சமாதான ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர். இவற்றில் **அன்ஜெங்கான் ஒப்பந்தம்** முக்கியமானது. இதனால் ஆங்கிலேயருக்கு யமுனை நதிக்கு வடக்கே யுள்ள பிரதேசங்கள் கிடைத்தன. இதன் பிறகு, மஹாராஷ்டிரர்களுடைய பாதுகாப்பிலிருந்த மொகலாய மன்னர் ஆங்கிலேயருக்குக் கீழ்ப்படியும்படி ஆயிற்று. இந்த யுத்தத்தில் ஆங்கிலேயருக்கு ஒரிஸ்ஸா கிடைத்ததால் சென்னை ராஜதானியையும் கல்கத்தாவையும் இணைப்பது அனுகூலமா யிருந்தது. மஹாராஷ்டிர அரசர்கள் ஆங்கிலேயருக்குக் கீழ்ப்படிந்து ஆட்சி செய்வதாக ஒப்புக் கொள்ளும்படி நேர்ந்தது. இதுவே **இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தத்தின்** முடிவாகும்.

பிரிட்டிஷ் அரசாங்கம் முதன் முதல் ஸ்தாபிக்கப் படுதல்

இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தத்திற்குப் பிறகு வெல்லெஸ்லி சிறிது காலம் கவர்னர் ஜெனரலாக இருந்துவிட்டு, 1806-வருஷம் பதவியிலிருந்து விலகினர். இவர் காலத்திலேதான் பிரிட்டிஷ் அரசாங்கம் முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்டது. ஆங்கிலேயர் இதுவரையில் வியாபாரத்திலே வைத்திருந்த ஊக்கத்தைத் தளர்த்தி, இந்திய ராஜ்யத்தை ஆளுவதில் செலுத்தவாரம்பித்தனர்.

முக்கிய வருஷங்கள்

கி. பி.	1798—1806.	வெல்லெஸ்லி கவர்னர் ஜெனரல்.
,,	1799.	நான்காவது மைசூர் யுத்தம்.
,,	1802—1804.	மஹாராஷ்டிர யுத்தம்.



1795-ம் வருஷத்தில் ஆங்கிலேயருக்கு இருந்த நாடுகளின் எண்ணிக்கை
1805-ம் வருஷம் அதிகரித்ததை விளக்குதல்

6. மின்டோ பிரபு

பிண்டாரிகள் அளித்த தொல்லை—ரஞ்சிட் சிங்கோடு ஒப்பந்தம்—பிரெஞ்சுக்காரரிடம் ஆங்கிலேயருக்கிருந்த பயம்—வேலுதம்பி செய்த கலகம்.

பிண்டாரிகள் அளித்த தொல்லை

வெல்லெஸ்லிக்குப் பிறகு இந்தியாவுக்கு வந்த **மின்டோ** காலத்தில் அரசாங்கத்தாருக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டன. நாட்டில் **பிண்டாரிகள்** என்ற கொள்ளைக் கூட்டத்தார் அதிகரிக்கலாயினர். பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களை எதிர்ப்பார்களோ என்ற பயமும் அக்காலத்தில் இருந்தது. ஆனால் மின்டோ தம் சாமர்த்தியத்தினால் அரசாங்கத்தாருக்கு ஒருவித அபாயமும் நேரிடாமல் பல ஏற்பாடுகளைச் செய்தார்.



மின்டோ

ரஞ்சிட் சிங்கோடு ஒப்பந்தம்

மின்டோ காலத்தில் பஞ்சாபில் ஒரு சீக்கிய அரசர் ஆண்டுவந்தார். அவருடைய பெயர் **ரஞ்சிட்சிங்** என்பதாகும். அக்காலத்தில் ரஞ்சிட்சிங்கே மிகுந்த வீரமும் பராக்கிரமமும் பொருந்தியவராக இருந்தார். அவர்காலத்

தில் ஸட்லிஜ் என்ற நதிக்குக் கிழக்கே இருந்த பிரதேசங்கள் ஆங்கிலேயருக்குச் சொந்தமா யிருந்தன. அவற்றை ரஞ்சிட்சிங் கைப்பற்ற எண்ணினர். இது ஆங்கிலேயருக்குப் பயத்தை அளித்தது. ஆயினும் மின்டோ சண்டையை வெறுத்தார். ரஞ்சிட் சிங்குடன் சமாதானம் செய்வதே மேல் என்று எண்ணினர். இவ்வாறு ரஞ்சிட் சிங்குடைய தலைநகரான அமிருதஸரஸில் ரஞ்சிட் சிங்கோடு நேச ஒப்பந்தம் செய்து கொண்டார். இதற்குப் பிறகு ரஞ்சிட் சிங் ஆங்கிலேயரின் நண்பராகவே இருந்துவந்தார்.



ரஞ்சிட் சிங்

பிரேஞ்சுக்காரரிடம் ஆங்கிலேயருக்கிருந்த பயம்

ஆயினும், ஆங்கிலேயருக்குப் பிரெஞ்சுக்காரரிடமிருந்த பயம் குறையவில்லை. அக்காலத்தில் பிரான்சு தேசத்தில் **நெப்போலியன்** என்ற வீரர் தோன்றி ஆங்கிலேயரை எதிர்த்து வந்தார். நெப்போலியனுக்குப் பிரான்சை உலகத்தில் பெரிய ஸாம்ராஜ்யமாக்க வேண்டும் என்ற ஆசையிருந்தது. அதனல் அவர் இந்தியாவுக்கும் வந்து ஆங்கிலேயரை எதிர்ப்பாரோ என்ற பயம் கம்பெனியாருக்கு இருந்தது. அவர் அப்படி வருவதானல் தரை மார்க்கமாகவே பாரசீகத்தைக் கடந்து, ஆப்கானிஸ்தானம் வழியாக இந்தியாவுக்கு வரலாம் என்று நினைத்தார்.

ஆகவே, ஆங்கிலேயர் பாரஸீக அரசரையும் ஆப்கானிஸ்தான அரசரையும், நெப்போலியனை இந்தியாவுக்கு வரவொட்டாமல் தடுக்குமாறு வேண்டிக்கொண்டனர். அந்த அரசர்களும் அவ்வாறே வாக்களித்தனர். ஆனால் நெப்போலியன் இந்தியாவுக்கு வரவில்லை.

வேலுதம்பி செய்த கலகம்

மின்டோ காலத்தில் சென்னை ராஜதானியில் சில சச்சரவுகள் ஏற்பட்டன. திருவாங்கூரில் மஹாராஜாவுக்கு விரோதமாக அவருடைய திவானாக இருந்த **வேலுதம்பி** என்பவர் கலகம் செய்தார். திருவாங்கூர் அரசர் மின்டோவின் உதவியைப்பெற்று அக்கலகத்தை அடக்கினார்.

கவர்னர் ஜெனரல்களுடைய காலங்களிலெல்லாம் மின்டோவின் காலத்திலேயே இந்தியாவில் எங்கும் சமாதானம் நிலவியது. இது அவருடைய சிறப்பை விளக்கும்.


7. ஹேஸ்டிங்ஸ் பிரபு

நேபாள யுத்தம்—பிண்டாரிகளைத் தொலைத்தல்—மஹாராஷ்டிரரின் விவகாரங்கள்—நாட்டின் அபிவிருத்தி.

நேபாள யுத்தம்

ஹேஸ்டிங்ஸ் மின்டோவைப்போல் சமாதானத்தை விரும்பினார். ஆனால் சமாதானத்தைத் தொலைக்கப் பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அக்காலத்தில் நேபாளத்தில் **கூர்க்கர்கள்** என்ற ராஜபுத்ரர்கள் ஆட்சிசெலுத்தி வந்தனர். கூர்க்க அரசர் மிகுந்த பராக்கிரமும் செல்வாக்கும் பொருந்தியவர். அவரிடம் ஒரு பலத்த சைனியம் இருந்தது. அந்த சைனியத்தின் வீரர்கள் ஆங்கிலேயர்

வசமிருந்த நாடுகளில் புகுந்து சூறையாடினர். ஹேஸ்டிங்ஸ் எவ்வித சமாதான முறையைப் பின்பற்றிய போதிலும், அவர்கள் ஆங்கிலேயர்களுக்குக் கெடுதியை விளைவித்துக்கொண்டே இருந்தனர். ஆகவே ஹேஸ்டிங்ஸ் நேபாள ராஜ்யத்தின்மீது படையெடுக்க வேண்டுமென்று தீர்மானித்தார். அவ்வாறே ஒரு சைனியத்தையும் அனுப்பி வைத்தார். ஆனல் இது தோல்வியுற்றுத் திரும்பியது.



நேபாள யுத்தத்தை விளக்கும் படம்

ஆயினும் மறுபடியும் ஒரு சைனியத்தை அனுப்பினர். இது நேபாள சைனியத்தைத் தோற்கடித்தது. நேபாள அரசரான **அமர்சிங்** என்பவரும் சமாதானத்துக்கு உடன்பட்டார். ஆகவே **சகௌலி** என்ற இடத்தில் ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டது. இதனல் ஆங்கிலேயர்களுக்கு **கர்ஹ்வால், குமான், டரை** முதலிய நாடுகள் கிடைத்தன. இதற்குப் பிறகு கூர்க்கர்களிடமிருந்து ஆங்கிலேயர்களுக்குக் கஷ்டமே ஏற்படவில்லை.

பிண்டாரிகளைத் தோலைத்தல்

ஹேஸ்டிங்ஸ் காலத்தில் பிண்டாரியர் என்ற கொள்ளைக் கூட்டத்தாரின் தொல்லை அதிகரிக்கலாயிற்று. இவர்கள் கொள்ளையடிக்கும் தொழிலைப் பின்பற்றுவதற்கு முன்பு, மஹாராஷ்டிர ராஜ்யத்திலும் மொகலாய ராஜ்யத்திலும் இருந்த சேனையில் சிப்பாய்களாக இருந்தவர்களாவர். அவ்விரு ராஜ்யங்களும் வீழவே, இவர்கள் உத்தியோகத்தினின்றும் விலக்கப்பட்டுக் கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்டனர். இவர்களுடைய தொல்லை மத்திய இந்தியாவில் மிகவும் அதிகமாயிருந்தது. ஹேஸ்டிங்ஸ் ஒரு சைனியத்துடன் சென்று அக்கொள்ளைக் கூட்டத்தாரை அடியோடு அழித்து, நாட்டில் அமைதியை நிலைநிறுத்தினர்.

மஹாராஷ்டிரரின் விவகாரங்கள்

ஹேஸ்டிங்ஸுக்கு மஹாராஷ்டிரரிடமிருந்தும் அதிக தொல்லை ஏற்பட்டது. பேஷ்வாவாக இருந்த பாஜிராவ் என்பவர் தம்முடைய மந்திரியான **திரிம்பக்ஜி** என்பவருடன் கலந்து, பரோடா அரசரின் மந்திரியைக் கொலை செய்தார். கொலை செய்யப்பட்டவர் பூனவில் ஆங்கிலேயருடைய பாதுகாப்பில் இருந்ததால், இச்செய்கை ஆங்கிலேயரின் கோபத்தை மூட்டியது. இதன்பிறகு திரிம்பக்ஜி கைதி செய்யப்பட்டார். பேஷ்வாவையும் பல புதிய நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளும்படி ஆங்கிலேயர் வற்புறுத்தினர். இதனல் பேஷ்வாவுக்குக் கோபம் ஏற்பட்டது. அவர் திடீரென ஆங்கிலேயரை எதிர்த்தார். ஆனல் ஆங்கிலேய தளகர்த்தரான **எல்பின்ஸ்டன்** என்பவர் பேஷ்வாவை **கிர்கீ** என்னுமிடத்தில் தோற்கடித்தார்.

லார்ட் ஹேஸ்டிங்ஸுக்குப் பிந்திய இந்தியா



இதற்குப் பிறகு நாகபுரியிலும் கலகம் ஏற்பட்டது. அப்பா சாகிப் என்ற மஹாராஷ்டிரர் நாகபுரி அரசரைக் கொன்று தம்மையே அரசரென்று அழைத்துக் கொண்டார். ஆங்கிலேயர் அப்பா சாகிபை எதிர்த்து, அவரை நாட்டைவிட்டு ஓடும்படி செய்தனர். தோல்வியுற்ற அப்பா சாகிப் ரஞ்சிட் சிங்கைச் சரணடைந்துவாழ்நாள் முழுவதும் அவருடைய பாதுகாப்பிலேயே இருந்து வந்தார். இதன் பிறகு ஆங்கிலேயர் பேஷ்வா பதவியைத் தொலைத்து பாஜிராவுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தனர். இவ்வாறு மஹாராஷ்டிர ஸாம்ராஜ்யம் அழிந்து அதன் பெரும்பாகம் ஆங்கிலேயருடைய நேர் ஆட்சியின் கீழ் வந்தது.

நாட்டின் அபிவிருத்தி

ஹேஸ்டிங்ஸ் 1823-ம் வருஷம் பதவியினின்றும் விலகினார். இதற்குள் அவர் அரசாங்கத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்து விட்டார். மக்களின் கல்வி அபிவிருத்திக்காகப் பல கல்விச்சாலைகளை ஏற்படுத்தினார். இவர் காலத்தில்தான் சென்னையில் ரயத்வாரி நிலவரி முறை ஏற்பட்டது.

முக்கிய வருஷங்கள்

கி. பி.	1813—1823.	ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக இருந்த காலம்.
,,	1814—1816.	நேபாள யுத்தம்.
,,	1817.	பிண்டாரிகளை அடக்குதல்.
,,	1817—1818.	மஹாராஷ்டிர யுத்தம்.

8. முதல் பர்மிய யுத்தம்

பர்மியர்கள் ஆங்கிலேயருக்குத் துன்பமளித்தல்— பர்மாவில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த நாடுகள்.


பர்மியர்கள் ஆங்கிலேயருக்குத் துன்பமளித்தல்

ஹேஸ்டிங்ஸுக்குப் பிறகு **ஆமர்ஸ்ட் பிரபு** கவர்னர் ஜெனரலாக ஆனார். இவர் காலத்தில் ஆங்கிலேயருக்கும் பர்மியருக்குமிடையே ஒரு யுத்தம் ஏற்பட்டது. இதற்கு முக்கிய காரணம் பர்மியர்கள் ஆங்கிலேய வியாபாரிகளை கொடூரமாக நடத்தியதே ஆகும். மேலும், பர்மாவை ஆண்ட அரசர் வங்காளத்தின் கிழக்குபாகத்தை ஆங்கிலேயர் தமக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று கேட்டார். அதோடு நில்லாமல் வங்காளத்தின் எல்லைப்புறத்தில் இருந்த **மணிபூர், அஸ்ஸாம்** முதலிய நாடுகளைக் கைப்பற்றினார். இவை ஆமர்ஸ்டின் கோபத்தை மூட்டின.

பர்மாவில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த நாடுகள்

ஆமர்ஸ்ட் பிரபு அனுப்புவித்த சைனியம் பர்மாவை அடைந்து பர்மியரைப் பல யுத்தங்களில் வென்றது. பர்மியருக்குச் சொந்தமான **டோனபு, பெகு, புரோம், யாண்டபு** முதலிய பிரதேசங்களை ஆங்கில சைனியம் பிடித்தது. இதன் பிறகு பர்மிய அரசர் ஆங்கிலேயருடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார். இந்த ஒப்பந்தத்தை **யாண்டபு ஒப்பந்தம்** என்று கூறுவது வழக்கம். இதன் பிரகாரம்

ஆங்கிலேயருக்கு அஸ்ஸாம், அராகான், என்ற பிரதேசங்களும் **டெனசரீம்** என்ற பிரதேசத்தின் ஒரு பாகமும்



பர்மிய யுத்தங்களை விளக்குதல்

கிடைத்தன. பர்மிய அரசரும் ஆங்கிலேயருடன் இனிப் பகைமை பாராட்டுவதில்லை என்று வாக்களித்தார்.

முக்கிய வருஷங்கள்


கி.பி. 1823—1828.	ஆமர்ஸ்ட் கவர்னர் ஜெனரலாக இருந்த காலம்.
,, 1824—1826.	முதல் பர்மிய யுத்தம்.
,, 1826.	யாண்டபு உடன்படிக்கை.

9. வில்லியம் பெண்டிங் பிரபு

பொருளாதார சீர்திருத்தம்—ராணுவ சீர்திருத்தம்—சமஸ்தானங்களுடன் உறவு—மைசூரை ஒரு ஆங்கிலேய சபையின் ஆட்சியின்கீழ்க் கொண்டுவருதல்—குடகு ஆங்கில அதிகாரத்திற்கு உட்படுதல்—ராஜீய சமூக சீர்திருத்தங்கள்—சதி என்னும் கொடிய பழக்கத்தை நீக்குதல்—தக்கர்களை வேரறுத்தல்—ஆங்கில துரைத்தனத்தார் ஏற்படுத்திய நிபந்தனைகள்—கல்வி அபிவிருத்தி—பெண்டிங்கின் பெருமை.

பொருளாதார சீர்திருத்தம்

வில்லியம் பெண்டிங் கவர்னர் ஜெனரலாக ஆனதும் அவர் பல விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருந்தது. பர்மா யுத்தத்திற்காகக் கம்பெனியார் மிகுந்த பணத்தைச் செலவழித்து இருந்ததால் கம்பெனி பணமின்றித் தவித்துக் கொண்டிருந்தது. ஆகவே பெண்டிங் முதலில் அரசாங்கத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடித்துச் சில ஏற்பாடுகளைச் செய்தார். அதிகமாகச் சம்பளம் பெற்றுக் கொண்டிருந்த உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைத்தார். சம்பளத்தைத் தவிர சிப்பாய்களுக்குத் தனிச் செலவுக்கெனக் கொடுக்கப்பட்ட பணத்தை நிறுத்தினர். கம்பெனியில்



வில்லியம் பெண்டிங்

அனுவசியமாகச் செலவு ஏற்படாவண்ணம் செய்தார். உபயோகமில்லாமலிருந்த பல நியாயஸ்தலங்களை எடுத்து விட்டார். அதிக சம்பளம் கொடுத்து ஆங்கிலேயர்களை நியமிப்பதை விட்டுப் பொருப்பான பதவிகளுக்கு இந்தியரையே நியமித்தார். இவ்வாறு செய்த ஏற்பாடுகளினுல் கம்பெனிக்குப் பணவிஷயத்தில் ஏற்பட்டிருந்த கஷ்டம் ஒருவாறு நீங்கிற்று.

இவ்வாறு சிக்கனமுறைகளைக் கையாண்டதனுல் உத்தியோகஸ்தர்கள் இவரை வெறுத்தனர். நன்மையை உத்தேசித்தே அவ்வாறு செய்தார் என்று அவர்கள் கருதவில்லை.

ராணுவ சீர்திருத்தம்

வில்லியம் பென்டிங் கவர்னர் ஜெனரல் பதவியுடன், இந்திய சேனையின் முக்கிய தளகர்த்தர் பதவியையும் வகித்து வந்தார். இவருக்கு முன் கவர்னர் ஜெனரல் பதவியை வகித்த காரன்வாலிஸ் என்பவரும் ஹேஸ்டிங்ஸ் என்பவரும் தளகர்த்தரின் பதவியை வகித்திருந்தனர். வில்லியம் பென்டிங் சேனைத் தளகர்த்தர் என்ற ஹோதாவில் இரண்டு முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்தார். முதலாவது, அனுபவம் முதிர்ந்த சிப்பாய்களுக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதாம். இரண்டாவது, குற்றம் செய்த இந்திய சிப்பாய்களைத் தண்டிக்கும்போது சவுக்கடி அடித்தல் கூடாது என்பதாம். இதனுல் பலகாலம் சிப்பாய்களிடையே இருந்த பெரும் சங்கடத்தை நீக்கினுர். ஆயினும் இவர் பிறப்பித்த உத்தரவு இந்திய சிப்பாய்களுக்கு மட்டுமே அனுகூலமாயிருந்தது. ஏனெனில் தண்டனைக்குட்பட்ட ஆங்கிலேய

சிப்பாய்களைச் சவுக்கடி அடிப்பது என்ற பழக்கம் இதற்குப் பிறகு வெகுகாலம் வரையிலிருந்தது.

சமஸ்தானங்களுடன் உறவு

வில்லியம் பென்டிங் சமஸ்தான அரசரோடு பாராட்டிய உறவு அவ்வளவு திருப்திகரமாக இல்லை. நைஜாம் மன்னருக்கு வழக்கமாக ஆங்கிலேயர் அளித்துவந்த உதவியை இவர் நிறுத்தினர். குவாலியர் சமஸ்தானத்தில் பெருங் கலகங்கள் ஏற்பட்டபோதிலும் அவற்றை அடக்கும் விஷயத்தில் இவர் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை. பரோடா அரசர் ஆங்கிலேயரை விரோதிக்கவும் ஆரம்பித்தார். ராஜபுத்ரர்களிடையே பல சச்சரவுகள் ஏற்பட்டன. ஜெய்பூரில் ஒரு பெருங்கலகம் விளைந்தது. இவ்வாறு ஏற்பட்ட குழப்பங்களுக்கு வில்லியம் பென்டிங் காரணராவர் என்று கூறுவது தவறாகும். ஆனல் இவர் குழப்பம் அதிகரிக்காமல் தடுத்திருந்தால் நன்மை ஏற்பட்டிருக்கலாம்.

மைசூரை ஒரு ஆங்கிலயே சபையின் ஆட்சியின் கீழ்க்கோண்டு வருதல்

இவர்காலத்தில் மைசூர் அரசர் ஒழுங்காக ஆட்சி செலுத்தவில்லை. நாடெங்கும் கலகங்கள் ஏற்பட்டன. வில்லியம் பென்டிங் மைசூருக்குச் சென்று அரசரைப் பதவியிலிருந்து நீக்கி மைசூரை ஆங்கிலேயர்கள் அடங்கிய சபை ஒன்றின் ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தார். இந்த ஆட்சி சுமார் ஐம்பது வருஷகாலம் நீடித்திருந்தது.

குடகு ஆங்கில அதிகாரத்திற்கு உட்படுதல்

வில்லியம் பென்டிங்காலத்தில் ஆங்கில ஆட்சிக்குக் கீழ்க்கொண்டு வரப்பட்ட நாடுகளில் குடகு நாடு முக்கியமான

த்தாகும். இவர்காலத்துக்கு மூன்புவரையிலும் குடகு அரசரும் ஆங்கிலேயரும் அதிக நட்புடன் இருந்துவந்தனர். ஆனால், இவர் காலத்தில் குடகு அரசராயிருந்த **வீர ராஜர்** என்பவர் கொடுங்கோன்மையுடன் அரசு புரிந்தார்; ஆங்கிலேயரைப் பகைத்துக்கொண்டார். ஆகவே வில்லியம் பெண்டிங் குடகு அரசரை நீக்கிக் குடகை ஆங்கில ஆட்சியின் கீழ்க்கொண்டுவந்தார். இப்போது குடகு ஒரு கமிஷனரின் அதிகாரத்துக்கு உட்பட்டு இருக்கிறது.

ராஜீய சமூக சீர்திருத்தங்கள்

வில்லியம் பெண்டிங் குடிகளுக்கெனச் செய்த சீர்திருத்தங்களில் முக்கியமானவற்றைக் கவனிப்போம். பெரிய உத்தியோகங்களுக்கு அதிக சம்பளத்தில் ஆங்கிலேயர்களை நியமிப்பதைவிட்டுக் குறைந்த சம்பளத்தில் இந்தியர்களை நியமிக்கலானார். இவர் காலத்தில் சில இந்தியர்கள் நியாதிபதிகளாக நியமிக்கப்பட்டனர். ஆனால் சைனியத்தில் இந்தியர்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது

சதி என்னும் கொடிய பழக்கத்தை நீக்குதல்

இவர் செய்த சீர்திருத்தங்கள் எல்லாவற்றிலும் ஹிந்து சமூகத்திலிருந்த ஒரு கொடிய பழக்கத்தை நீக்கியதே முக்கியமாகும். அக்காலத்தில் கணவன் இறந்தவுடன் மனைவி தானும் கணவனுடைய சிதையில் விழுந்து இறந்துவிடுவது வழக்கம். இவ்வாறு செய்தால் மனைவியும் தன் புருஷனுடன் சுவர்க்கத்தை அடைகின்றனள் என்பது அக்காலத்தவருடைய கருத்து. இக்கொடிய பழக்கத்திற்கு சதி என்று பெயர். வில்லியம் பெண்டிங் இக்கொடிய பழக்கத்தை எவ்விதமாகவாவது நீக்கவேண்டும் என்று தீர்மா

னித்தார். இக்காலத்தில் சமூக சீர்திருத்தத்தில் **ராஜாராம் மோகன்ராய்** என்ற இந்திய மாகான் ஈடுபட்டிருந்தார். வில்லியம் பெண்டிங் அவருடைய உதவியைக் கொண்டு இக்கொடிய பழக்கத்தைத் தொலைத்தார்.

தக்கர்களை வேரறுத்தல்

வில்லியம் பெண்டிங் குடிகளுக்கு மற்றுமோர் நன்மையைச் செய்தார். அக்காலத்தில் நாடெங்கும் **தக்கர்கள்** என்ற மூர்க்கர்கள் உலாவித்திரிந்தனர். இவர்கள் நாட்டில் பல அக்கிரமங்களைச் செய்ததுமல்லாமல் தங்கள் தெய்வங்களுக்கு நரபலி அளித்துவந்தனர். மேலும் இவர்கள் கூட்டம் கூட்டமாகப் பாதைகளில் காத்துக் கொண்டிருந்து வியாபாரிகளையும் மற்றுமுள்ள வழிப் போக்கர்களையும் ஏமாற்றிக் கொன்றனர். இவர்கள் பல மாறு வேடங்களுடன் திரிந்ததால் இவர்களைக் கண்டு பிடித்துத் தண்டிப்பது கஷ்டமாயிருந்தது. இக் கூட்டத்தாரை அடியோடு ஒழித்து நாட்டில் இவர்களால் ஏற்பட்டிருந்த பயத்தை பெண்டிங் போக்கடித்தார்.

ஆங்கில துரைத்தனத்தார் ஏற்படுத்திய நிபந்தனைகள்

1833-ம் வருஷம் ஆங்கில துரைத்தனத்தார் கம்பெனியார் எவ்வாறு இந்தியாவில் ஆட்சி செலுத்தவேண்டும் என்பதைக் குறித்துச் சில நிபந்தனைகளை ஏற்படுத்தினர். இதுவரையிலும் கவர்னர் ஜெனரல்க்கு வங்காள கவர்னர் ஜெனரல் என்ற பட்டமே இருந்து வந்தது. இந்நிபந்தனைகள் ஏற்பட்ட பிறகு அவருக்கு இந்திய கவர்னர் ஜெனரல் என்ற பட்டம் கிடைத்தது. கவர்னர் ஜெனரலுடைய சபைக்கு மற்றொரு அங்கத்தினர் சேர்க்கப்பட்டார்.

இவருக்குச் சட்ட சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கும் அங்கத்தினர் என்ற பெயர் ஏற்பட்டது. இவ்வாறு நியமிக்கப்பட்ட முதல் சட்ட அங்கத்தினர் மெகாலே என்ற பிரபு ஆவர். மெகாலே சட்ட விஷயங்களில் ஊக்கம் எடுத்துக் கொண்டதுபோல் இந்திய ஜனங்களின் கல்வி அபிவிருத்தியிலும் ஊக்கம் செலுத்தினர். இவருடைய முயற்சியினுல் தான் இந்தியாவில் ஆங்கிலபாஷை பரவலாயிற்று.

கல்வியபிவிருத்தி

ஆங்கில துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்ட மேற்கூறிய நிபந்தனைகள் அரசாங்க முறையில் மாறுதல்களை ஏற்படுத்தவே செய்யப்பட்டபோதிலும் அவற்றின்மூலம் ஆங்கில அரசாங்கத்தார் தங்களுக்கு இந்தியருடைய கல்வி அபிவிருத்தியில் இருந்த சிரத்தையையும் காண்பித்தனர். இந்தியர்களுக்குப் பெருவாரியாக அரசாங்கத்தில் உத்தியோகம் கொடுப்பதற்கு, இந்தியர்களில் பெரும்பாலோர் ஆங்கிலப் படிப்பற்றவர்களாக இருந்தது ஒரு பெரிய தடங்கலாக இருந்தது. இந்தியாவில் ஆங்கில ஆட்சி வலுத்துவிட்டபடியால் ஆங்கில பாஷையிலேயே அரசாங்க சம்பந்தமான குறிப்புகளை எழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆங்கில பாஷையை இந்தியர்களுக்குக் கற்றுக் கொடுப்பதே சிறந்த மார்க்கம் என்று கம்பெனியார் கருதினர்கள். இது விஷயமாக ஆலோசனை செய்வதற்கென ஒரு சபை ஏற்படுத்தப்பட்டது. அதற்கு மெகாலேயே தலைமை வகித்தார். முன் கூறியபடி அவர் முயற்சியினுல் தான் ஆங்கிலபாஷை இந்தியாவில் பரவலாயிற்று.

வில்லியம் பெண்டிங் காலத்தில்தான் மேல் நாட்டுக் கல்வி இந்தியாவில் அதிகமாகப் பரவ ஆரம்பித்தது. மேல்

நாட்டு வைத்திய சாஸ்திரத்தை இந்தியர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காகக் கல்கத்தாவில் ஒரு வைத்திய கலா சாலையை ஏற்படுத்தினர். இதன் பிறகு மேல்நாட்டு வைத்திய முறை இந்தியாவில் ஓங்கலாயிற்று.

இவற்றையும் தவிர பெண்டிங் பொது ஜனங்களின் கல்விக்காகப் பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினர்.

பெண்டிங்கின் பெருமை

வில்லியம் பெண்டிங் பிரபு 1835-ம் வருஷம் பதவியிலிருந்து விலகினர். இவர் அரசாங்கத்தில் செய்த சீர்திருத்தங்களையும் குடிகளுக்கெனச் செய்த நன்மைகளையும் நோக்குங்கால் கவர்னர் ஜெனரல்களில் இவரையே சிறந்தவராகக் கருதலாம்.

முக்கிய வருஷங்கள்

கி.பி. 1828—1835.	வில்லியம் பெண்டிங் கவர்னர் ஜெனரலாக இருந்த காலம்.
,, 1829.	சதி என்னும் கொடிய பழக்கம் நீங்குதல்.

10. ராஜாராம் மோகன்ராய்

விளையும் பயிர் முளையிலே—தந்தையும் மகனும் ஒற்றுமைப்படுதல்—தேச பக்தி—பிரம்ம ஸமாஜம்.

விளையும் பயிர் முளையிலே

முன்னதிகாரத்தில் சமூக சீர்திருத்தத்தில் ஈடுபட்ட ராஜாராம் மோகன்ராய் என்பவரைப்பற்றிப் பிரஸ்தாபித்

துள்ளோம். அவருடைய வாழ்க்கை விவரங்களில் சில வற்றை இப்பொழுது அறிந்துகொள் வோம். வங்காளத்திலுள்ள ராதாநகர் என்னுமிடத்தில் 1774-ம் வருஷம் இப் பெரியார் பிறந்தார். தமது பத்தாம் வயதில் பாட்னவிலுள்ள ஒரு பள்ளிக் கூடத்தில் சேர்ந்து பாரசீகம், அராபி முதலிய பாஷைகளைக் கற்ருர். பிறகு ஸம்ஸ்கிருதத்தில் தேர்ச்சியடைவதற் காகக் காசிக்குச் சென்ருர். அங்கு ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்றவுடன் வீடு திரும்பினர். 'விளையும் பயிர் முளை யிலே தெரியும்' என்ற ஆன்ருேர் சொல்லிற்கேற்ப, இவருடைய பிற்கா லத்திய குணதிசயங்களெல்லாம் சிறு வயதிலேயே இவரிடம் காணப்பட்டன.


ராஜாராம் மோகன்ராய்

பதினறு வயது பாலகனுயிருந்தபோதே இவர் அர்த்தமற்ற பழைய வழக்கங்களையும், மூட நம்பிக்கைகளையும் எதிர்த்து ஒரு அரிய புத்தகம் எழுதினர். மோகன்ராயின் தந்தையார் பழைய வழக்கங்கள் எல்லாவற்றிலும் அதிக நம்பிக்கை யும் உறுதியும் உள்ளவர். தம் புதல்வர் எழுதியது அவருக் குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஆகவே அவர் மோகன் ராயை வீட்டை விட்டுத் துரத்தினர்.

தந்தையும் மகனும் ஒற்றுமைப்படுதல்

ஆயினும் மோகன்ராய் தாம் கொண்ட உறுதியை மாற்றவில்லை. சிறுவராயினும் அவர் ஊக்கத்தை விடா மல் இந்தியாவிலும் திபெத்திலும் சுற்றுப் பிரயாணம்

செய்தார். இக்காலத்தில்தான் அவருடைய அனுபவம் முதிர்ந்தது. இதற்குள் அவரை வெளியே துரத்திய தந்தையாரின் மனம் இளகியது. தமது இருபதாம் வயதில் ராஜாராம் தம் தந்தையாரைச் சந்தித்து அவரோடு ஒற்றுமையாக வாழ்ந்தார். பிறகு ஆங்கிலத்தையும் செவ்வனே கற்றுத் தேர்ந்து துரைத்தனத்தாரால் திவானாகவும், நியாயாதிபதியாகவும் நியமிக்கப்பட்டு வங்காளத்திலுள்ள ஜில்லாக்களில் உத்தியோகம் பார்த்து வந்தார்.

தேச பக்தி

ராஜாராம் தேச பக்தியில் சிறந்தவர். அவருடைய தைரியமும், உயர்ந்த கொள்கைகளும், தாம் கொண்ட எண்ணங்கள் நிறைவேற வேண்டுமென்று அவர் எடுத்துக் கொண்ட பெரிய முயற்சிகளும் போற்றத்தக்கவை. (ஒழுங்காகவும், படிப்படியாகவும் இந்தியர் அரசியல் உரிமைகளை அடையவேண்டுமென்பது அவருடைய கருத்து. ஆங்கிலேயரின் அரசியலில் காணப்படும் பிரதிநிதித்துவ சபை முதலியவைகள் இந்தியருக்கும் இருக்கவேண்டும் என்றும், ஆங்கிலேயருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளெல்லாம் இந்தியருக்கும் அளிக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.) அக்காலத்திய இந்திய பிரமுகர்களும், அறிவாளிகளும் அவருடைய கொள்கைகளை ஆதரித்தனர். தம் கொள்கைகள் பூர்த்தியாவதற்காக அவர் அநேக சபைகளை ஏற்படுத்தினர்; அநேக பிரசங்கங்கள் செய்து தம் கொள்கைகளை வெளிப்படுத்தினர்; பல அரிய புத்தகங்களை எழுதினர்; கலாசாலைகளை ஏற்படுத்திச் சிறுவர்கள் புதிய விஷயங்களைக் கற்குமாறு செய்தார்.

அவருடைய முயற்சிகளின் பயனாகத் துரைத்தனத்தார் கல்வி சம்பந்தமாகவும் சமூக சீர்திருத்த விஷயமாகவும், பேச்சுச் சுதந்திர விஷயமாகவும் பல சட்டங்களைச் செய்தனர். மேலும், மேல் நாடுகளிலுள்ளபடி இந்தியாவிலும் எல்லோருக்கும் ஒரே விதமான நியாயம் வழங்கப்பட வேண்டுமென்று அவர் வாதிட்டார். ஆனால் அவர் செய்த முயற்சிகளுள் மிகவும் சிலாகிக்கத்தக்க முக்கியமான முயற்சி யொன்றுண்டு. அக் காலத்தில் சதி என்ற பெயருடைய ஒரு கொடிய பழக்கம் இருந்துவந்ததென்றும், அதைப் பெண்டிங் பிரபு ஒழித்தாரென்றும் முன்னமேயே அறிந்துள்ளோம். அதற்கு வேண்டிய முயற்சிகளைச்செய்து பெண்டிங்குக்கு உதவி யளித்தவர் ராஜாராமேயாவர்.

அக்காலத்தில் சமூக சீர்திருத்தத்தில் ஆர்வம் கொண்ட **பாக்ஸ்** என்பவர் ராஜாராமைப்பற்றிப் பேசும்பொழுது, "அவருடைய விடாமுயற்சியினாலும், உயரிய நோக்கங்களினாலும், தெளிவான பிரசங்கங்களினாலுமே வங்காள துரைத்தனத்தார் விதவைகளின் கொடிய பலியை நிறுத்த முடிந்தது," என்று சொல்லியிருக்கிறார்.

பிரம்ம ஸமாஜம்

புராதன ஹிந்து மதத்தின் பரிசுத்தத்தை மீண்டும் நிலைபெறச் செய்யவேண்டுமென்று அவர் மிகவும் விரும்பி **பிரம்ம ஸமாஜம்** என்னும் சபையைப் பிரபலமடையச் செய்தார். உயர்ந்த எண்ணங்கள் பொதிந்து கிடக்கும் உபனிஷத்துக்களை அவர் ஆங்கிலத்திலும் வங்காளியிலும் மொழி பெயர்த்தார். கல்கத்தாவிலுள்ள **ஹிந்து காலேஜ்** என்னும் கலாசாலையை 1819-ம் வருஷம் நிறுவினார். 1830-ம் வருஷம் இங்கிலாந்திற்குச் சென்று இந்தியருக்கு அரசியல் உரிமை

கள் கொடுக்கப்படவேண்டுமென்று வாதிட்டார். ஓர் அரிய போர் வீரரைப்போன்ற இவர் தம் கொள்கைகள் நிறைவேறும் தருவாயில் இறந்தார். எக்காலத்திலும் இந்தியராலும், உலகத்தினராலும் இவர் போற்றிப் புகழப்படுவார் என்பதில் சற்றேனும் ஐயமில்லை.

11. ஆக்லந்து பிரபுவும் ஆப்கானிய யுத்தமும்

சமஸ்தான விவகாரங்களில் தலையிடுதல்—ஆப்கானிஸ்தானத்தில் அரசுரிமைப் போட்டி—ஷா ஷூஜாவுக்கு ஆங்கிலேயர் உதவியளித்தல்—ஆப்கானிஸ்தானத்தில் ஆங்கிலேயர் பட்ட கஷ்டம்—எல்லென்பரோ பிரபு—ஸிந்து பிரதேசம் ஆங்கிலேயர் வசம் வருதல்.

சமஸ்தான விவகாரங்களில் தலையிடுதல்

வில்லியம் பென்டிங்குக்குப் பிறகு வந்த ஆக்லந்து பிரபு இந்திய சமஸ்தானங்களின் விவகாரங்களில் பெரிதும் தலையிடும்படியாக நேர்ந்தது. முதலில் இவர் அயோத்தியில் ஏற்பட்டிருந்த ஒரு சச்சரவை நீக்கி அதற்கு **நாஸர் உதீன்** என்பவரை அரசராக முடி சூட்டினர். பிறகு தமது ஆட்சிக்குட்பட மறுத்த ஸதாரா அரசரை நீக்கி அவருடைய சகோதரரான **ஷா ஷூஜா** என்பவரை ஸதாரா அரசராக ஆக்கினர். கர்நூலில் ஆண்டுகொண்டிருந்த நவாபை அதிகாரத்திலிருந்து நீக்கிக் கர்நூலை ஆங்கில ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தார். இவற்றையெல்லாம்விட இவர் ஆப்கானிஸ்தான விஷயமாகக் கையாண்ட முறை கவனிக்கத் தக்கது.

ஆப்கானிஸ்தானத்தில் அரசுரிமைப்போட்டி

இவர் காலத்தில் ஆப்கானிஸ்தானத்தில் அரசுரிமைப் போட்டி ஏற்பட்டுக் கலகம் விளைந்தது. அப்பொழுது அமீராக இருந்தவர் **ஷா ஷூஜா** என்பவராவர். ஷா ஷூஜா வுக்கு விரோதமாக **டோஸ்டு முகம்மது** என்பவர் கிளம்பி அவரை ராஜ்யத்திலிருந்து துரத்தினர். இவ்வாறு துரத் தப்பட்ட ஷா ஷூஜா ஆங்கிலேயரின் உதவியை நாடினர்.

ஷா ஷூஜாவுக்கு ஆங்கிலேயர் உதவி யளித்தல்

ஷா ஷூஜா சீக்கிரத்தில் ஆங்கிலேயருடைய உதவி யைப் பெற்றார். ஆக்லந்து பிரபு முதலில் பஞ்சாப் அரச ரான ரஞ்சிட் சிங் என்பவருடனும் ஷா ஷூஜாவுடனும் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார். இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் இருவருடைய உதவியையும் பெற்று அன்னியர் களை இந்தியாவிற்குள் வரவொட்டாமல் தடுக்கலாம் என் பதே. அக்காலத்தில் ரஷ்யர்கள் இந்தியாவின்மீது படை யெடுத்து வருவார்களோ என்ற பயம் ஆங்கிலேயருக்கு உண்டாயிருந்தது.

டோஸ்டு முகம்மதும் ஆங்கிலேயரை மிகவும் பகைத்துக் கொண்டார். இக் காரணங்களைக்கொண்டு ஆக்லந்து காபூ லின்மீது படையெடுப்பதாகத் தீர்மானித்தார். முதலில் ஷா ஷூஜாவின் தலைமையின் கீழ் ஒரு சைனியத்தை அனுப்புவித்துக் கைபர் கணவாயின் வழியாக ஆப்கானிஸ் தானத்தில் புகும்படியாக உத்தரவிட்டு அனுப்பினர். இவ்விரு சைனியங்களும் டோஸ்டு முகம்மதை நெருக்கவே அவர் காபூலிலிருந்து ஓடிவிட்டார். பிறகு அவர் ஆங்கிலேய ரிடம் சிறைப்பட்டார். ஷா ஷூஜா ஆப்கானிய அரசராக ஆனர்.

ஆப்கானிஸ்தானத்தில் ஆங்கிலேயர் பட்ட கஷ்டம்

ஆனல் ஆப்கானியர் ஷா ஷுஜாவை வெறுத்தனர். ஆங்கில சிப்பாய்களின் உதவியின்றி அவரால் ஆளமுடியவில்லை. மேலும் ஷா ஷுஜாவுக்குத் துணையாயிருந்த ஆங்கில வீரர்களை ஆப்கானியர்கள் பலவிதங்களிலும் துன்புறுத்தலாயினர். ஆப்கானிஸ்தானத்தில் தங்கியிருந்த தளகர்த்தரான **எல்பின்ஸ்டன்** என்பவர் ஆப்கானியரால் இம்சிக்கப்பட்டு அவர்களுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன் பிரகாரம் தாம் சிறையிலிருந்த டோஸ்டு முகம்மதை விடுவிப்பதாக வாக்களித்தார். ஆப்கானியர்களும், எல்பின்ஸ்டனுக்கும் அவருடைய சைனியத்திற்கும் ஒருவித தீங்கும் இழைப்பதில்லை என்று வாக்களித்தனர். ஆனல் எல்பின்ஸ்டனுடைய சைனியம் திரும்பி வரும்போது அதிலிருந்த ஆயிரக்கணக்கான வீரர்களை ஆப்கானியர் அக்கிரமமாய்க் கொலை செய்தனர். இதைக் கேள்வியுற்ற ஆக்லந்து, ஆப்கானியர்களைப் பழிக்குப் பழி வாங்குவதாகத் தீர்மானித்தார். ஆனல் இதற்குப் பிறகு அவர் சீக்கிரத்தில் தம் பதவியிலிருந்து விலகும்படி நேர்ந்தது.

எல்லென்பரோ பிரபு

ஆக்லந்துக்குப் பிறகு வந்த **எல்லென்பரோ** என்பவருக்கு இந்த ஆப்கானிய யுத்தத்தைத் தொடங்குவதற்கு இஷ்டமில்லை. ஷா ஷுஜாவின் பொருட்டு ஆங்கிலேயரைப் பலியிடத் தமக்கு இஷ்டமில்லை என்று அவர் ஒரு சமயம் கூறினர். ஆயினும் மற்ற ஆங்கிலேயர்கள் எல்லென்பரோவின் கொள்கையை வெறுத்தனர். ஏனெனில் அவர்கள், அநியாயமாய் ஆங்கிலேயரைக் கொலை செய்த ஆப்கானியரைப் பழிவாங்க வேண்டுமென்று இருந்தனர்.

மற்ற ஆங்கிலேயரின் மனஸ்தாபத்திற்குப் பாத்திரராக இஷ்டமில்லாதவராய் எல்லென்பரோ பிரபு தமது முதல் எண்ணத்திற்கு மாறாக ஆப்கானிய யுத்தத்தைத் தொடங்குவதாக வாக்களித்தார். பிறகு **நாட், போலக்** என்ற இரு தளகர்த்தரின் கீழ் பெரும் சைனியம் ஒன்றை ஆப்கானிஸ்தானத்திற்கு அனுப்பினர். இவர்கள் ஆப்கானிஸ்தானத்தின் பெரும்பாகத்தை அழித்துவிட்டு வெற்றியுடன் திரும்பினர். இதற்குள் ஷா ஷூஜா இறந்துவிட்டார். டோஸ்டு முகம்மது சிறையிலிருந்து விடுபட்டு ஆப்கானிய அரசராக ஆனர். ஆகவே ஆப்கானிஸ்தானத்தில் செய்த முயற்சிகள் வியர்த்தமாயின.

ஸிந்து பிரதேசம் ஆங்கிலேயர் வசம் வருதல்

எல்லென்பரோவின் காலத்தில் பஞ்சாபுக்குத் தெற்கே யிருந்த ஸிந்து ராஜ்யம் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது. இது பலகாலமாக முகம்மதியரின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. எல்லென்பரோ பிரபு **ஸர் சார்லஸ் நேபியர்** என்ற தளகர்த்தரின் கீழ் ஒரு சைனியத்தை அனுப்புவித்து ஸிந்து பிரதேசத்தை ஆண்ட அமீரை ராஜ்யத்திலிருந்தும் நீக்கச் செய்தார். பிறகு இப் பிரதேசத்தை ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தார். ஸிந்துவைக் கைப்பற்றியதனல் ஆங்கிலேயருக்கு வியாபார சம்பந்தமான சில செளகரியங்கள் ஏற்பட்டன. மேலும் ஸிந்து, சீக்கிய ராஜ்யத்துக்குப் பக்கத்தில் இருந்ததால் சீக்கியர் ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கிளம்பாமல் பார்த்துக் கொள்வதற்கு அனுகூலமாயிருந்தது.

இதற்குப் பிறகு குவாலியர் சமஸ்தானமும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குக்கீழ்க் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு எல்லென்பரோ இந்திய சமஸ்தான விஷயங்களில் அதிகமாகத் தலையிட்டதனுல் கம்பெனியின் நிர்வாக சபையினர் அவரை உத்தியோகத்தினின்றும் நீக்கி ஹார்டிஞ்ஜு என்பவரைக் கவர்னர் ஜெனரலாக நியமித்தனர்.

முக்கிய வருஷங்கள்

கி.பி. 1836—1842.	ஆக்லந்து கவர்னர் ஜெனரலாக இருந்த காலம்.
,, 1839—1842.	முதல் ஆப்கானிய யுத்தம்.
,, 1839.	ரஞ்சிட்சிங்கின் மரணம்.
,, 1842—1844.	எல்லென்பரோ கவர்னர் ஜெனரலாக இருந்த காலம்.
,, 1843.	ஸிந்து பிரதேசம் ஆங்கிலேய ஆட்சிக்குக் கீழ்வருதல்.
	குவாலியரில் ஏற்பட்ட கலகத்தை அடக்குதல்.

12. ஹார்டிஞ்ஜும் சீக்கிய யுத்தமும்

சீக்கியர்களும் ஆங்கிலேயர்களும்—ரஞ்சிட்சிங்குக்குப் பிறகு பஞ்சாபின் நிலை—கால்ஸா சபையின் அதிகாரம் ஓங்குதல்—சீக்கிய யுத்தம்—லாகூர் உடன்படிக்கை.

சீக்கியர்களும் ஆங்கிலேயர்களும்

இந்தியாவுக்கு வருவதற்கு முன்னர் ஹார்டிஞ்ஜு ஐரோப்பிய யுத்தங்கள் பலவற்றில் சேனைத்தலைவராக

இருந்துவந்தார். ஆகவே இவரிடம் அரசாளும் திறமை யுடன் போர்செய்யும் திறமையும் பொருந்தியிருந்தது. இந்தியாவுக்குக் கவர்னர் ஜெனரலாகப் போகும் எவரும் சமஸ்தான விஷயங்களில் தலையிடாம லிருக்கமுடியாது என்பதை ஆங்கில துரைத்தனத்தார் கண்டுகொள்ளவே இனி ஏற்படும் யுத்தங்களைச் சரிவர நடத்துவதற்காக இத்த கைய சாமர்த்தியம் வாய்ந்தவரைக் கவர்னர் ஜெனரல் பத விக்குத் தேர்ந்தெடுத்தனர். இவர் வந்த சிறிது காலத் திற்குள் கம்பெனியாருக்கும் பஞ்சாபிலிருந்த சீக்கியர் களுக்கு மிடையே விரோதம் ஏற்பட்டது. இதன் வரலாறு பின்வருமாறு :

மின்டோ காலம் முதற்கொண்டு ஆங்கிலேயர் பஞ்சா பில் ஆண்ட சீக்கிய அரசரின் நட்பைப் பெரிதும் நாடி னூர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இதற்குக் கார ணங்கள் பல உள. பஞ்சாப் இந்தியாவின் வடமேற் கேயுள்ளது. இந்தியாவிற்குள் வரும் அன்னியர்கள் யாவரும் பஞ்சாபைத் தாண்டி உள் வருவது சுலபமாகும். ரஷ்யர்கள் இந்தியாவின்மீது படையெடுக்கப்போவதாகப் பலகாலம் வதந்தி உலாவிக்கொண்டிருந்தது. ஆகவே, அவ்வாறு அவர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தால் அவர்களைத் தடுப் பதற்குப் பஞ்சாப் அரசரின் உதவி பெரிதும் வேண்டி இருந்தது. இக்காரணத்தைக் கொண்டேதான் ஆங்கி லேயர் பஞ்சாப் அரசரான ரஞ்சிட் சிங்குடன் சமாதானம் செய்துகொண்டு அவருடைய விவகாரங்களில் தலையிடா மலே இருந்துவந்தனர். ரஞ்சிட் சிங்கும் எப்பொழுதும் ஆங்கிலேயருக்கு உதவிபுரியத் தயாராக இருந்தார். ரஞ்சிட் சிங்கும், ஆங்கிலேயரும் நட்புடன் இருந்தவரையில் வடமேற்கில் ஆங்கிலேயருக்கு அதிக தொந்தரவு ஏற்

படாமலிருந்தது. ஹார்டிஞ்ஜு வருவதற்குச் சிலகாலந் திற்கு முன் ரஞ்சிட்சிங் இறந்து விட்டார். இதனல் ஆங்கி லேயருக்கு வடமேற்கில் பாதுகாப்பு விஷயமாகப் பெருத்த கவலை ஏற்பட்டது.

ரஞ்சிட் சிங்குக்குப்பிறகு பஞ்சாபின் நிலை

ரஞ்சிட் சிங்குக்குப் பிறகு பஞ்சாப் என்னவாயிற்று என்று கவனிப்போம். அவருக்குப்பிறகு அவருடைய குமாரர் **காரக்சிங்** என்பவர் அரசரானர். காரக்சிங் ஆங்கி லேயருடன் நட்புப் பாராட்டினர். ஆயினும், அவர் திறமை யற்றவராக இருந்ததனல் சீக்கியர்கள் அவரை நீக்கி **நிகாம்சிங்** என்பவரை அரசராகக் கொண்டனர். நிகாம் சிங் ஆங்கிலேயரை வெறுத்தவர். ஆங்கிலேயராலேற்பட்ட தொல்லையைப் பஞ்சாபிலிருந்து எவ்விதமாவது நீக்கிவிட வேண்டுமென்ற நோக்கத்துடனிருந்தார். ஆனல் அவர் அதிக காலம் ஆளவில்லை. பிறகு ரஞ்சிட்சிங்குடைய மற் ருெரு குமாரரான **ஷேர்சிங்** என்பவர் அரசரானர். ஆனல் காரக் சிங்குடைய மனைவி இதைத்தடுத்துக் கர்ப்பமாயிருந்த நிகாம் சிங்கினுடைய மனைவிக்குப் பிறக்கப்போகும் குழந் தையே பட்டத்துக்கு உரியது என்றும், அக்குழந்தை பிறக்கும் வரையில் நிகாம் சிங்கின் மனைவியே ஆட்சிபுரிய வேண்டுமென்றும் கூறினள். ஷேர்சிங் மஹாராணியை எதிர்த்துத் துரத்திவிட்டார். ஆனல் இவரும் அதிககாலம் ஆளவில்லை. ரஞ்சிட்சிங்குடைய மற்ருெரு குமாரரான **துலீப் சிங்** என்பவர் பட்டத்தையடைந்தார். துலீப்சிங் சிறு வராக இருந்தபடியால் அவருடைய தாயாரே அவருக்குப் பதிலாக ஆட்சி செலுத்தி வந்தார்.

கால்ஸ சபையின் அதிகாரம் ஓங்குதல்

இதற்குள் பஞ்சாப் அரசாங்கத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. அரசனுக்கு இருந்த அதிகாரங்களை எல்லாம் **கால்ஸ** என்ற சபை கைப்பற்றிக் கொண்டது. கால்ஸ என்பது சீக்கிய சைனியத்தில் இருந்த முக்கியமானவர்களை அங்கத்தினராக உடைய சபையாகும். இச்சபையின் அதிகாரம் ஓங்கவே மஹாராணி அதன் உத்தரவுக்குட்பட்டே ஆண்டுவந்தார்.

கால்ஸ சபையினர் ஆங்கிலேயரை மிகவும் வெறுத்தனர். ஆங்கிலேயர்கள் இதுவரையிலும் சீக்கியர்களை ஏமாற்றியே வந்திருந்ததாக அவர்கள் நினைத்தனர். ஆகவே அவர்கள் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தைச் சீர் குலையச் செய்யவேண்டுமென்ற உறுதியான எண்ணத்தைக் கொண்டனர். இதற்கு ராணியும் சம்மதித்தாள்.



சீக்கிய யுத்தங்களை விளக்குதல்

சீக்கிய யுத்தம்

1845-ம் வருஷம் சீக்கியருடைய சைனியம் ஆங்கிலேயரை எதிர்த்துச் சென்றது. இதை எதிர்பார்த்திருந்த ஹார்டிஞ்ஜும் முன்னமேயே பல ஏற்பாடுகளைச்

செய்து வைத்திருந்தார். பஞ்சாபைவிட்டுச் சீக்கிய சைனியம் ஆங்கிலேயரை நோக்கி வருவதையறிந்த ஹார்டிஞ்ஜு அம்பாலா என்னுமிடத்திலிருந்தும் லூதியானு என்னுமிடத்திலிருந்தும் இரு சைனியங்களைச் சீக்கியர்களை எதிர்க்கும்படி அனுப்பினர். இவ்வாறு அனுப்பப்பட்ட ஆங்கில சைனியங்கள் சீக்கிய வீரர்களை ஸொப்ரான் என்னுமிடத்தில் எதிர்த்துத் தோற்கடித்தன.

லாகூர் உடன்படிக்கை

சீக்கியர்கள் தோல்வியுற்றதை அறிந்த ஹார்டிஞ்ஜு தாமே நேரில் பஞ்சாபுக்குச் சென்றார். தலை நகராகிய லாகூரிலிருந்தபடியே கால்ஸ சபையினரைத் தாம் ஏற்படுத்திய நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளுமாறு வற்புறுத்தினர். அவற்றை அவர்களும் ஒப்புக்கொள்ளுமாறு ஆயிற்று. அவற்றிற்குப் பொதுவாக லாகூர் உடன்படிக்கை என்று பெயர். இதன் பிரகாரம் ஸட்லிஜ் நதிக்குத் தென் பாகத்திலிருந்த பிரதேசங்கள் யாவற்றையும் ஆங்கிலேயர் சீக்கியரிடமிருந்து பெற்றுக்கொண்டனர். மேலும் ஸட்லிஜ் நதிக்கும் பீயாஸ் நதிக்கும் இடையே சீக்கியருக்குச்சொந்தமாயிருந்த ஜலந்தர் தோவாப், என்ற பிரதேசத்தையும் ஆங்கிலேயர் அடைந்தனர்.

இந்த சமாதானத்துக்குப் பிறகு சிறிது காலத்தில் துலீப் சிங்குக்கு உதவியாக ஆங்கிலேயர்கள் அடங்கிய ஒரு சபை பஞ்சாபில் ஏற்படுத்தப் பட்டது. இதற்கு (ஸர் ஹென்றி லாரென்ஸ்) என்பவர் தலைமை வகித்தார். ஆங்கிலேயரை எதிர்த்த ராணியை நாட்டைவிட்டு வெளியேற்றினர். இவ்வளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதிலும் சீக்கிரத்தில் மறுபடியும் பஞ்சாபில் ஆங்

கிலேயருக்குத் தொல்லைகள் ஏற்படலாயின. அவற்றை அடுத்த அதிகாரத்தில் கவனிப்போம்.

ஹார்டிஞ்ஜு பஞ்சாபில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டதற்குக் காரணராக இருந்தார். பஞ்சாபில் ஜனங்களிடையே இருந்த பல கொடிய வழக்கங்களை நீக்கினர்.

முக்கிய வருஷங்கள்

கி. பி.	1844—1848.	ஹார்டிஞ்ஜு கவர்னர் ஜெனரலாக இருந்த காலம்.
,,	1845—1846.	முதல் சீக்கிய யுத்தம்.
,,	1846.	லாகூர் உடன்படிக்கை.

13. டல்ஹௌஸி பிரபு

டல்ஹௌஸி—சீக்கியர் விவகாரங்கள்—பர்மியரோடு சண்டை—நாடு சேகரிப்பதற்கு ஒரு நூதனமுறை கையாளப் படுதல்—அயோத்தியை அபகரித்த விதம்—அரசாங்க விஷயங்களிலும் ஊக்கங் காட்டுதல் — புதிய வசதிகள் — தந்தி—தபால்.

டல்ஹௌஸி

ஹார்டிஞ்ஜு பிரபுவுக்குப் பிறகு வந்த டல்ஹௌஸி என்பவருடைய காலம், மற்ற கவர்னர் ஜெனரல்களுடைய காலங்களினின்றும் பல விதங்களிலும் வேறுபட்டிருந்தது. இவர் எட்டு வருஷ காலம் இந்தியாவில் பதவி வகித்து வந்தார். இதில் அவர் செய்த ஏற்பாடுகளையும், வென்ற வெற்றிகளையும் நோக்கின் யாவருக்கும் வியப்பு ஏற்படக் கூடும்.

லார்ட் டல்ஹௌஸிக்குப் பிந்திய இந்தியா



சீக்கியர் விவகாரங்கள்


டல்ஹௌஸி வந்தவுடன் சீக்கியர் விவகாரங்களில் தலையிட நேர்ந்தது. பஞ்சாப் அரசரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த, மூல்தான் நாட்டு சிற்றரசரான மூலராஜர் என்பவர் கலகம் விளைத்தார். இதை அடக்குவதற்கென பஞ்சாப் அரசாங்கத்தினர் இரண்டு ஆங்கிலேயர்களை அனுப்பினர். ஆனால் இவர்கள் மூலராஜரின் ஏவலின் பேரில் கொல்லப்பட்டனர். இது டல்ஹௌஸிக்குப் பெருத்த கோபத்தை உண்டுபண்ணியது. அவர் ஒரு சைனியத்தை அனுப்பி, மூல்தானை அடக்குமாறு ஏவினர். முதலில் ஆங்கிலேயர் சீக்கியரை சிலியன்வாலா என்னுமிடத்தில் எதிர்த்து வென்றனர். பிறகு கூர்ஜாரத்திலும் ஆங்கிலேயர் வெற்றி யடைந்தனர். சிறிது காலத்தில் மூல்தானும் பிடிபட்டது.

மூல்தான் சிற்றரசர் இவ்வாறு சண்டையை விளைத்ததனால் டல்ஹௌஸிக்கு எல்லாச் சீக்கியர்களிடமும் அவநம்பிக்கை ஏற்பட்டது. இதனால் அவர் பஞ்சாப் முழுவதையும் ஆங்கில ஆட்சியின் கீழ்க் கொண்டுவர எண்ணினர். மேற்கூறிய யுத்தம் ஏற்பட்ட சிறிது காலத்திற்குள் டல்ஹௌஸி பஞ்சாப் முழுவதும் ஆங்கில ஆட்சிக்குக் கீழ்க் கொண்டுவரப்பட்டதாக ஒரு அறிக்கையை விடுத்தார். துலீப் சிங்கைப் பதவியிலிருந்து நீக்கி, அவரை, உபகாரச் சம்பளத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்தார். பஞ்சாப் விஷயங்களைக் கவனிப்பதற்கென மூன்று கமிஷனர்கள் அடங்கிய ஒரு சபையை ஏற்படுத்தினர்.

பர்மியரோடு சண்டை

இதற்குப் பிறகு டல்ஹௌஸி பர்மியரோடும் சண்டை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பர்மியர் ஆங்

சில வியாபாரிகளுக்கு அதிக தொல்லை அளித்து வந்தனர். இதனால் டல்ஹௌஸி பர்மியரை எதிர்த்துச் சண்டை செய்வதெனத் தீர்மானித்தார். இவரே நேரில் சென்று பர்மாவில் யுத்தத்தை நடத்தினர். இவ்வாறு நடந்த யுத்



பர்மாவிலுள்ள புத்த ஆலயம்.

தத்தில் ஆங்கிலேயரே வெற்றியடைந்தனர். இதனால் அவர்கள் பேகு என்ற பிரதேசத்தை ஆங்கில ஆட்சியின் கீழ்க்கொண்டுவர முடிந்தது.

நாடு சேகரிப்பதற்கு ஒரு நூதன முறை கையாளப் படுதல்

இந்தியாவில் ஆங்கில ஆட்சிக்கு உட்படாத பல நாடுகள் இருந்தன. அவற்றின் அரசர்கள் அடிக்கடி ஆங்கிலேயருடைய உதவியை நாடினர். அவர்களில் பலரை

ஆட்சி செலுத்துவதற்கு யோக்கியதை அற்றவர்களாக டல்ஹௌஸி கருதினர். மேலும் பிரிட்டிஷ் ஆட்சி பரவினு லொழிய அந்நாடுகள் செழிக்கமாட்டா என்ற உறுதியான எண்ணத்தைக் கொண்டார். ஆகவே அந்நாடுகளைக் கைப் பற்றுவதற்கென ஒரு புதிய முறையைக் கையாண்டார். அதன் பிரகாரம் ஆங்கில உதவியை நாடிநின்ற அரசர் ஆண் வார்சு இல்லாமலிருந்தால் அவருடைய நாடு ஆங் கிலேயருடைய ஆட்சிக்குக் கீழ்க்கொண்டு வரப்படும் என் பதாம். ஆண் வார்சு இல்லாத அரசர் சுவீகாரம் எடுத் துக் கொள்ளுதல் கூடாது என்றும் அவர் அறிவித்தார். இம்முறையைக் கையாண்டதனுல் டல்ஹௌஸி பல நாடு களைக் கைப்பற்ற முடிந்தது.

இவ்வாறு ஆங்கில ஆட்சிக்குக்கீழ் வந்த முதல் நாடு ஸதாரா என்பதாகும். ஸதாரா அரசர் ஆண்வார்சு இல்லா மல் இறக்கவே அதை ஆங்கில ஆட்சிக்குக் கீழ்க்கொண்டு வந் தார். இதுபோலவே ஜான்ஸி என்ற நாடும் ஆங்கிலேயர்கள் வசம் வந்தது. இதை ஆண்டுகொண்டிருந்த ராணியாரான லக்ஷ்மீபாய் ஆங்கிலேயருடன் மிகவும் போராடினுர்.

நாகபுரியை ஆண்ட மஹாராஷ்டிர அரசர் வார்சு இல்லாமல் இறக்கவே டல்ஹௌஸி அந்நாட்டையும் கைப் பற்றினுர். இதனுல் ஆங்கிலேயருக்கு அதிகப் பருத்தி விளையக்கூடிய ஒரு செழித்த தேசம் கிடைத்தது.

இவர் காலத்தில் பேஷ்வாவாயிருந்த பாஜிராவ் உப காரச்சம்பளம் கொடுக்கப்பட்டுக் கான்பூரில் தங்கியிருந் தார். அவர் இறக்கவே அவருடைய மகனுன நானுசாகிப் தமக்கும் உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி ஆங்கிலேய ரைக் கேட்டுக் கொண்டார். ஆனுல் டல்ஹௌஸி மறுத்துவிட்டார்.

அயோத்தியை அபகரித்த விதம்

இவற்றையெல்லாம் விட அவர் அயோத்தியை அபகரித்த விதம் மிகவும் கொடூரமானது. அயோத்தி மன்னன் ஒழுங்காக ஆட்சி செலுத்தவில்லை என்ற காரணத்தைக்கொண்டு அதைக் கைப்பற்றினதாக டல்ஹௌஸி கூறினர்.

அரசாங்க விஷயங்களிலும் ஊக்கம் காட்டுதல்

டல்ஹௌஸி நாடுகளைக் கைப்பற்றுவதில் எவ்வாறு ஊக்கத்தைச் செலுத்தினரோ, அவ்வாறே அரசாங்க விஷயங்களிலும் ஊக்கம் கொண்டிருந்தார். இவர் விவசாயிகளுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் அளித்தார். இந்தியாவில் மராமத்து இலாகாவை ஏற்படுத்தியவர் இவரேயாவர். இவர் கல்விக்கெனவும் மிகவும் பாடுபட்டுக் கல்வி சம்பந்தமான விஷயங்களைக் கவனிப்பதற்கென ஒரு உத்தியோகஸ்தரை நியமித்தார்.

புதிய வசதிகள்

டல்ஹௌஸி காலத்தில் மக்களுக்கென பல புதிய சௌகரியங்கள் ஏற்படலாயின. இதுவரையிலும் நடந்தும், வண்டிகளிலும் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஜனங்களுக்கு ஒரு புதிய வசதி அளிக்கப்பட்டது. இருப்புப்பாதைகள் போடப்பட்டதே இப் புதிய வசதி யாகும். முதன் முதலாக 1853-ம் வருஷம் பம்பாயும், தாண என்ற ஊரும் இருப்புப் பாதையினல் இணைக்கப்பட்டன. இருப்புப் பாதைகள் அதிகரித்ததனுல் அநேக நன்மைகள் விளைந்தன. கலகம் ஏற்பட்ட காலங்களில் ஓரிடத்திலிருந்து மற்ருெரு இடத்திற்குச் சைனியத்தைச் சீக்கிரத்தில் அனுப்புவது இதனல்

சாத்தியமாயிற்று. பஞ்ச காலங்களிலும் நாட்டின் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்திற்குத் தாமதமின்றி உதவி அனுப்புவது சாத்தியமாயிற்று. உள்நாட்டு வியாபாரம் விருத்தி யடைவதற்கும் இருப்புப் பாதைகள் அனுகூலமாயிருந்தன.

தந்தி—தபால்

டல்ஹௌஸி காலத்தில் முதன் முதலாகத் தந்தி ஏற்பட்டது. இதனால் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு விரைவில் செய்தி அனுப்புவது சுலபமாயிற்று. இவர் காலத்தில் தபால் இலாகாவும் பெரிதும் விருத்தி யடைந்தது.

முக்கிய வருஷங்கள்

கி. பி.	1848—1856.	டல்ஹௌஸி கவர்னர் ஜெனரலாக இருந்த காலம்.
,,	1848—1849.	இரண்டாவது சீக்கிய யுத்தம்.
,,	1848.	பஞ்சாப் ஆங்கிலேயர் வசம் வருதல்.
,,	1849.	ஸதாரா ஆங்கிலேயர் ஆட்சிக்குக் கீழ் வருதல்.
,,	1852.	இரண்டாவது பர்மிய யுத்தம்.
,,	1856.	அயோத்தியைக் கைப்பற்றுதல்.

14. விக்டோரியா மஹாராணியார் சக்கரவர்த்தினியானது

மஹாராணியார்—இந்திய சக்கரவர்த்தினி—சிப்பாய்க் கலகத்தின் காரணங்கள்—எதை நோக்கினும் சந்தேகம்—சிப்பாய்க் கலகம் அடக்கப் படுதல்—ஆங்கிலேயர் மனதில் அச்சம்—ராணியாரின் உறுதிமொழிச் சாசனம்.

மஹாராணியார்—இந்திய சக்கரவர்த்தினி

பலகாலம் கம்பெனியாரின் ஆட்சியின் கீழ் இருந்து வந்த நம்தேசம் 1858-ம் வருஷம் இங்கிலாந்து அரசியான விக்டோரியா மகாராணியாருடைய ஆட்சியின் கீழ்வந்தது. இவ்வாறு வருவதற்குக் காரணம் இல்லாமலில்லை.



சிப்பாய்க் கலகத்தை விளக்கும் படம்

சிப்பாய்க் கலகத்தின் காரணங்கள்

டல்ஹௌஸி அரசாங்க விஷயங்களில் கையாண்டமுறை எங்கும் விரோதத்தை உண்டு பண்ணிற்று. அவர் பல நாடுகளைக் கைப்பற்றுவதற்கென அனுஷ்டித்த முறையை யாவரும் சரியானதாக ஒப்புக்கொள்ளவில்லை; அதை அக்கிரமம் என்றே கருதினர்.

அவர் அயோத்தி விஷயத்தில் நடந்துகொண்டது யாவருடைய கோபத்தையும் அதிகரிக்கச் செய்தது என்று முன்னமேயே அறிந்துகொண்டோம். கடைசியாக மஹாராஷ்டிர அரசருக்கு உபகாரச் சம்பளம் இல்லை என்று அவர் கூறியதனால் மஹாராஷ்டிரர்களுடைய விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டார். இவற்றை யெல்லாம் விட இவர் ஜான்ஸி அரசியான லக்ஷ்மீபாயின் அரசாங்க விவகாரங்களில் தலையிட்டது நாட்டில் எங்கும் பரபரப்பை உண்டு பண்ணிற்று.

எதை நோக்கினும் சந்தேகம்

டல்ஹௌஸி காலத்தில் புகை வண்டிகள் முதலிய புதிய போக்குவரத்து சாதனங்கள் ஏற்பட்டன என்று அறிந்து கொண்டோம். இவை ஜனங்களுக்குப் பெரிதும் நன்மைகள் அளித்தபோதிலும் பலருடைய மனதில் இவை ஏற்பட்டதன் பயனாகப் பல சந்தேகங்கள் எழுந்தன. புகை வண்டியில் ஜாதிமத பேதமின்றி யாவரும் உட்காரவேண்டிய அவசியம் ஏற்பட்டதால் வைதிகர்கள் பெருங் கூக்குரலிட்டனர். ஹிந்து மதத்தை ஒழிக்க இவ்வழியை ஆங்கிலேயர் பின்பற்றுகின்றனர் போலும் என்று அவர்கள் கூறினர். இவ்வாறு யாவருடைய மனதிலும் கம்பெனியாரின் ஒவ்வொரு செய்கையும் சந்தேகத்தைக் கிளப்பிக் கொண்டேயிருந்தது. இச்சமயத்தில் ஆங்கிலேயர்கள் இந்திய சிப்பாய்களைக் கொழுப்புத் தடவிய தோட்டாக்களையே துப்பாக்கிகளுக்கு உபயோகிக்குமாறு வற்புறுத்தினர். இதனால் ஹிந்து சிப்பாய்களுடைய மனதிலும் முகம்மதிய சிப்பாய்களுடைய மனதிலும் சந்தேகங்கள் எழுந்தன. தோட்டாக்களில் பன்றியின் கொழுப்பும் பசுவின்கொழுப்

பும் தடவியிருப்பதாக யாவரும் கூறினர். முகம்மதியர் பன்றியை அசுத்தமான மிருகம் என்று கருதியுள்ளபடியால் அவர்கள் அத்தோட்டாக்களைத் தொடுவதற்கும் மறுத்தனர். ஹிந்துக்களும் பசுவைத் தெய்வமாகப் பாவிப்பதால் அத்தோட்டாக்களைத் தொடுவதற்கு மறுத்தனர். இக்காரணத்தினுலும், முன்னர்கூறிய பல சந்தர்ப்பங்களின் பயனுகவும் அவர்களுக்கு ஆங்கிலேயரிடமிருந்த வெறுப்பினுலும் சிப்பாய்கள் கலகம் செய்தனர். இதையே சிப்பாய்க் கலகம் என்று கூறுவதுண்டு. முதலில் மீரட்டிலிருந்த சிப்பாய்கள் பெருங்கலகத்தைச் செய்தார்கள்.

சிப்பாய்க் கலகம் அடக்கப்படுதல்

இவர்கள் மீரட்டிலிருந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களைச் சுட்டுக் கொன்றனர். இவ்வாறு கலகம் வட இந்தியா முழுவதும் பரவ ஆரம்பித்தது. பாஜிராவின் மகனுன நானுசாகிப் என்பவர் ஆங்கிலேயர்களுக்கு விரோதமாகக் கலகத்தை அதிகரிக்கச்செய்து கொண்டிருந்தார். ஜான்ஸி மஹாராணியாரான லக்ஷ்மீபாயும் ஆங்கிலேயருக்கு விரோதமாகக் கலகம் செய்துகொண்டிருந்தார். இக்காலத்தில் ஆயிரக்கணக்கான ஆங்கிலேயர்கள் மாண்டனர். கலகக்காரர்கள் டில்லியைக் கைப்பற்றி டில்லியிலிருந்த **பகதூர்ஷா** என்பவரை மொகலாய சக்கரவர்த்தியாக முடிசூட்டினர். பகதூர்ஷா மொகலாய பரம்பரையில் தோன்றியவராயிருந்த போதிலும் தமக்கு அரசாளும் பாக்கியம் கிட்டுமென்று அவர் எதிர்பார்க்கவேயில்லை. கலகக்காரர்கள் அவருக்கு முடி சூட்டும்போது அவருக்கு வயது எண்பது. இதற்குள் ஆங்கிலேயர்கள் மிகுந்த பிரயாசையுடன் கலகத்தின் மூல இடங்களான கான்பூர், லக்னௌ

முதலியவற்றில் கலகத்தை அடக்க ஆரம்பித்தனர். இதன் பிறகு நேபாள மன்னர் தம்முடைய பெருஞ்சைனியத்தை ஆங்கிலேயருக்குக் கொடுத்து உதவினர். இதைக் கொண்டு ஆங்கிலேயர்கள் நானாசாகிபையும் அவருக்கு உடந்தையாயிருந்த **டான்ஷியா டோபி** என்பவரையும் எதிர்த்துத் தோற்கடித்து விட்டுப் பிறகு ஜான்ஸி அரசியை எதிர்த்துக் கொன்றனர். பகதூர்ஷா பிடிபடவும், நானாசாகிபும், லக்ஷ்மீபாயும் செய்த முயற்சிகள் வீணாகவுமே கலகக்காரர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இதன் பிறகு ஆங்கிலேயர்கள் திரும்பவும் சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டில் ஒழுங்கை நிலை நிறுத்தினர்.

ஆங்கிலேயர் மனதில் அச்சம்

இக்கலகம் விளைந்த விவரம் இங்கிலாந்தில் பரவிற்று. இது ஆங்கிலேயர் மனதில் பெரும் அச்சத்தை உண்டு பண்ணிற்று. "இனிமேல் கம்பெனியார்கள் இந்தியாவில் ஆட்சி செலுத்துவது சரியன்று," என்று யாவரும் கூறினர். ஆகவே 1858-ம் வருஷம் கம்பெனியாரின் ஆட்சியை ஒழிக்க ஒரு சட்டம் ஏற்படுத்தப் பட்டது. இதன் பிரகாரம் இந்திய ஆட்சி **செக்ரேடரி அப் ஸ்டேட்** என்ற ஆங்கில அரசரின் அதிகாரியின் வசம் ஒப்புவிக்கப்பட்டது. கம்பெனியின் ஆட்சி அடியோடு ஒழிக்கப்பட்டது.

ராணியாரின் உறுதிமொழிச் சாஸனம்

இந்தியாவில் ராணியாருக்குப் பதிலாக ஆளுவதற்காக **வைஸ்ராய்** என்ற ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டார். அப்பொழுது கவர்னர் ஜெனரலாக இருந்த **கானிங்** பிரபு முதல் வைஸ்ராயாக நியமிக்கப்பட்டார். விக்டோரியா மஹா

ராணியார் தம்முடைய ஆட்சியின் கீழ் இந்தியக் குடி மக்களுக்கு ஒருவித குறையும் வராது என்பதைத் தெரிவிப்பதற்கென ஒரு சாஸனத்தை விடுத்தார். அதன் பிரகாரம் கலகத்தில் கலந்துகொண்ட யாவருக்கும் மன்னிப்பு அளிக்கப்பட்டது.

இந்திய ஜனங்களின் மத விஷயங்களில் தாம் தலையிடுவதில்லை என ராணியார் வாக்களித்தார். இந்திய சமஸ்தானங்களின் அரசர்களுடைய உரிமைகள் யாவற்றையும் தாம் காப்பாற்றுவதாகவும் அறிக்கைசெய்தார். இனி இந்தியாவில் ஆங்கிலேயர் புதிய நாடுகளைக் கைப்பற்றுவதில்லை என்றும் அறிவித்தார். "குடிகளின் சந்தோஷமே எமது பலமாகும். அவர்கள் திருப்தியாயிருப்பதே எமது பாதுகாப்பு. அவர்கள் நன்றி விசுவாசம் பாராட்டினல் அதுவே எமது வெகுமதியாகும்" என்று மஹாராணியார் தம்முடைய சாஸனத்தை முடித்தார்.



விக்டோரியா

முக்கிய வருஷங்கள்


கி. பி. 1856—1858.	கானிங் கவர்னர் ஜெனரலாக இருத்தல்.
,, 1857—1858.	சிப்பாய்க் கலகம்.
,, 1858.	கலகம் அடக்கப் படுதல்.
	மஹாராணியாரின் சாஸனம்—கம்பெனியாரின் ஆட்சி முடிவு.
	கானிங் வைஸ்ராயாக ஆதல்.

15. கானிங் பிரபு

பணக்கஷ்டம் ஒருவாறு நீங்குதல்—சைனியம் ஒழுங்கு பெற அமைதல்—ஹைகோர்ட்டுகள்—உயர்தரக் கல்வி.

பணக்கஷ்டம் ஒருவாறு நீங்குதல்

இதுவரையிலும் கவர்னர் ஜெனரலாக இருந்த கானிங் இந்தியாவின் முதல் வைஸ்ராயாக ஆன விவரத்தை முன்னமேயே அறிந்து கொண்டீர்கள். சிப்பாய்க் கலகத்தினால் பல கெடுதிகள் விளைந்தன. அவற்றைப் போக்குவதற்காகக் கானிங் மிகவும் பாடுபட்டார். முதலில், அரசாங்கத்தாருக்கு ஏற்பட்டிருந்த பணக்கஷ்டத்தைப் போக்குவதற்காகப் பல சீர்திருத்தங்களைச் செய்தார். சைனியத்திற்காக அரசாங்கத்தார் அதுவரையில் மிகுந்த பணம் செலவு செய்து வந்தனர். கானிங் அச்செலவைக் குறைத்தார். வருமானவரி என்ற புதிய வரியை விதித்தார். அரசாங்கத்தில் எல்லா உத்தியோகஸ்தர்களையும் செட்டாக இருக்கும்படி வற்புறுத்தினார். இதனால் அரசாங்கத்தாருக்கு ஏற்பட்டிருந்த பணக்கஷ்டம் ஒருவாறு நீங்கிற்று.




கானிங்

சைனியம் ஒழுங்குபெற அமைதல்

இந்தியாவிலிருந்த சைனியத்தையும் கானிங் ஒழுங்கு பெற அமைத்தார். ஒவ்வொரு மாகாணத்தில் தனித்தனி சைனியத்தை ஏற்படுத்தினர். அதை ஆங்கில உத்தியோகஸ்தரிடம் ஒப்புவித்தார்.

ஹைகோர்ட்டுகள்

வங்காளத்தில் இதுவரையிலும் இருந்துவந்த உயர்தர நீதிஸ்தலங்களை எடுத்துவிட்டு ஒவ்வொரு மாகாணத்திலும்



ஹைகோர்ட்டு (சென்னை)

தனித்தனி ஒரு ஹைகோர்ட்டை ஏற்படுத்தினர். இதையும் தவிர, ஒவ்வொரு மாகாணத்திலும் சட்டசபை ஒன்றை ஏற்படுத்தினர். இதில் இந்தியர்களையும் அங்கத்தினராகச் சேர்த்துக்கொண்டார்.

உயர்தரக் கல்வி

கானிங் உயர்தரக் கல்வியைப் பரப்புவதற்காக மிகவும் பிரயாசை எடுத்துக்கொண்டார். இவர் காலத்தில்

தான் கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய இடங்களில் சர்வகலாசாலைகள் ஏற்பட்டன. சர்வகலாசாலைகள் ஏற்படவே, உயர்தரக் கல்வியும் அபிவிருத்தியடைய ஆரம்பித்தது.

நான்கு வருஷகாலம் வைஸ்ராய் பதவியை வகித்து விட்டு 1862-ம் வருஷம் காநிங் இங்கிலாந்துக்குத் திரும்பினார். அவ்வளவு சீக்கிரத்தில் இவர் நாட்டில் அமைதியை ஏற்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்கெனப் பல சீர் திருத்தங்களைச் செய்தது இவருடைய மேன்மையைக் குறிக்கும்.

முக்கிய வருஷங்கள்

கி.பி. 1858—1862. காநிங் பிரபு வைஸ்ராயாக இருந்தகாலம்.

16. காநிங்குக்குப் பிறகு வந்த வைஸ்ராய்கள்

எல்ஜின் பிரபு — லாரென்ஸ் பிரபு — பூடானுடன் யுத்தம்—மேயோ பிரபு—மாகாண வருமான திட்டம்—ரஷ்யர் பயமுறுத்தல்—ஆப்கானியருடன் நட்பு—சமஸ்தான விவகாரங்கள் — சிறை வாசிகளின் துன்பங்களை நீக்க முயற்சி.

எல்ஜின் பிரபு

காநிங்குக்குப் பிறகு **எல்ஜின்** என்பவர் சிறிதுகாலம் வைஸ்ராயாக இருந்தார். இவர்காலத்தில் இந்தியாவின் வடமேற்குபாகத்தில் வசித்துவந்த மலைஜாதியினர் கலகம் செய்தனர். அவர்களை எல்ஜின் பிரபு அடக்கிச் சமாதானம் நிலவும்படி செய்தார். அதுவுமல்லாமல் அவ்வகுப்பினர்களை ஆங்கிலேயருடைய சிறந்த நண்பர்களாக ஆக்கினார்.

லாரேன்ஸ் பிரபு

எல்ஜின் பிரபுவுக்குப் பிறகு வந்த லாரென்ஸ் பிரபு என்பவர் சாமர்த்தியம் வாய்ந்தவர். இவர் வைஸ்ராயாக வந்தவுடன் ஜனங்களின் நன்மையைக் குறித்து மிகவும் பாடுபட்டார். இவர் வைஸ்ராயாக வந்த இரண்டு வருஷங்களுக்குள் ஒரிஸ்ஸாவில் ஒரு பெரிய பஞ்சம் ஏற்பட்டது. இதனுல் பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் தவித்தனர். லாரென்ஸ் பிரபு கஷ்டப்படும் ஜனங்களுக்கு மற்ற மாகாணங்களிலிருந்து ஆகாரப் பொருள்களைத் தாமதமின்றிக் கொண்டு சேர்ப்பதற்கென போக்குவரவு சாதனங்களை அபிவிருத்தி செய்தார். ஜலக்கஷ்டமில்லாமல் இருப்பதற்காக நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தினுர். பல கால்வாய்களை வெட்டினுர். இவர் செய்த முயற்சியினுல் பஞ்சம் அதிக காலம் நீடிக்காமல் நின்றது.

லாரென்ஸ் ஆப்கானிய அரசரோடு நேசம் பாராட்டி அவருடைய உதவியைப் பெற்றுர். ஆயினும்அவர் பூடான் தேசத்தோடு சண்டை செய்யும்படி நேர்ந்தது.

பூடானுடன் யுத்தம்

பூடான் என்ற பிரதேசம் ஹிமாலயத்தின் கிழக்கு பாகத்தில் உள்ளது. அது திபேத்தியருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. பூடான் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி பிரிட்டிஷ் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த எல்லையில் உபத்திரவம் செய்தனர். லாரென்ஸ் பிரபு பூடானியர்களை எதிர்த்துச் சண்டை செய்து அவர்களை அடக்கினுர். இதன் பிறகு பூடானியரிடமிருந்து சில நாடுகளைக் கைப்பற்றி, பூடானியருடன் சமாதானம் செய்து கொண்டார்.

லாரென்ஸ் வைஸ்ராயாக இருந்தபொழுது இருப்புப் பாதைகள் அதிகரித்தன. தபால் கட்டணங்கள் குறைந்தன. உத்தியோகஸ்தர்களுடைய சம்பளங்கள் அதிகரித்தன. சிறிது காலம் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டிருந்தபோதிலும் பொதுவாக ஜனங்கள் சந்தோஷமாகவே இருந்தார்கள்.

மேயோ பிரபு

லாரென்ஸ் பிரபுவுக்குப் பிறகு வைஸ்ராயாக வந்தவர் **மேயோ** என்பவராவர். இவர் கம்பீரமான தோற்றத்தை உடையவர்; ஜனங்களிடம் நன்ருகப் பழகக்கூடிய தன்மை வாய்ந்தவர். ஆகவே இவருடன் யாவரும் ஒத்துழைத்தது அதிசயமில்லை.

மாகாண வருமான திட்டம்

மேயோ பதவி வகித்தபோது பல சீர் திருத்தங்களைச் செய்தார். இவர் காலத்தில்தான் விவசாய இலாகா ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இது இன்றைக்கும் விவசாய சம்பந்தமான விஷயங்களைக் கவனித்து வருகிறது. இவர் காலத்தில் பல இருப்புப் பாதைகளும் ரஸ்தாக்களும் அமைக்கப் பட்டன. ஆனல் இவற்றை எல்லாம் விட அவர் ஏற்படுத்திய **மாகாண வருமான திட்டம்** என்ற சீர்திருத்தமே முக்கியமானது ஆகும். இதுவரையிலும் மாகாணங்கள் வரவு செலவு சம்பந்தமான கணக்குகளை வைஸ்ராயிடமே அனுப்பிக்கவேண்டியிருந்தது. செலவு விஷயங்களில் மாகாண கவர்னருக்கு ஒரு அதிகாரமும் இல்லை. மொத்த வருமானத்தில் ஒவ்வொரு மாகாணமும் இவ்வளவுதான் செலவு செய்யலாம் என்பதை வைஸ்ராய் நிர்ணயம் செய்தார். மேலும் மாகாணத்தில் செலவு செய்தது போக வரு

ஷக் கடைசியில் மிகுந்திருந்த பணத்தை மத்திய அர சாங்கத்தாருக்கு அனுப்புவதை விட, அரசாங்கத்தார் கொடுப்பதை எல்லாம் செலவழித்து விடுவதே நலம் என்று மாகாண அதிகாரிகள் கருதினர். இதனல் மாகாண அதி காரிகள் செட்டாக அரசாங்கத்தை நடத்துவதை விட்டு அதிக செலவு செய்ய ஆரம்பித்தனர். ஒவ்வொரு மாகா ணத்திலும் வருஷக் கடைசியில் செலவுக்குப் பிறகு மிகுதி யிருந்த பணத்தை மத்திய சர்க்காருக்கு அனுப்பாமல் அதை மாகாணத்திற்கென்றே வைத்துக்கொள்ளலாம் என்று மேயோ ஏற்படுத்தினர். இதனல் மாகாண அதி காரிகள் செலவைக் குறைத்ததுடன் தக்க சமயங்களில் மாகாணத்தில் உபயோகப் படுத்துவதற்கென ஒரு நிதியை யும் ஏற்படுத்தினர்கள்.

ரஷ்யர் பயமுறுத்தல்—ஆப்கானியருடன் நட்பு

மேயோ பிரபு ஆப்கானிய அரசரோடு நட்புக்கொண் டிருந்தார். பலகாலம் இந்தியாவின்மீது படையெடுக்கப் போவதாகப் பயமுறுத்திக் கொண்டிருந்த ரஷ்யர் அக்கா லத்தில் படையெடுக்கக் கூடுமெனத் தோன்றலாயிற்று. ஆகவே மேயோ பிரபு ஆப்கானிய அமீரான **ஷேர் அலி** என்பவரைச் சந்தித்து ரஷ்யர்கள் இந்தியாவை நோக்கி வந்தால் அவர்களைத் தடுத்துவிடுமாறு கேட்டுக்கொண்டார். ஷெர் அலியும் தம்மாலான உதவியைச் செய்வதாக வாக் களித்தார்.

சமஸ்தான விவகாரங்கள்

மேயோ பிரபு, பொதுவாக சமஸ்தான அரசர்களுடன் நட்புக் கொண்டிருந்தபோதிலும் சில சமஸ்தானங்களின்

விவகாரங்களில் தலையிடும்படி நேர்ந்தது. ஆள்வார் என்ற நாட்டின் அரசர் ஒழுங்காக ஆட்சி செலுத்தவில்லை. அவரை அரச பதவியிலிருந்து நீக்கி, அவருக்குப் பதிலாக ஆள்வார் சமஸ்தானத்தை ஒரு சபையின் ஆட்சிக்குக் கீழ் கொண்டுவந்தார்.

சிறைவாசிகளின் துன்பங்களை நீக்க முயற்சி

மேயோ பிரபு தாழ்ந்த ஜனங்களின் நன்மைக்கெனப் பெரிதும் பாடுபட்டார். அவர் சிறைவாசிகள் அனுபவிக்க வேண்டியிருந்த பல கஷ்டங்களை நீக்கி, அவர்களை ஒழுங்காக நடத்தும்படி செய்வதற்கெனப் பல முயற்சிகள் செய்தார். இதற்காகவே ஒரு சமயம் அவர் அந்தமான் தீவுக்குச் சென்றார். ஆனால் அதிலிருந்து அவர் திரும்பி வரவில்லை. ஏனெனில் அவரை மதவெறிகொண்ட மூர்க்கனொருவன் கொன்றுவிட்டான்.

முக்கிய வருஷங்கள்

கி.பி.	1862—1863.	எல்ஜின் வைஸ்ராயாக இருந்த காலம்.
,,	1864—1869.	லாரென்ஸ் வைஸ்ராயாக இருந்த காலம்.
,,	1864.	பூடானியர்களுடன் யுத்தம்.
,,	1866.	ஒரிஸ்ஸாவில் பஞ்சம்.
,,	1869.	மேயோ வைஸ்ராயாக இருந்த காலம்.
		ஆப்கானிய அமீருடன் ஏற்பாடு.

17. இரண்டாவது ஆப்கானிய யுத்தம்

நார்த்புரூக் பிரபு—லிட்டன் பிரபு—நாடெங்கும் பஞ்சம்—ராஜத்துரோகமான பத்திரிகைகளை அடக்குதல்—இரண்டாவது ஆப்கானிய யுத்தம்—மூன்றாவது ஆப்கானிய யுத்தம்.

நார்த்புரூக் பிரபு—லிட்டன் பிரபு



லிட்டன்

மேயோவுக்குப் பிறகு வந்த வைஸ்ராய்கள் அன்னிய நாடுகளின் விஷயங்களில் தலையிடாமலிருந்து வந்தார்கள். நார்த்புரூக் என்பவர் கவர்னர் ஜெனரலாகஇருந்த காலத்தில் ரஷ்யர்கள் இந்தியாவின் மீது படை யெடுக்கப் போவதாக மறுபடியும் பயமுறுத்தினர். நார்த்புரூக் பிரபுவுக்கு ஆப்கானியருடைய உதவி இருந்த படியினால் அவர் இந்தபயமுறுத்தலுக்குப் பயப்பட வில்லை. இவருக்குப் பிறகு வந்த லிட்டன் என்பவர் மிகுந்த படிப்பாளி. மேலும் அரசாங்க விஷயங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

நாடெங்கும் பஞ்சம்

இவர் வைஸ்ராயாக வந்த காலத்தில் நாடெங்கும் பஞ்சம் ஏற்பட்டது. லிட்டன் அப்பஞ்சத்தின் கொடுமைகள்

அதிகரிக்காவண்ணம் பல முறைகளைக் கையாண்டு குடிக ளுக்கு நன்மைகளைச் செய்தார்.

ராஜத்துரோகமான பத்திரிகைகளை அடக்குதல்

லிட்டன் காலத்தில் ரஷ்யர்களுக்கும் துருக்கி தேசத் தவர்களுக்குமிடையே ஒரு சண்டை ஏற்பட்டது. இக் காலத்தில் ரஷ்யாவை ஆதரித்துப் பல இந்தியர்கள் பத்திரி கைகளில் ராஜத்துரோகமான பல விஷயங்களை எழுதினர் கள். இதைத் தடுப்பதற்காக லிட்டன் ஒரு சட்டம் ஏற் படுத்தினர். இதன் பிரகாரம் எந்தப் பத்திரிகையும் அரசாங் கத்தாரைத் தூஷிக்கும் கட்டுரைகளைப் பிரசுரம் செய்வது கூடாது என்ற விதி வற்புறுத்தப் பட்டது. ஆனால் பொது மக்கள் இதை ஆதரிக்கவில்லை.

இரண்டாவது ஆப்கானிய யுத்தம்

லிட்டன் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் யாவற்றி லும் ஆப்கானிய யுத்தமே முக்கியமானதாகும். இந்த யுத்தத்தின் முக்கிய காரணங்களாவன: அடிக்கடி பய முறுத்திக் கொண்டிருந்த ரஷ்யர்கள் இந்தியாவின்மீது கட்டாயம் படையெடுப்பதாகத் தீர்மானித்தனர். அவ் வாறு தீர்மானித்ததற்குச் சந்தர்ப்பங்களும் அனுகூலமா யிருந்தன. ஏனெனில், அதற்குச் சில காலத்திற்கு முன்பு அவர்கள் துருக்கியர்களோடு செய்த யுத்தத்தில் வெற்றி யடைந்திருந்தனர். அவ்வெற்றி அவர்களை வேறு தேசங் களையும் எதிர்க்குமாறு தூண்டிற்று. ஆகவே லிட்டன் பிரபு இந்தியாவின் பாதுகாப்புக்கென பல ஏற்பாடு களைச் செய்ய ஆரம்பித்தார். இவற்றினல் பல நாடு களின் விவகாரங்களில் தலையிட நேர்ந்தது. முக்கியமாக ஆப்கானிஸ்தான விஷயங்களில் அவர் பெரிதும் தலையிட

நேர்ந்தது. **1876-ம்** வருஷம் ஆப்காலிஸ்தானத்துக்குச் சொந்தமாயிருந்த குவெட்டா என்னுமிடத்தில் லிட்டன் ஒரு சைனியத்தை வைத்திருந்தார். இது ஆப்கானிய அமீரான ஷெர் அலிக்குக் கோபத்தை உண்டு பண்ணியது. மேலும் ஷெர் அலி தமது நடத்தையினுல் ரஷ்யர்களுக்கே

ஆப்கானிய யுத்தங்களை விவரிக்கும் படம்



உதவி புரிவார்போல் காணப்பட்டார். அவர், ஒரு சமயம் அவருடைய நாட்டிற்கு ஆங்கிலேய தூதுவராக அனுப்பப் பட்ட **ஸர் நெவில் சேம்பர்லின்** என்பவரை அவமானப் படுத்தினர். இவற்றையெல்லாம் பொறுக்கமுடியாத லிட்டன் பிரபு ஆப்கானிய அமீர் மீது யுத்தம் தொடங்கினர். சிறிது காலத்தில் **காண்டகார், ஜலாலாபாத்** முதலிய பிரதேசங்

களைக் கைப்பற்றினர். ஷேர் அலி ரஷ்யர்களாலும் கைவிடப்பட்டு நாட்டைவிட்டு ஓடி இறந்தார். அதன் பிறகு லிட்டன் பிரபு அவருடைய புதல்வரான **யாகுப்கான்** என்பவரை அமீராக ஒப்புக்கொண்டார். அவருடன் ஒரு ஒப்பந்தமும் செய்துகொண்டார். அதன் பிரகாரம் அமீரிடமிருந்து கைப்பற்றிய பிரதேசங்களை ஆங்கிலேயர் திருப்பிக் கொடுத்தார். வடமேற்குக் கணவாய்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அமீரிடமிருந்து ஆங்கிலேயர்கள் ஏற்றுக்கொண்டனர். இந்த ஒப்பந்தத்தினல் ஆப்கானிஸ்தானத்தில் ஆங்கிலேயருடைய செல்வாக்கு ஓங்கிற்று.

மூன்ருவது ஆப்கானிய யுத்தம்

ஆயினும் இந்த ஒப்பந்தத்தினல் ஏற்பட்ட சமாதானம் அதிக காலம் நீடிக்கவில்லை. ஆங்கிலேயரை வெறுத்த ஆப்கானிய குடிகள் காபூலில் இருந்த ஆங்கிலேயர்களைக் கொலை செய்தனர். இதனல் மறுபடியும் சண்டை மூண்டது. இதை மூன்ருவது ஆப்கானிய யுத்தம் என்று கூறுவதுண்டு. யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போதே லிட்டன் பிரபு மனம் நொந்து வேலையிலிருந்து விலகினர். இங்கிலாந்தில் இந்திய விஷயங்களைக் கவனித்து வந்த அதிகாரிகளும், ரிப்பன் என்பவரை இந்தியாவின் வைஸ்ராயாக நியமித்து, அவரை ஆப்கானிய யுத்தத்தை நிறுத்துமாறு கட்டளையிட்டு இந்தியாவுக்கு அனுப்பினர்.

முக்கிய வருஷங்கள்

கி.பி. 1872—1876.	நார்த்புரூக் வைஸ்ராயாக இருந்த காலம்.
,, 1873.	பீஹாரிலும் வங்காளத்திலும் பஞ்சம் ஏற்படுதல்.
,, 1876—1880.	லிட்டன் வைஸ்ராயாக இருந்த காலம்.
,, 1878—1880.	இரண்டாம் ஆப்கானிய யுத்தம்.

18. ரிப்பன் பிரபு

ஆப்கானிஸ்தானம்—மைசூரில் ஆங்கில அதிகாரம் முடிதல்—ஸ்தல சுய ஆட்சி—இந்தியர்களின் அந்தஸ்து ஓங்குதல்.

ஆப்கானிஸ்தானம்



ரிப்பன்

ரிப்பன் இந்தியாவை அடைந்ததும் ஆப்கானிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார். இவர் காலத்தில் **அப்துல் ரஹ்மான்** என்பவர் ஆப்கானிஸ்தானத்தில் அமீராக இருந்தார். இக்காலத்திலிருந்து ஆப்கானியர்கள் ஆங்கிலேயருடன் நட்புப் பாராட்டி வந்தனர். இவ்வாறு ஆப்கானியரோடு நிரந்தர சமாதானத்தை உண்டுபண்ணிய தன் பெருமை ரிப்பன் பிரபுவையே சேரும்.

மைசூரில் ஆங்கில அதிகாரம் முடிதல்

பலகாலம் ஆங்கிலேயர்களால் ஆளப்பட்டு வந்த மைசூர் சமஸ்தானத்தின் அரசவமிசத்தைச் சேர்ந்தவரை அரசராக்கிவிட்டு, மைசூரிலிருந்த ஆங்கில அதிகாரத்தை ஒழித்தார். விக்டோரியா மஹாராணியார் தம் சாசனத்தில் "இனிமேல் இந்தியாவில் நாடுகளைக் கைப்பற்றுவதில்லை" என்று உறுதி கூறினரல்லவா? அதற்கு ஏற்ப ரிப்பன் பிரபுவும் மைசூர் சமஸ்தானத்தில் செய்த ஏற்பாடுகள்

யாவருக்கும் திருப்தியை விளைத்தன. இவர் காலத்தில் தான் முதன் முதலாக ஜனத்தொகைக் கணக்கு எடுக்கப் பட்டது. தற்காலத்திலும்கூட, பத்து வருஷத்திற்கு ஒரு முறை இவ்வாறு கணக்கெடுத்து வருகிறார்கள்.

ஸ்தல சுய ஆட்சி

இவற்றை எல்லாம் விட ரிப்பன் ஜனங்களுக்கு அர சாங்க விவகாரங்களில் இடம் கொடுத்தது மிகவும் முக்கிய



சென்னை கார்ப்பொரேஷன் (ரிப்பன் கட்டடம்)

மாகும். இவர்காலத்தில் **ஸ்தல சுய ஆட்சிச் சட்டம்** என்ற ஒரு சட்டம் ஏற்பட்டது. இதன் பிரகாரம் ஜில்லாக்களின் விவகாரங்களும் நகரங்களின் விவகாரங்களும் பொது ஜனங்களின் பிரதிநிதி அடங்கிய சபைகளிடம் ஒப்புவிக்கப் பட்டன. இதுவரை பெரிய நகரங்களின் பரிபாலன சபைக்கு ஆங்கில உத்தியோகஸ்தரே தலைமை வகித்து

வந்தார். உத்தியோகஸ்தர் அல்லாத இந்தியர் தலைமை வகிக்கலாம் என்று இந்தச் சட்டத்தினால் ஏற்பட்டது.

இதனால் ஜனங்களுக்கு அரசாங்க விஷயங்களில் பயிற்சி ஏற்பட்டது. அவர்கள் அதில் அதிக ஊக்கமும் காட்ட ஆரம்பித்தனர். இதனால் அரசாங்கத்தாருக்குப் பொது ஜனங்களின் ஆதரவு கிடைத்தது. ஆகையினால் யாவரும் ரிப்பன் பிரபுவை இது விஷயமாகப் பாராட்டியது பெரிதல்ல.

இந்தியர்களின் அந்தஸ்து ஓங்குதல்

இதுவரையிலும் குற்றம் சாட்டப்பட்ட ஆங்கிலேயர்களை இந்தியர்கள் விசாரித்துத் தண்டிக்கக்கூடாது என்ற நிபந்தனை இருந்துவந்தது. ரிப்பன் பிரபு அதை ஒருவாறு நீக்கி இந்திய நியாயாதிபதிகளுக்கும் அந்த அதிகாரத்தைக் கொடுத்தார். இது அவர் இந்தியரிடம் வைத்திருந்த நம்பிக்கையையும் விசுவாசத்தையும் காட்டுகிறதல்லவா?

ரிப்பன் ஜனங்களின் கல்விக்கெனவும் பெரிதும் பாடுபட்டார். நாடெங்கும் கலாசாலைகளை ஏற்படுத்தினார். இவ்வாறு நான்கு வருஷகாலம் வைஸ்ராயாக இருந்துவிட்டு 1884-ம் வருஷம் பதவியினின்றும் நீங்கினார். யாவரும் அவரைப் பாராட்டிப் புகழ்ந்தனர். இந்தியர்களும், அவரிடம் காண்பித்த விசுவாசத்தைப்போல், வேறு ஒரு ஆங்கிலேயரிடமும் காண்பித்ததில்லை. அவர் தங்களுக்குச் செய்த நன்மைகளை யெல்லாம் குறித்து அவரைத் தங்களுடைய தந்தையெனக் கருதினர். **எங்கள் அப்பன்** என்ற விசுவாசப் பெயரையும் அவருக்கு இட்டனர்.

முக்கிய வருஷங்கள்

கி. பி. 1880—1884. ரிப்பன் வைஸ்ராயாக இருந்த காலம்.

கி. பி. 1881. மைசூரைத் திரும்பவும் ஹிந்து அரசரிடம் ஒப்புவித்தல்.

,, 1882. ஸ்தல சுய ஆட்சிச் சட்டம்.

19. கர்ஸன் பிரபு

இந்தியன் நேஷனல் காங்கிரஸ்—வடபர்மா இந்திய ராஜ்யத்தோடு சேருதல்—லான்ஸ்டௌன் பிரபு—பஞ்சமும் பூகம்பமும்—கர்ஸன் பிரபு—அமீருடன் நட்பு—வடமேற்கு எல்லை மாகாணம்—ஆப்கானிஸ்தான விஷயமாகக் கையாண்ட கொள்கைகள்—பீராரைப் பெறுதல்—வங்காளத்தைப் பிரித்தல்—லாமாவுடன் சச்சரவு—பல சீர்திருத்தங்கள்—கல்வி அபிவிருத்தி.

இந்தியன் நேஷனல் காங்கிரஸ்

ரிப்பன் பிரபுவுக்குப் பிறகு **டப்ரீன்** பிரபு என்பவர் இந்தியாவின் வைஸ்ராய் ஆனார். இவர் காலத்தில்தான் விக்டோரியா மஹாராணியாரின் ஆட்சியின் பொன்விழா நாடெங்கும் கொண்டாடப்பட்டது. இவர் காலத்தில்தான் **இந்தியன் நேஷனல் காங்கிரஸ்** என்னும் இந்தியாவின் பெரும் சபை முதன் முதல் கூடிற்று. இவர் காலத்தில் குடிகளின் பல குறைகள் நீக்கப்பட்டன.

வடபர்மா இந்திய ராஜ்யத்தோடு சேருதல்

டப்ரீன் பிரபு பர்மியரோடு சண்டைசெய்து வடபர்மா முழுவதையும் இந்திய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டு அதை ஒரு மாகாணமாக ஆக்கினார்.

லான்ஸ்டௌன் பிரபு

டப்ரீன் பிரபு பதவி வகித்திருந்த காலம் எவ்வாறு சிறந்திருந்ததோ அவ்வாறே அவருக்குப் பின் வந்தவரான **லான்ஸ்டௌன்** பிரபுவின் காலமும் சிறந்து விளங்கிற்று. இவர் காலத்தில் ஆப்கானியர் ஆங்கிலேயருடன் பெரிதும் நேசம் பாராட்டினர். குவெட்டா ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிற்று.

பஞ்சமும் பூகம்பமும்

லான்ஸ்டௌன் பிரபுவுக்குப் பிறகு இரண்டாம் **எல்ஜின் பிரபு** வைஸ்ராய் ஆனார். இவர் காலத்தில் ஒரு பெரிய பஞ்சமும் பூகம்பமும் ஏற்பட்டன. அவற்றின் தீமைகளை அதிகரிக்காமல் செய்தது இவருடைய மேன்மையை விளக்கும்.

கர்ஸன் பிரபு

எல்ஜினுக்குப் பிறகு வந்த **கர்ஸன் பிரபு** கிழக்கு நாடுகளின் விவகாரங்களை நன்கு அறிந்தவர். அரசாங்க விவகாரங்களில் நிபுணர். எல்லா விவகாரங்களையும் தாமாகவே அறிந்துகொண்டு அவற்றைத் தகுந்த முறையில் கையாளக்கூடிய சாமர்த்தியம் பெற்றவர். ஆதலின் அவர் காலத்தில் அரசாங்கத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டது ஒருவருக்கும் வியப்பை அளிக்காது.

அமீருடன் நட்பு

1901-ம் வருஷம் ஹபிபுல்லா என்பவர் ஆப்கானிய அமீராக ஆனார். கர்ஸன் பிரபு அவருடன் நட்புப்பாராட்டி அவரைத் தனி அரசர் என மதித்து அவருக்கு **மாட்சிமை தாங்கிய அமீர்** என்ற பட்டத்தைச் சூட்டினார்.


வடமேற்கு எல்லை மாகாணம்

இதுவரையிலும் வடமேற்கில் ஆங்கிலேயர்கள் சேகரித்து வைத்திருந்த நாடுகளை ஒன்றாகச் சேர்த்து அவற்றை வடமேற்கு எல்லை மாகாணம் என ஆக்கினர். இதற்கு ஒரு கமிஷனரை அதிகாரியாக நியமித்தார்.

ஆப்கானிஸ்தான விஷயமாகக் கையாண்ட கோள்கைகள்

இதற்குள் ரஷ்யருடைய தொல்லை ஒழிந்திருந்தபோதிலும் வடமேற்கிலுள்ள பாதைகளின் பாதுகாப்புச் சம்பந்தமான பிரச்னை ஆங்கிலேயருக்கு மிகுந்த சிரமத்தைக்கொடுத்தது. ஏனெனில் சில சமயங்களில் இந்திய பாதுகாப்பின் பொருட்டு ஆப்கானியருடைய விவகாரங்களில் தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே ஆப்கானிஸ்தானத்தை ஆங்கிலேயருக்குக் கீழ்ப்பட்ட ராஜ்யமாக்கிவிடுவதா அல்லது ஆப்கானிஸ்தானத்தோடு ஒருவித சம்பந்தமும் வைத்துக்கொள்ளாமல் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்ட எல்லையில் சைனியம் ஒன்றை வைத்து அன்னிய விரோதி இந்தியாவிற்குள் வரமுடியாமல் தடுப்பதா என்பவற்றைத் தீர்மானம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இது விஷயமாகக் கர்ஸன் பிரபுவுக்கு முன்பு இருந்தவர்கள் இரு வழிகளையும் பின்பற்றி இருந்தனர். உதாரணமாக ஸர் ஜான் லாரென்ஸ் ஆப்கானிஸ்தான விஷயங்களில் தலையிட மறுத்துத்தலையிடாக்கொள்கை என்பதொன்றை ஸ்தாபித்தார். நட்பினலேயே ஆப்கானியரின் உதவியை நாட வேண்டுமென்பது அவருடையநோக்கம். ஆப்கானியருடைய நட்புடன் ஆங்கில எல்லைப் புறத்தில் ஒரு சைனியமும் வைத்திருந்தால் போதுமான தென்றறிந்தார். இது அவருக்கு நல்ல பலனை அளித்தது. ஆனல் லிட்டன் போன்றவர்கள்


வேறுவித கொள்கைகளைப் பின்பற்றினர். எல்லாக் கணவாய்களையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றி அமீரையும் ஆங்கிலேயருடைய பாதுகாப்பில் வைப்பதே சிறந்த மார்க்கமாகுமென இவர்கள் கருதினர். ஆனால் இவ்வித கொள்



வடமேற்கு எல்லைப்பிரதேசம்

கையை அனுசரிப்பதில் பல தடங்கல்கள் இருந்தன. அமீர் ஆங்கிலேயருக்குக் கீழ்ப்பட ஒப்புக்கொள்வாரா என்பது முதலில் கவனிக்கவேண்டிய விஷயம். அவ்வாறு சம்மதித்தாலும் எல்லாக்கணவாய்களையும், அவற்றின் பாதைகளையும்

பாதுகாப்பது சுலபமா? ஆங்கிலேயரில் சிலர் லாரென்ஸ் கையாண்ட கொள்கையைப் பாராட்டினர். வேறு சிலர் லிட்டனின் கொள்கையே சரி என ஒப்புக்கொண்டனர். பொதுவாக நோக்குங்கால் லாரென்ஸின் கொள்கை ஆங்கிலேயரின் பலஹீனத்தை வெளிப்படுத்தக் கூடியதாயிருந்தது. ஏனெனில், "நம்மிடம் பயந்து கொண்டல்லவா ஆங்கிலேயர் நம் நாட்டு விவகாரங்களில் தலையிடாமலிருக்



கைபர் கணவாய்

கின்றனர்" என்று ஆப்கானிய அரசர் கருதக் கூடுமல்லவா? ஆனல் லிட்டனின் கொள்கையோ சமாதானத்துக்கு விரோதமாக இருந்தது.

இவ்விரு கொள்கைகளில் ஏதாவதொன்றைக் கர்ஸன் பிரபு அனுசரிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கர்ஸன் பிரபு இவ்விரு கொள்கைகளையும் அனுசரிக்காமல் மத்திமக் கொள்கை ஒன்றைக் கையாண்டார். ஆங்கில ஆட்சிக்

குட்பட்ட எல்லைப் புறத்தில் சைனியம் ஒன்றை வைத்தார். எல்லைப்புறத்து ஜனங்களுக்கு வேண்டிய யுத்தப்பயிற்சியை அளிப்பதற்கென ஏற்பாடுகளைச் செய்தார். அன்னிய விரோதிகள் இந்தியாவிற்குள் வர முயற்சித்தால் இவர்களைக் கொண்டே அதைத் தடுத்து விடலாமென்பது கர்ஸன் பிரபுவின் நோக்கம். மேலும் எல்லைப் புறத்திலிருந்த பாதைகளையும் சைனியப் போக்குவரத்துக்கு அனுகூலமாக அமைத்தார். ஆங்கிலேய சைனியத்தைவிட, எல்லைப்புற ஜாதியினர் அடங்கிய சைனியமே மேல் என்று எண்ணினர்.

பீராரைப் பெறுதல்

1902-ம் வருஷம் நைஜாமிடமிருந்து பீரார் என்ற நாட்டைப் பெற்று அதை மத்திய மாகாணங்களோடு சேர்த்துக்கொண்டார். நைஜாமிடமிருந்த சைனியத்தைப் பிரிட்டிஷ் இந்திய சைனியத்தோடு சேர்த்துக் கொண்டார்.

வங்காளத்தைப் பிரித்தல்

1905-ம் வருஷம் வங்காளத்தைக் கர்ஸன் பிரபு இரண்டு மாகாணங்களாக்கினர். அவர் அவ்வாறு செய்வதற்குக் காரணம் இல்லாமலில்லை. வங்காளம் பெரிய மாகாணமா யிருந்ததினுல் அதைச் சரிவர கவனிக்க முடியாமலிருந்தது. ஆகவே வங்காளத்தின் கிழக்கு பாகத்தையும் அஸ்ஸாமையும் ஒன்று சேர்த்துப் புதிய மாகாணம் ஒன்றை ஏற்படுத்தினர். ஆனல் ஜனங்கள் இதை விரும்பவில்லை. இது வங்காளிகளை ஒற்றுமைப் படாமல் பிரிப்பதற்குச் செய்யப்பட்ட சூழ்ச்சி என்று யாவரும் கூறினர். இதனல் பல கலகங்கள் விளைந்தன. ஆகவே சில வருஷங்களில் இவ்விருமாகாணங்களும் பழையபடி ஒன்று சேர்ந்தன.

லாமாவுடன் சச்சரவு

கர்ஸன் பிரபு காலத்தில் திபெத்தை ஆண்ட லாமாவுடன் சச்சரவு ஏற்பட்டது. லாமா, ரஷ்யர் ஒருவரைத் தம் நாட்டிற்கு வரவேற்றதே இச் சச்சரவுக்குக் காரணமாகும். கர்ஸன் பிரபு ஒரு சைனியத்தை அனுப்புவித்து திபெத்தியரைத் தண்டிக்குமாறு செய்தார். இது அதிக பலனை விளைவிக்காவிடினும் ஆங்கிலேயர்கள் திபெத் பிரதேசத்தின் பல பாகங்களையும் நேரில் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் அளித்தது.

பல சீர்திருத்தங்கள்

கர்ஸன் பிரபு காலத்தில் அரசாங்கத்தில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. குடிகளுக்கென பல நன்மைகள் ஏற்பட்டன. பஞ்சம் ஏற்படும் காலங்களில் குடிகள் செலுத்தவேண்டிய வரித்தொகையைக் குறைக்கலாமென்ற அதிகாரத்தை ஜில்லா உத்தியோகஸ்தருக்குக் கொடுத்தார். இக் காலத்தில் விவசாயிகளுக்குப் பண உதவி புரிவதற்கென பல விவசாய பாங்கிகள் ஏற்பட்டன. விவசாய சம்பந்தமான ஆராய்ச்சிகளைச் செய்வதற்கென ஒரு ஆராய்ச்சிசாலை ஏற்பட்டது.

கல்வி அபிவிருத்தி

கர்ஸன் பிரபு கல்வி அபிவிர்த்திக்காகவும் பாடுபட்டார். மக்களின் கல்விக்காக வருமானத்தில் பெரும் பாகம் ஒன்றை ஒதுக்கி வைத்தார். பல கலாசாலைகளையும் கல்லூரிகளையும் ஏற்படுத்துவதற்கு வேண்டிய வசதிகளை அமைத்தார்.

இவ்வாறு கர்ஸன் பிரபு பல சீர்திருத்தங்களையும் செய்துவிட்டு 1905-ம் வருஷம் உத்தியோகத்திலிருந்து வில

கினர். வங்காளப் பிரிவின் விஷயமாக, அவர் மீது ஜனங்களுக்குக் கோபம் ஏற்பட்டபோதிலும் யாவரும் இவரது ஆட்சித் திறமையைப் போற்றினர். இவ்வளவு குறுகிய காலத்தில் அவர் செய்த ஏற்பாடுகளை நோக்குங்கால் அவரைப் போற்றித்தான் ஆகவேண்டும்.

முக்கிய வருஷங்கள்

கி. பி.	1884—1888.	டப்ரீன் வைஸ்ராயாக இருந்த காலம்.
,,	1885.	இந்திய காங்கிரஸ் சபை முதன்முதலாகக் கூடுதல்.
,,	1885—1886.	பர்மாவுடன் யுத்தம். வடபர்மா ஆங்கிலேயர் ஆட்சிக் குட்படுதல்.
,,	1888—1894.	லான்ஸ் டௌன் வைஸ்ராயாக இருந்த காலம்.
,,	1894—1899.	எல்ஜின் வைஸ்ராயாக இருந்த காலம்.
,,	1895—1896.	பஞ்சமும் கொள்ளை நோயும்.
,,	1899—1905.	கர்ஸன் வைஸ்ராயாக இருந்த காலம்.
,,	1901.	ஹபிபுல்லா அமீர் ஆதல்.
,,	1901	விக்டோரியா மஹாராணியார் மரணம்.
,,	1904.	வங்காளப் பிரிவினை.

20. மின்டோவும் மார்லியும் செய்த ஏற்பாடுகள்

இரண்டாம் மின்டோ—மின்டோ மார்லி ஏற்பாடுகள்—அரசாங்கத்தில் மாறுதல்கள்—சட்ட சபைகள்.

இரண்டாம் மின்டோ

கர்ஸன் பிரபுவுக்குப் பிறகு மின்டோ பிரபு வைஸ்ராயாக ஆனர். இவரை இரண்டாம் மின்டோ என்றும்

அழைப்பது உண்டு. இவர் காலத்தில் இந்தியாவின் பல பாகங்களிலும், முக்கியமாக வங்காளத்திலும் அரசாங்கத்தாருக்கு விரோதமான பல கிளர்ச்சிகள் ஏற்பட்டன. பல பத்திரிகைகள் துரைத்தனத்தாரை எதிர்த்துப் பல கட்டுரைகளைப் பிரசுரம் செய்தன. ஆகவே, மின்டோ இவற்றை அடக்குவதற்கு மிகுந்த பிரயாசை எடுத்துக் கொள்ளவேண்டியிருந்தது. ஆயினும் மின்டோ சளைக்கவில்லை. இவற்றை அடக்கியதுமல்லாமல் நாட்டில் அதற்குப் பிறகும் கலகம் ஏற்படாவண்ணம் பல ஏற்பாடுகளைச் செய்தார்.

மின்டோ - மார்லி ஏற்பாடுகள்

நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்குக் குடிகளையும் அரசாங்க விவகாரங்களில் கலந்துகொள்ளச்செய்வதுதான் மேலானது என்று அதிகாரிகள் கண்டு கொண்டனர். மின்டோவும் அரசாங்கத்தில், ஜனங்களுடைய பொறுப்பை அதிகரிக்கச் செய்தால், அரசாங்கத்தினருக்கு அதிக எதிரிகள் ஏற்படமாட்டார்கள் என்று நினைத்தார். ஆகவே, 1909-ம் வருஷம், அவரும் அப்போது இந்திய ஸெக்ரெடரியாக இருந்த **மார்லி** என்பவரும், இந்தியாவிற்கென சில ஏற்பாடுகளைச் செய்தனர். இவற்றை மின்டோ-மார்லி ஏற்பாடுகள் என்று கூறுவதுண்டு.

அரசாங்கத்தில் மாறுதல்கள்

இவற்றின் பிரகாரம் இந்திய விவகாரங்களை இங்கிலாந்தில் கவனித்துவந்த இந்திய (ஆட்சி) சபைக்கு இந்திய அங்கத்தினர்கள் இருவர் அனுப்பப்பட்டனர். இது வரையில் இச்சபையில் இந்தியர் எவரும் அங்கத்தினராக இருந்ததில்லை. வைஸ்ராய் சபையிலும் ஒரு இந்திய அங்கத்தி

னர் நியமிக்கப்பட்டார். இது வரையில் மாகாண (ஆட்சி) சபைகளில் இரண்டு அங்கத்தினர்களே இருந்தனர். இக் காலத்தில் நான்கு அங்கத்தினர்கள் இருக்கலாம் என ஏற் பட்டது.

சட்ட சபைகள்

சட்ட சபைகளின் அதிகாரங்களும் அதிகரித்தன. சென்னை, வங்காளம், பம்பாய் முதலிய மாகாணங்களிலி ருந்த சட்ட சபைகள் ஒவ்வொன்றிலும் ஐம்பது அங்கத் தினர் இருக்கலாம் என்றும் ஏற்பட்டது. சட்ட சபை அங்கத்தினர்களில், சிலரை அதிகாரிகளே நியமிப்பதென் றும், மற்றவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பலாமென்றும். ஏற்படுத்தப்பட்டது. மேலும் இக்காலத்தில், பல்வேறு வகுப்புக்களுக்கும் தனித்தனியே அரசாங்க சபைகளில் இடம் ஒதுக்கி வைக்கப்பட்டது. சர்வகலாசாலை, முனிஸி பாலிடி முதலிய பொதுஸ்தாபனங்களின் பிரதிநிதிகளுக் கும் அரசாங்க சபையில் இடம் கொடுக்கப்படடது. இவ் வாறான சீர்திருத்தங்கள் மிகவும் முக்கியமானவை. இவை அரசாங்க விஷயங்களில் பொது மக்களின் பொறுப்பை அதிகரிக்கச் செய்தன.

முக்கிய வருஷங்கள்

கி. பி. 1905—1910. மின்டோ வைஸ்ராயாக இருந்த காலம்.
,, 1909. மின்டோ—மார்லி ஏற்பாடு.

21. இந்தியாவும் மஹாயுத்தமும்

டில்லி தலைநகரமாதல்—இந்தியர் ஒத்துழைத்தல்—மான்டேகு-செம்ஸ்போர்டு ஏற்பாடு—முக்கிய ஷரத்துக்கள்—சட்ட சபைகள்—ஜனங்கள் அரசாங்க விஷயங்களில் கலந்து கொள்ள சந்தர்ப்பம்.


டில்லி தலைநகரமாதல்

மின்டோவுக்குப் பிறகு ஹார்டிஞ்ஜு என்பவர் வைஸ்ராயாக வந்தார். இவர் காலத்தில் இந்திய அரசாங்கத்தின் தலைநகரம் கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றப்பட்டது. இவர் காலத்தில் ஐரோப்பாவில் ஒரு பெரிய யுத்தம் ஏற்பட்டது. இதில் பிரிட்டன் கலந்துகொண்டது. ஏனெனில் ஜெர்மனி சிறு தேசங்களின் உரிமைகளை அழிப்பதென முயற்சித்துக்கொண்டிருந்தது. ஜெர்மனியை அடக்கவே பிரிட்டன் யுத்தத்தில் கலந்துகொண்டது.

இந்தியர் ஒத்துழைத்தல்

இம் மஹாயுத்தத்தின்போது இந்தியர்கள் பிரிட்டனுக்குப் பெரிதும் உதவி புரிந்தனர். ஸர். பி. எம். மேதா என்ற தலைவர் பிரிட்டானியர் சார்பாகப் பெரிதும் உழைத்தார். இந்தியர்கள் யாவரும் ஒத்துழைத்ததனால் பிரிட்டானியருக்கு உதவியாக இந்தியாவிலிருந்து பதினைந்து லக்ஷம் பேர்கள் பல பாகங்களுக்கும் சென்று சண்டை செய்தனர். இதையும் தவிர இந்தியர்கள் மிகுந்த பண உதவியும் செய்தனர். பிரிட்டிஷ் கவர்மெண்டாருக்குப் பத்துகோடி ரூபாய் யுத்த கடனாக இந்தியர்கள் கொடுத்தனர்.

இவ்வாறு ஐரோப்பாவில் யுத்தம் ஏற்பட்டதனால் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட எல்லா நாடுகளும் கஷ்டப்படவேண்டியதாயிற்று. ஆயினும் இந்தியர்கள் பிரிட்டனோடு சந்தோஷத்துடனேயே ஒத்துழைத்தனர். காங்கிரஸ்வாதிகளும் பிரிட்டனை எதிர்ப்பதை விட்டுப் பழைய விரோதங்களைப் பாராட்டாமல் பெரிதும் உதவி புரிந்தனர்.



யுத்த ஞாபகச்சின்னம்

ஆயினும் பஞ்சாபில் இந்த காலத்தில் சிறிது சச்சரவு ஏற்பட்டது. அப்பொழுது பஞ்சாபின் கவர்னரான **மைகேல் ஓடுவயர்** என்பவர் இதைப் பரவவொட்டாமல் தடுத்தார்.

1914-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஒரு முக்கியமான அறிக்கையை விடுத்திருந்தனர். அதன்மூலம் இந்திய அரசாங்க விஷயங்களில் பெரும் பாகங்களில் இந்தியர்களுக்குப் பொறுப்பு அளிக்கப்படும் என்று தெரிவித்தனர். இதுவரையிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அவ்வாறு கூறியதே இல்லை. ஆகவே எல்லோரும் புதிதாக வரப்போகும் சீர்திருத்தங்களை எதிர்பார்த்திருந்தனர்.

மான்டேகு-செம்ஸ்போர்டு ஏற்பாடு

இதற்குப் பிறகு, செக்ரெடரி அப் ஸ்டேட் ஆக இருந்த மான்டேகு என்பவர் நேரில் விஷயங்களை அறிவதற்கென இந்தியாவிற்கு வந்தார். அவரும் அக்காலத்தில் வைஸ்ரா

யாக இருந்த செம்ஸ்போர்டு என்பவரும் இந்தியா விற்கு என்னென்ன சீர்திருத்தங்கள் தேவை என்பதைக் கலந்து பேசிக்கொண்டனர். பிறகு அவர்கள் இந்தியத் தலைவர்கள் யாவரையும் கண்டு இதுவிஷயமாய்ப் பேசினர். யாவரும் ஒரு முடிவுக்கு வரவே, 1919-ம் வருஷம் சீர்திருத்தங்களின் முழு விவரமும் வெளியாயிற்று. இவற்றை மான்டேகுவும் செம்ஸ்போர்டும் சேர்ந்து செய்த சீர்திருத்தங்கள் என்று கூறுவதுண்டு.

முக்கிய ஷரத்துக்கள்

இவற்றின் பிரகாரம் இந்திய அரசாங்க விஷயங்களைக் கவனிப்பதற்கென இரண்டுவித அதிகாரிகள் ஏற்படுத்தப் பட்டனர். இவர்கள் மாகாண அதிகாரிகளும் மத்திய அரசாங்க அதிகாரிகளுமேயாவர். ஒவ்வொருவருக்கும் இருந்த அதிகாரங்கள் செவ்வனே விளக்கப்பட்டன. மாகாண அதிகாரிகளுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த விஷயங்களில் சிலவற்றை மாகாண கவர்னரின் சபையிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. மற்ற விஷயங்கள் பொது ஜனங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட சட்டசபையிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தன. மாகாணத்திலிருந்த சட்ட சபைக்கு ஜனங்கள் முன்னைவிட அதிக அங்கத்தினர்களை அனுப்பலாம் என்றும் ஏற்படுத்தப்பட்டது.

சட்ட சபைகள்

மத்திய அரசாங்கத்தினருடைய சட்டசபை இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டது. அவற்றில் பணக்காரர்களும் பிரமுகர்களும் அடங்கிய சபைக்கு கௌன்ஸில் அப்

ஸ்டேட் என்ற பெயர் ஏற்பட்டது. மத்திய அரசாங்க விஷயங்களிலும் பொது ஜனங்கள் கலந்து கொள்வதற்காகப் பொதுஜன சட்டசபை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு **லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி** என்று பெயர். இப் பொதுஜன சட்ட சபைக்கு ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஜனங்கள் அரசாங்க விஷயங்களில் கலந்துகொள்ள சந்தர்ப்பம்

இச்சீர்திருத்தங்களினால் ஜனங்களுக்கு அரசாங்க விஷயங்களில் கலந்துகொள்ள சந்தர்ப்பம் எற்பட்டது. அரசாங்கத்தை ஆளும் பொறுப்பின் பெரும்பாகத்தைப் பொது ஜனங்களே கொண்டனர். வைஸ்ராயினுடைய சபைக்கெனவும் கவர்னருடைய சபைக்கெனவும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த அதிகாரங்களைத் தவிர மற்ற அதிகாரங்கள் எல்லாவற்றையும் பொது ஜனங்களே கொண்டிருந்தனர். அரசாங்கத்தின் முக்கிய காரியமாகக் கருதப்படும் வரவு செலவுதிட்டம் செய்வதைப் பொது ஜனங்களின் பிரதிநிதிகளே கவனித்து வந்தனர்.

முக்கிய வருஷங்கள்

கி.பி. 1910—1914.	ஹார்டிஞ்ஜு வைஸ்ராயாக இருந்த காலம்.
,, 1914—1918.	மஹாயுத்தம்.
,, 1919.	மான்டேகு-செம்ஸ்போர்டு ஏற்பாடு அமுலுக்கு வருதல்.

22. புதிய சீர்திருத்தங்கள்

சைமன் கமிஷன்—வட்ட மேஜை மஹாநாடுகள்—காந்தி-இர்வின் ஒப்பந்தம்—1935-ம் வருஷத்திய சட்டம்—மாகாண சுய ஆட்சி—இரண்டு சபைகள்—பெடரல் கோர்ட்.

சைமன் கமிஷன்

முன் அதிகாரத்தில் கூறிய சீர்திருத்தங்கள் அரசாங்கத்தில் ஜனங்களின் அதிகாரங்களை அதிகரிக்கச் செய்த போதிலும் பெரும்பாலோர் அவை போதாது என்று கருதினர். தேச பக்தியில் சிறந்த பலர் ஒரு பெருங்கிளர்ச்சி செய்யவும் ஆரம்பித்தனர். ஆகவே பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சில ஆங்கில பிரமுகர்களை இந்திய விவகாரங்களை நேரில் தெரிந்து கொள்வதற்காக அனுப்புவித்தனர். இவ்வாறு இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயர்களுக்குத் தலைமை வகித்தவர் **சைமன்** என்பவர் ஆவர். சைமன் இந்தியாவில் எங்கும் சுற்றிப் பலருடைய அபிப்பிராயங்களையும் தெரிந்து கொண்டார். சைமனை இந்தியாவில் சிலர் வரவேற்க மறுத்த போதிலும், அவருக்கு உத்தியோகஸ்தர்களிடமிருந்து பெரிய ஆதரவு கிடைத்தது. அவர்களின் உதவியைக் கொண்டு சைமன் இந்திய அரசாங்கத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டிய முக்கிய அம்சங்களைப்பற்றி குறித்துக் கொண்டார். இவர் இங்கிலாந்தை அடைந்த பிறகு, தாம் இந்தியாவில் சேகரித்த விஷயங்களை ஒரு அறிக்கையாகத் தயார் செய்து பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடம் சமர்ப்பித்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்தினரும் அவ்வறிக்கையில் கண்டிருந்த பல விஷயங்களையும் ஆலோசனை புரிந்தனர்.




1930-ம் வருஷத்தில் இந்தியா.

வட்டமேஜை மஹா நாடுகள்

இதற்குப்பிறகு இந்த அறிக்கை விஷயமாக இந்தியரின் ஆலோசனையைக் கேட்பதற்கு என பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் இங்கிலாந்தில் ஒரு மஹாநாட்டைக் கூட்டினர். இதையே **வட்டமேஜை மஹாநாடு** என்று கூறுவதுண்டு. இதற்கு இந்தியத் தலைவர்கள் யாவரையும் அரசாங்கத்தார் அழைத்திருந்தனர். ஆயினும் காங்கிரஸ் கக்ஷியினர் இதில் கலந்து கொள்ளவில்லை. இந்தியத் தலைவரான மகாத்மா காந்தியும் இதற்குச் செல்ல முடியவில்லை. ஆகவே இந்த வட்டமேஜை மஹாநாட்டில் ஒன்றும் முடிவாகத் தீர்மானம் செய்யப்படவில்லை.

சாந்தி-இர்வின் ஒப்பந்தம்



மகாத்மா காந்தி

இதற்குள், வைஸ்ராயாக இருந்த **இர்வின் பிரபு** மகாத்மா காந்தியைச் சந்தித்து அவருடன் பேசி ஒரு முடிவுக்கு வந்தார். அதன் பிரகாரம் மகாத்மா காந்தி அரசாங்கத்தாருடன் போராடுவதை நிறுத்தி இங்கிலாந்துக்குச்சென்று தம் அபிப்பிராயங்களை ஆங்கிலேய அரசாங்கத்துக்கு தெரிவிப்பதாகக் கூறினார். வைஸ்ராயும் இதுவரையிலும் சிறையில் அடைக்கப்பட்ட தேச பக்தர்களை விட்டுவிடுவதாக வாக்களித்தார். இவ்வாறு இர்வின் பிரபுவுக்கும் மகாத்மா காந்திக்கும் இடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தை **காந்தி—இர்வின் ஒப்பந்தம்** என்று கூறுவது வழக்கம்.

இதன்பிறகு இங்கிலாந்தில் வட்டமேஜை மஹாநாடு இரண்டாம் தடவை கூடிற்று. இதில் மகாத்மா காந்தியும் கலந்துகொண்டார். வட்டமேஜை மஹாநாடு நடந்துகொண்டிருக்கும்போது, இந்திய முஸ்லீம்களுக்குத் தலைவரான மௌலானா முகம்மத் அலி என்பவர் இறந்தார். மேலும் இந்தியாவில் பல பாகங்களிலும் சச்சரவுகள் ஏற்பட்டன. ஆகவே காந்தி இங்கிலாந்தில் அதிககாலம் தங்காமல் திரும்பிவந்தார்.

1935-ம் வருஷத்திய சட்டம்

இதன் பிறகும் வட்டமேஜை மஹாநாடு கூடிச் சிறிது காலத்திற்குள் முடிவுக்கு வந்தது. இதை அடிப்படையாகக் கொண்டு 1935-ம் வருஷம் ஒரு சட்டம் செய்யப்பட்டது. இச்சட்டத்தில் சில அம்சங்கள் 1937-ம் வருஷம் ஏப்ரல் மாதம் அமுலுக்கு வந்தன. மற்றவை சிறிது காலத்தில் அமுலுக்கு வரலாம்.

மாகாண சுய ஆட்சி

மாகாண விஷயங்களில் சிலவற்றை மத்திய அரசாங்கத்தார் கவனித்தனர் என்று முன் அதிகாரத்தில் கூறினோமல்லவா? ஆனால் இச்சட்டத்தின் பிரகாரம் மாகாண சம்பந்தமான விஷயங்கள் யாவற்றையும் மாகாண அரசாங்கம் கவனிக்கவேண்டியதென ஏற்பாடு ஆயிற்று.

அரசாங்கத்தின் பல இலாகாக்களும் மாகாண மந்திரிகளிடம் ஒப்புவிக்கப்பட்டன. ஒவ்வொரு மாகாணத்திற்கும் இரண்டு சட்டசபைகள் ஏற்பட்டன. இவற்றில் பொது ஜனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய சபைக்கு **லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி** என்று பெயர். ஜமீந்தார்கள்

பெரிய மிராசுதாரர்கள், பிரமுகர்கள் முதலிய செல்வாக்குடையவர்களை அங்கத்தினராக உடைய சபைக்கு **லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்** என்று பெயர். லெஜிஸ்லேடிவ் அசெம்பிளியின் அங்கத்தினர்கள் ஐந்து வருஷத்திற் கொருமுறை தேர்ந்தெடுக்கப் படவேண்டு மென்று இருக்கிறது. ஆனால் லெஜிஸ்லேடிவ் கௌன்ஸி லில் இருப்பவர்கள் ஒன்பது வருஷம் அங்கத்தினராக இருக் கலாம்.

இரண்டு சபைகள்

மாகாண அரசாங்கத்திற்கு எவ்வாறு இரண்டு சபை கள் ஏற்பட்டிருக்கின்றனவோ அதுபோலவே மத்திய அரசாங்கத்திலும் இரண்டு சபைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவை **கௌன்சில் அப் ஸ்டேட்** என்பதும் **பெடரல் அசெம்பிளி** என்பதும் ஆகும். பெடரல் அசெம்பிளி என்ற சபைக்கு இருநூற்றைம்பது அங்கத்தினர்கள் பிரிட்டிஷ் இந்தியா விலிருந்தும், நூற்றைம்பது அங்கத்தினர்கள் சமஸ்தானங் களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். மத்திய அர சாங்கத்திற்கு, பிரிட்டிஷ் இந்திய சம்பந்தமான விஷயங் களைத் தவிர சுதேச சமஸ்தானங்களின் பொது விஷயங் களையும் கவனிப்பதற்கு அதிகாரம் உண்டு.

பெடரல் கோர்ட்

1935-ம் வருஷத்திய சட்டத்தின் பிரகாரம் எல்லா ஹைகோர்ட்டுகளுக்கும் மேற்பட்ட ஒரு நியாயஸ்தலம் ஏற் பட்டிருக்கிறது. அதற்குப் **பெடரல் கோர்ட்** என்று பெயர். இது ஹைகோர்ட்டுகளுக்கு மேற்பட்ட அப்பீல் கோர்ட் டாகவும் இருப்பதுடன் சமஸ்தானங்களுக்கிடையே ஏற்

படும் சச்சரவுகளை விசாரிப்பதற்கும் அதிகாரம் பெற்றிருக்கிறது.

மேற்கூறிய விஷயங்களை இன்னும் விஸ்தாரமாக பின்வரும் அதிகாரங்களில் கவனிப்போம்.

23. இந்நூற்றாண்டு பெரியார்கள்

கோபால[illegible] கோகலே—காங்கிரஸ் சபை—மகாத்மா காந்தி—கல்வித்துறைகள்—சுவாமி விவேகானந்தர்.

கோபாலகிருஷ்ண கோகலே

இருபதாம் நூற்றாண்டின் பெரியார்களில் **கோபால கிருஷ்ண கோகலே** சிறந்தவராகக் கருதப்படுகிறார். அவர் மின்டோ வைஸ்ராயாக இருந்த காலத்தில் அதிக பிரபலமடைந்தார். இவர் பொது ஜனங்களின் நன்மைக்காகப் பெரிதும் பாடுபட்டார். முதலில் ஒரு உபாத்தியாயராக இருந்த இவர் பொது மக்களுக்கு உழைப்பதன் பொருட்டு அரசியல் விவகாரங்களில் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தார். இந்திய மக்களுக்கு அரசியல் விவகாரங்களில் அதிக உரிமைகள் அளிக்கப்படவேண்டும் என்று இவர் கூறிவந்தார். மேலும் ஆப்பிரிக்காவில் குடி-



கோபாலகிருஷ்ண கோகலே

யேறியிருந்த இந்தியர்களின் உரிமைகளுக்காகவும் பாடுபட்டார். இவர் ஏற்படுத்திய **இந்திய ஊழியர்கள் சங்கம்** இன்றைக்கும் கோகலேயின் உயரிய நோக்கங்களைப்பரப்பிவருகின்றது. இச்சங்கத்திற்கு கோகலே பலகாலம் அக்கிராசனராக இருந்தார். கோகலேக்குப் பிறகு நம்முடைய மாகாணத்தைச் சேர்ந்த பிரபல பேச்சாளரான **ரைட் ஆனரபில் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியாரவர்கள்** இச்சங்கத்தின் அக்கிராசனராகப் பலகாலம் இருந்து வந்தார். இச்சங்கத்தின் கிளைகள் இந்தியாவின் பல பாகங்களிலும் உள்ளன.

காங்கிரஸ் சபை

டப்ரீன் பிரபு காலத்தில் இந்திய காங்கிரஸ் சபை ஏற்பட்டதென்று அறிந்து கொண்டோம். இச்சபை நாளுக்கு நாள் வலுவடைந்து இப்பொழுது இந்தியாவின் மஹாசபையாக விளங்குகிறது. அது இவ்வாறு வலுவடைந்ததன் காரணம் அதில் தேசபக்தியில் சிறந்த மகான்கள் சேர்ந்திருப்பதேயாகும். இச்சபை பல உயரிநோக்கங்களைக் கொண்டது. இந்தியா சுயராஜ்யம் அடைவதற்குப் பாடுபடுதல், கிராமங்களைச் சீர்திருத்தி அமைத்தல், தாழ்த்தப்பட்டவர்களென்று கருதப்படும் ஜனங்களுக்கு எல்லா உரிமைகளையும் அளித்தல் முதலியன இச்சபையின் சில நோக்கங்களாகும். இந்த நோக்கங்கள் அதிசீக்கிரத்தில் பூர்த்தியாகும் என்பதில் சந்தேகமில்லை.

மகாத்மா காந்தி

இச் சபைக்கு பலமளித்து அதை ஓங்கச் செய்தவர் மகாத்மா காந்தியேயாவர். இவர் மக்களுக்காக நாற்பது வருஷங்களுக்கு மேலாக உழைத்துவருகின்றூர். இவரை

இந்தியர்கள் மட்டுமல்ல, உலகத்தினர் யாவரும் போற்று கின்றனர்.

இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தேச பக்தியில் சிறந்த இன்னும் பல மகான்கள் இருந்திருக்கின்றனர். இவர்களில் **பால கங்காதர திலக், சித்தரஞ்சன்தாஸ், ஸென்குப்தா, மௌலானா முகம்மது அலி,** அவருடைய சகோதரர் **ஷௌகத் அலி, மோதிலால் நேரு** முதலியவர்கள் காலம் சென்றுவிட்டபோதி லும், அவர்களுடைய புகழ் என்றும் அழியாது.

கல்வித்துறைகள்

அரசியல் துறைகளில் சிறந்திருப்பதுபோல் கல்வித் துறைகளிலும் இந்நூற்றாண்டு சிறந்துள்ளது. உலகப்பிர சித்தி பெற்ற தாவர நூலாராய்ச்சியாளரான **ஜகதீஸ் சந் திர போஸ்** என்பவர் இக்காலத்தவராவர். ஜகதீஸ் சந்திர போஸ் வங்காளத்தைச் சேர்ந்தவர். தாவரநூலில் போஸ் பிரசித்திபெற்றிருப்பதுபோல், பௌதீக நூலாராய்ச்சியில் **ஸர். ஸி. வி. ராமன்** என்பவர் பிரசித்தி பெற்றிருக்கிறார். இவரை உலகத்திலுள்ள ஒரு சிறந்த பௌதீக சாஸ்திரி யாக யாவரும் கருதுகிறார்கள். உலகத்திலேயே மிகப்பெரிய பரிசான **நோபேல் பரிசு** சில வருஷங்களுக்கு முன் இவருக்கு வழங்கப்பட்டது. இவர் பௌதீக சாஸ்திரத்தில் பல புது விஷயங்களைக் கண்டுபிடித்துள்ளார். ரஸாயன சாஸ்திர ஆராய்ச்சியில் ஸர். பி. ஸி. ரே என்பவர் இக்காலத்தில் சிறந்து விளங்குகிறார்.

சுவாமி விவேகாநந்தர்

இந்தியாவின் சிறப்பை அன்னியருக்கு எடுத்துச் சொல்லி கீர்த்தி பெற்றவர்களில் **சுவாமி விவேகாநந்தர்** என்

பவர் சிறந்துள்ளார். இவர் இந்நூற்றுண்டின் ஆரம்பத்தி லேயே காலமாய்விட்டார். இவர் **ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்** என்ற மஹானின் சிஷ்யராவர். அதர்மத்தைப்போக்கி தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக அவதரித்த மஹான்களில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சிறந்தவராவர். ராம கிருஷ்ணரின் அமுத மொழிகளை உலகத்தினர் கேட்டு நன்மை அடைவதற்காக விவேகாநந்தர் உலகம் முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து தம்முடைய குருவின் ஆப்த வாக்கியங்களை உலக மக்கட்குப் போதித்தார். மேலும் தம் முடைய குரு உபதேசித்த தருமம் நன்குகப் பரவி நிலை பெறுவதற்காக உலகத்தின் பல பாகங்களிலும் ஸ்ரீ ராம கிருஷ்ண மடங்களை ஏற்படுத்தியுள்ளார்.

இன்னும் கல்வித் துறைகளில் பல பெரியார்கள் விளங்கி வருகின்றனர். கவி **ரவீந்திரநாத் தாகூர்** என்பவர் ஆங்கில பாஷையை நன்கு பயின்று, ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியுள்ளார். இவரும், ஆங்கிலத்திலுள்ள மேதைக்காக, நோபெல் பரிசைப் பெற்றிருக்கிருர். இவரைப் போலவே ஸ்ரீமதி **சரோஜினி தேவி** என்ற பெண்மணியும், ஆங்கிலத்தில் பல கவிகளை எழுதி உலகப் பிரசித்தி யடைந்துள்ளார். கவி தாகூரும், சரோஜினி தேவியாரும் மிகுந்த தேசபக்தியுள்ளவர்கள்.

24. தற்கால அரசாங்க முறை

அரசாங்கத்தின் மூன்று பாகங்கள்—இந்திய காரியதரிசியும் அவர் சிப்பந்திகளும்—ஹை கமிஷனர்—மத்திய அரசாங்கத்தார்—கவர்னர் ஜெனரல் அதிகாரங்கள்—மத்திய அரசாங்க நிர்வாக சபை—மத்திய அரசாங்க சட்ட சபைகள்—மாகாண அரசாங்கம்—பெடரேஷன்—மாகாண ஆட்சி—கவர்னரின் அதிகாரங்கள்—மந்திரிசபை—மாகாண சட்ட சபைகள்—லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி—லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்—நியாய விசாரணை—ஜில்லா பரிபாலனம்—போலீஸ் இலாகா—கல்வி இலாகா—பல துறைகளிலும் அபிவிருத்தி—ஸ்தல சுய ஆட்சி—இந்திய சமஸ்தானங்கள்.

அரசாங்கத்தின் மூன்று பாகங்கள்

நாம் பிரிட்டிஷ் சக்கரவர்த்தியாரின் குடிகள். பிரிட்டன் இந்தியாவிலிருந்து சுமார் 6,000 மைல்களுக்கு அப்பால் உள்ளது. அவ்வளவு தூரத்திலிருந்து ஆங்கிலேயர்கள் நம்மை எவ்வாறு ஆளுகிறார்கள் என்று நீங்கள் கேட்கக் கூடும். ஆங்கிலேயர் எவ்வாறு இந்திய துரைத்தனத்தை நடத்துகிறார்கள் என்று நீங்கள் தெரிந்துகொண்டீர்களேயானால் இந்த சந்தேகம் வராது.

இந்திய அரசாங்கத்தைப்பற்றிய விவரங்களை, பொதுவாக மூன்று பாகங்களாகப் பிரித்து அவற்றைப்பற்றி விஸ்தாரமாகக் கவனிப்போம். மேற்கூறிய மூன்று பாகங்களாவன :

(1) இந்திய காரியதரிசியும் அவர் சிப்பந்திகளும், (2) இந்தியாவிலுள்ள மத்திய அரசாங்கம் (3) மாகாண அரசாங்கம்.

இந்திய காரியதரிசியும் அவர் சிப்பந்திகளும்

இந்திய காரியதரிசியின் ஸ்தானம் இங்கிலாந்தில் உள்ளது. அவர் இங்கிலாந்திலிருந்தே இந்திய சம்பந்தமான விஷயங்கள் யாவற்றையும் கவனித்து வருகிறார். அவர் இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டின் அங்கத்தினர். அத்தேசத்திலுள்ள மந்திரி சபையிலும் அவருக்கு இடமுண்டு. அவர் இங்கிலாந்தின் பார்லிமெண்டுக்குட்பட்டே இந்தியா சம்பந்தமான விவகாரங்களை எல்லாம் கவனித்து வருகின்றார். அவருக்கு பிரிட்டன் அரசாங்கத்தின் வருமானத்திலிருந்தே சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவருக்கு உதவியாக இரண்டு **கீழ்ப்பட்ட காரியதரிசிகள்** இருக்கின்றனர். அவர்களில் ஒருவர், இந்திய காரியதரிசி உத்தியோகத்திலிருந்து விலகும்போது தாமும் விலகிக்கொள்ளவேண்டும். அவருக்குப் **பார்லிமென்டரி அன்டர் ஸெக்ரேடரி** என்று பெயர். மற்றொருவர் காரியதரிசி விலகினாலும்கூட விலகவேண்டியதில்லை. இவருக்கு **பர்மனன்ட் அன்டர் ஸெக்ரேடரி** என்று பெயர். அவர் இந்திய காரியதரிசிக்கு கீழ்ப்பட்டபோதிலும் இந்திய விவகாரங்கள் சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் **இந்தியா ஆபீஸின்** தலைவராக இருக்கிறார். இந்திய விவகாரங்கள் யாவற்றிலும் காரியதரிசிக்கு ஆலோசனை கூறுவதற்கென சிலர் ஏற்பட்டிருக்கின்றனர். இவ்வாறு ஆலோசனை கூறுபவர்கள் இந்திய விஷயங்களில் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல்வேண்டும்.

கவர்னர் ஜெனரல் எவ்வாறு அரசாங்கம் நடத்தவேண்டுமென்பதைப்பற்றிக் கூறுவதற்கு இந்திய காரியதரிசிக்கு அதிகாரமுண்டு. கவர்னர் ஜெனரல் இந்திய காரியதரிசியின் உத்தரவை மீறமுடியாது. இந்தியா ஆபீஸ் சுமார் மூன்னூறு சிப்பந்திகள் அடங்கியுள்ளது.

ஹை கமிஷனர்

பிரதி வருஷமும் இந்திய அரசாங்கம் ரெயில்வேக் களுக்கெனவும், சைன்யத்திற்கெனிவும், கோடிக்கணக்கான ரூபாய் பெருமான சாமான்கள் வாங்கவேண்டியிருக்கிறது. இவற்றை வாங்கும் பொறுப்பை சில வருஷங்களுக்குமுன் இந்திய காரியதரிசியே கவனித்து வந்தார். இப்பொழுது இதற்கென ஒரு தனி உத்தியோகஸ்தர் ஏற்பட்டிருக்கிறார். இவருக்கு **ஹை கமிஷனர்** என்று பெயர். இவர் கவர்னர் ஜெனரலுக்கு உட்பட்டவர் ஆவர்.

மத்திய அரசாங்கத்தார்

மத்திய அரசாங்கத்திற்கு கவர்னர் ஜெனரலே தலைமை வகிக்கிறார். இவரும், இவரது சிப்பந்திகளும் இந்தியா வின் தலைநகரமாகிய டில்லியிலிருந்தே காரியங்களைக் கவனித்து வருகின்றனர். கவர்னர் ஜெனரல் ஐந்து வருஷங்கள் உத்தியோகம் வகிப்பது என்பது மாமூலாய் ஏற்பட்டு விட்டது.

கவர்னர் ஜெனரலும் பல அங்கத்தினர்களும் சேர்ந்த இந்திய நிர்வாக சபைக்கு, கவர்னர் ஜெனரலே தலைமை வகித்து ஒவ்வொரு அங்கத்தினருக்குரிய வேலைகளைப் பிரித்துக் கொடுக்கிறார். பொதுவாக இந்தச் சபை அங்கத்தினர்களுக்கு ஆலோசனை கூறவும், சபைமுன் கொண்டு வரும் விஷயங்களைத் தீர்மானிப்பதற்கும் அதிகாரங்கள் இருந்த போதிலும், கவர்னர் ஜெனரலுக்கு விரோதமாக ஒன்றும் செய்துவிட முடியாது.

கவர்னர் ஜெனரல் அதிகாரங்கள்

கவர்னர் ஜெனரலுக்கு அளவிறந்த அதிகாரங்கள் உள்ளன. சட்டசபைகளைக் கூட்டவும், கலைக்கவும், நீடிக்

கச் செய்யவும் அவருக்கு அதிகாரமுண்டு. எந்த மசோதாவும் அவருடைய அனுமதியைப் பெற்றபிறகே சட்டமாகக் கூடும். சட்டசபைகளுக்கு அனுப்பாமலேயே தாமே சட்டங்களை ஏற்படுத்த இவருக்கு அதிகாரமுண்டு. இவற்றையும் தவிர, இவர் அவசரச்சட்டங்கள் ஏற்படுத்தவும் கூடும். இவ்வாறு ஏற்படுத்திய அவசரச் சட்டங்கள் ஆறுமாதகாலம் வரையில் அமுலில் இருக்கக் கூடும்.

இந்திய அரசாங்கத்தின் தலைவர் என்ற ஹோதாவில் கவர்னர் ஜெனரல் என்று அழைக்கப்படும் இவர் பிரிட்டிஷ் அரசரின் பிரதிநிதி என்ற ஹோதாவில் வைஸ்ராய் என்று அழைக்கப்படுகிறார். ஆதலின், அரசருக்கு என்ன என்ன மரியாதைகள் உண்டோ அவைகள் இவருக்குச் செலுத்தப்படுகின்றன.

மத்திய அரசாங்க நிர்வாக சபை

இச்சபையில் இப்பொழுது எட்டு அங்கத்தினர்கள் உள்ளனர். இதற்கு வைஸ்ராயே தலைமை வகிக்கிறார். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் தனித்தனியே அலுவல்கள் உள்ளன. அதன் விவரம்: வைஸ்ராய், பொதுவாக அன்னியவிவகாரங்களையும் அரசியல் விவகாரங்களையும் கவனித்து வருகிறார். இரண்டாவது அங்கத்தினரான இந்தியச் சேனையின் முக்கிய தளகர்த்தர், சைனியம், பாதுகாப்பு முதலியவற்றைக் கவனித்து வருகிறார். உள்நாட்டு விவகாரங்கள், சட்டம், நியாயம், போலீஸ், ஜெயில், சிவில் ஸர்விஸ் முதலியவற்றை மற்றொரு அங்கத்தினர் கவனித்து வருகிறார். பண விஷயங்களைக் கவனிக்கவும் ஒரு அங்கத்தினர் உளர். போக்கு வரத்து சாதனங்கள், ரயில்வே முதலியவற்றைக் கவனிப்பதற்கென ஒரு அங்கத்தினர் இருக்கி

ளூர். பொதுவாக சட்ட விஷயங்களுக்கென ஒரு அங்கத்தினர் உண்டு. கல்வி, சுகாதாரம், நில சம்பந்தமான விஷயங்கள் முதலியவற்றிற்கும் இரண்டு அங்கத்தினர் உளர். ஆக எட்டு அங்கத்தினர்கள் உள்ள இந்தச் சபை வைஸ்ராய்க்கு ஆலோசனை கூறி வருகிறது. இந்தியாவின் அரசியல் முறை மாறுதல் அடைந்தால் இச்சபையிலும் சில மாறுதல்கள் ஏற்படக் கூடும்.

மத்திய அரசாங்க சட்ட சபைகள்

மத்திய அரசாங்கத்தில் இரண்டு சட்ட சபைகள் உள்ளன. இவை **கௌன்ஸில் அப் ஸ்டேட்** என்ற உயர்தர சபையும், **லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி** என்ற பொது மக்களின் பிரதிநிதிகளின் சபையும் ஆகும். கௌன்ஸில் அப் ஸ்டேட் சபையில் அறுபது அங்கத்தினர்கள் உள்ளனர். இவர்களில் 33 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். 27 பேர்கள் தேர்தலின்றியே அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்கள். இந்தச் சபைக்கு ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதன் அங்கத்தினர்களாக இருக்க விரும்புகிறவர்கள் சில யோக்யதைகளைப் பெற்றிருக்க வேண்டும். இந்தச் சபையின் சம்மதத்தைப் பெறாவிட்டால் எந்தச் சட்டமும் அமுலுக்கு வரமுடியாது. புதிய வரிகளைப் போடுவதற்கென ஏற்படும் சட்டங்கள் இந்தச் சபையின் சம்மதத்தைப் பெறவேண்டும்.

லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி என்ற கீழ்ச்சபையானது பொது மக்களின் பிரதிநிதிகளே அடங்கியுள்ளது. இதில் அங்கத்தினராக இருக்க விரும்புகிறவர்கள் சில யோக்யதைகள் பெற்றிருக்கவேண்டும். இதில் மொத்தம் 144 அங்கத்தினர்கள் உள்ளனர். இவர்களில் 103 பேர்கள்

பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். 41 பேர் கள் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்கள். இந்த 41 பேர்களில் பெரும்பாலோர் அரசாங்க உத்தியோகஸ்தர் கள் ஆவர். இந்தச் சபையில் தலைமை வகிப்பவர் இதன் அங்கத்தினர்களில் ஒருவரேயாவர். தலைவரைத் தேர்ந் தெடுப்பதற்கு இந்தச் சபைக்கு அதிகாரமுண்டு. எந்த மசோதாவும் இந்தச் சபையிலேதான் முதலில் தீர்மானிக் கப்பட வேண்டும். அரசாங்க வரவு செலவு திட்டத்தின் ஒரு பாகம் இந்தச் சபையின் சம்மதத்தைப் பெற்ற பிறகே தான் அமுலுக்கு வரும். மற்றொருபாகம் கவர்னர் ஜென ரல் அதிகாரத்திற்குட்பட்டது.

1935-ம் வருஷத்திய சட்டத்தின் பிரகாரம் லெஜிஸ் லேடிவ் அசெம்பிளிக்கு **பெடரல் அசெம்பிளி** என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. இதுபோல் மத்திய அரசாங்கத்தின் உயர்தர சபைக்கு **கௌன்ஸில் அப் ஸ்டேட்** என்று பெயர் இச்சட்டசபைகள் சம்பந்தமான ஷரத்துகள் இன்னும் அமுலுக்கு வரவில்லை.

மாகாண அரசாங்கம்

இந்தியா இப்பொழுது 11 மாகாணங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. அவையாவன: மதராஸ், பம்பாய், வங் காளம், ஐக்கியமாகாணம், பஞ்சாப், பீஹார், மத்திய மாகாணங்கள்; அஸ்ஸாம், வடமேற்கு எல்லை மாகாணம், ஒரிஸ்ஸா, சிந்து முதலியன. ஏற்கனவே இந்தியாவின் ஒரு பாகமாயிருந்த பர்மா இப்பொழுது தனியே பிரிக்கப் பட்டிருக்கிறது.

1935-ம் வருஷத்திய சட்டத்தின் பிரகாரம் மாகாண விவகாரங்களில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் பூரண அதி

காரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியா சம்பந்தமானவையும், சமஸ்தான இந்தியா சம்பந்தமானவையுமான பொது விஷயங்களை மத்திய அரசாங்கத்தார் கவனிப்பதென்றும், மாகாண சம்பந்தமான விஷயங்களை மாகாண அரசாங்கத்தார், கவனிப்பதென்றும் 1935-ம் வருஷயத்திய சட்டத்தினுல் ஏற்பட்டிருக்கிறது.

பெடரேஷன்

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மாகாணங்களையும், சமஸ்தானங்களையும் ஒரு கூட்டுறவு அரசாங்கத்தில் இணைத்துவிடவேண்டும் என்ற நோக்கத்தை உடையவர்களாயிருக்கின்றனர். ஆங்கிலத்தில் இதை **பெடரேஷன்** என்பார்கள். இதனுல் சமஸ்தானங்கள் தங்கள் சொந்த விவகாரங்களைத் தாங்களே கவனித்து வந்தபோதிலும், பொதுவான விஷயங்களில் மற்ற சமஸ்தானங்களோடும் மாகாணங்களோடும் கலந்து யோசிக்கவேண்டி யிருக்கிறது.

மாகாண ஆட்சி

கவர்னரே மாகாணத்தின் தலைவராவர். மதருஸ் பம்பாய், வங்காளம் முதலியவற்றில் உள்ள கவர்னரை நமது சக்கரவர்த்தியாரே நியமித்துவிடுகிருர். மற்ற மாகாணங்களின் கவர்னர்களை கவர்னர் ஜெனரலின் ஆலோசனைப்படி நியமிக்கிருர்கள்.

கவர்னரின் அதிகாரங்கள்

கவர்னருக்கு பல அதிகாரங்கள் உள. மந்திரிசபையை கூட்டவும் கலைக்கவும் இவருக்கு அதிகாரமுண்டு. மந்திரிகளும் பல அரசாங்க இலாகாக்களின் தலைவர்களும், அரசாங்க சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கவர்ன

ருக்கு அறிவிக்க வேண்டும். இவற்றையும் தவிர மாகாண சட்டசபைகளைக் கூட்டவும் கலைக்கவும் அவற்றில் தமது எண்ணங்களை வெளியிடவும் கவர்னருக்குப் பூரண அதிகாரமுண்டு. மாகாண சட்டசபைகள் இயற்றிய எந்தச் சட்டமும் கவர்னருடைய சம்மதத்தைப் பெறவேண்டும். அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கவும் கவர்னருக்கு அதிகாரமுண்டு. கவர்னர் தாமே சட்டங்களை இயற்றுவதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறார்.

இந்தச் சட்டங்கள் சட்டசபைகளில் தீர்மானிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. இவற்றிற்கு **கவர்னரின் சட்டங்கள்** என்று பெயர். கவர்னருக்குச் சில பொறுப்புகளும் உள. நாட்டில் அமைதி ஒழியாமல் பார்த்துக் கொள்வது, மாகாண எல்லைக்குட்பட்ட சமஸ்தானங்களின் உரிமைகளைக் காப்பது, கவர்னர் ஜெனரல் போடும் மாகாண சம்பந்தமான உத்தரவுகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்று கவனித்தல், முதலியன கவர்னரின் சில பொறுப்புகள் ஆகும். கவர்னருக்கும் சட்டசபைக்கும் இடையே அபிப்பிராய பேதமேற்பட்டால் சட்டசபையின் அதிகாரத்தைத் தள்ளி, தாமே பூரண அதிகாரத்தையும் ஏற்றுக்கொள்ளலாம்.

மந்திரி சபை

மாகாண அரசாங்கத்தை நடத்திவருவது மந்திரி சபையே ஆகும். இதன் அங்கத்தினர்கள் சட்டசபையின் அங்கத்தினர்களாக முதலில் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்க வேண்டும். எந்தக் கட்சி சட்டசபையில் அதிக அங்கத்தினர்களை உடையதாக இருக்கிறதோ, அந்தக் கட்சியேதான் அரசாங்கத்தை ஆளும் பொறுப்பை அடைகிறது. உதா

ரணமாக, சென்னை மாகாணத்தில் ராஜீயகட்சிகள் பல உள்ளன. இவற்றில் காங்கிரஸ் கட்சியே சில வருஷங்களுக்குமுன் நடந்த தேர்தலில், சட்டசபைகளில் அதிக அங்கத்தினர்களைப் பெற்றது. ஆகவே, காங்கிரஸ் கட்சியிலிருந்தே மந்திரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களில் வலுத்த கட்சியின் தலைவரே பிரதம மந்திரியாகிறார். அவர் மற்ற மந்திரிகளையும் நியமித்துக் கொள்கிறார்.

1935-ம் வருஷத்திய சட்டப்பிரகாரம் ஒவ்வொரு மாகாணத்திற்கும் எவ்வளவு மந்திரிகள் இருக்கலாம் என்று நிர்ணயிக்கப்படவில்லை. ஆயினும் மாகாணத்திலுள்ள வேலைக்குத் தகுந்தபடி மந்திரிகளின் எண்ணிக்கையைக் குறைக்கவோ அதிகரிக்கவோ செய்யலாம். சட்டசபை அங்கத்தினர்கள் ஐந்து வருஷத்திற் கொருமுறை தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஆகவே மந்திரி சபை ஐந்து வருஷத்திற்கொருமுறை மாறிக்கொண்டே யிருக்கும்.

மந்திரிகள் ஒரே கட்சியைச் சார்ந்து ஒரே நோக்கத்தை உடையவர். ஆதலின் பதவியிலிருக்கும்போது ஒன்றாக இருந்து; பதவியிலிருந்து விலகும்பொழுது ஒன்றாக விலகி விடுகின்றனர்.

ஒவ்வொரு மந்திரிக்கும் தனித்தனியே அலுவல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மந்திரி சபைக்கு கவர்னரே தலைமை வகிக்கிறார்.

மாகாண சட்டசபைகள்

1935-ம் வருஷத்திய சட்டப் பிரகாரம் சில மாகாணங்களில் இரண்டு சட்டசபைகள் ஏற்பட்டு விட்டன. உதாரணமாக சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாகா

ணங்கள், பீகார், அஸ்ஸாம் முதலியன இரண்டு சபைகளை உடைய மாகாணங்களாகும். இந்தச் சட்டசபைகளுக்கு லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி, லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் என்று பெயர்.

லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி

இது மாகாணத்தின் பொதுமக்களின் சபையாகும். இதற்கு அங்கத்தினர்களாக வருகிறவர்கள் சாதாரணமான யோக்கியதைகளைப் பெற்றிருந்தால் போதுமானது. இதன் அங்கத்தினர்கள் இந்தச் சபையின் தலைவரைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். இது ஐந்து வருஷத்திற் கொருமுறை மாறும். அங்கத்தினர் யோக்கியதை :

(1) மோட்டார்வரி, தொழில்வரி, வீட்டுவரி இவற்றில் ஏதாவது ஒன்றை செலுத்துபவரும், (2) மிராசுதார்கள், இனும்தார்கள், பட்டாதார்கள் முதலியவர்களும், (3) எழுதப்படிக்கத் தெரிந்தவர்களும் அங்கத்தினர்களாக இருக்கக்கூடும்.

லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்

இது செல்வவந்தர்களான மிராசுதார்கள், வியாபாரிகள் முதலியவர்கள் அடங்கியுள்ளது. ஆகவே இதற்கு அங்கத்தினர்களாக வருகிறவர்கள் செல்வாக்கு வாய்ந்தவர்களாய் இருக்கவேண்டும். அங்கத்தினர் யோக்கியதை :

(1) ரூ. 7500 க்கு குறையாத வருஷவருமானத்திற்கு வருமானவரி கொடுப்பவரும், (2) ரூ. 300 நிலவரி செலுத்துபவரும், (3) ராவ்பகதூருக்கு கீழ்ப்படாத பட்டத்தை வகிப்பவரும், (4) ஏற்கனவே அரசாங்கத்திலேயோ,

பெரிய பொதுஸ்தாபனங்களிலேயோ உயர்ந்த பதவி வகித்தவரும், இச்சபையின் அங்கத்தினராக முடியும். (உதாரணம்) ஹைகோர்ட் ஜட்ஜ், முனிசிபல் சேர்மன், ஜில்லாபோர்ட்டு பிரசிடென்ட்.

இரண்டு சபைகள் சம்பந்தமான மேற்கூறிய யோக்யதைகள் பெண்களிடம் அமையப்பெற்றிருந்தால் அவர்களும் தேர்தலுக்கு நிற்கக்கூடும்.

நியாய விசாரணை

சட்டங்களைப் பின்பற்றி மக்கள் நடக்கின்றார்களா என்பதைக் கவனிப்பதற்கு நியாயஸ்தலங்கள் அவசியமாயிருக்கின்றன. நியாயஸ்தலங்களில் பலவகைகள் உள. அவை சட்டத்தை ஒழுகி நடக்காத மக்களைத் திருப்புவதற்காகவே ஏற்பட்டிருக்கின்றன. பொதுவாக இரண்டுவித வழக்குகள் நீதிபதிகளின் விசாரணைக்கு வருகின்றன. இவற்றில் சொத்து சம்பந்தமான வழக்குகளுக்கு **சிவில் வழக்குகள்** என்று பெயர். திருட்டு, கொலை முதலிய சம்பந்தமான வழக்குகளுக்கு **கிரிமினல் வழக்குகள்** என்று பெயர். இவ்விருவித வழக்குகளை விசாரிப்பதற்கென தனித்தனி நியாயஸ்தலங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தியாவிலுள்ள நியாயஸ்தலத்துக்கு எல்லாம் உயர்ந்தது **பெடரல் கோர்ட்** என்ற உயர்ந்த நீதிஸ்தலமேயாகும். இதில் மூன்று நீதிபதிகள் இருக்கின்றனர். இதில் மாகாணங்களுக்கிடையே ஏற்படும் வழக்குகளும், சமஸ்தானங்களுக்கிடையே ஏற்படும் வழக்குகளும், சமஸ்தானங்களுக்கும் மாகாணங்களுக்கும் இடையே ஏற்படும்

வழக்குகளும் விசாரிக்கப்படுகின்றன. இவற்றையும் தவிர இதில் மாகாண ஹைகோர்ட்டுகளிலிருந்து கொண்டுபோகப் படும் வழக்குகளையும் விசாரிக்கிறார்கள்.

பெடரல் கோர்ட்டுக்கு அடுத்தபடியாக உள்ளவை மாகாண ஹைகோர்ட்டுகளேயாகும். இவற்றில் சிவில், கிரிமினல் வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன. இவற் றிற்கு கீழ்க் கோர்ட்டுகளில் விசாரிக்கப்பட்ட வழக்குகள் ஹைகோர்ட்டுக்கு எடுத்துச் செல்லக்கூடும்.

ஹைகோர்ட்டுக்கு கீழ் உள்ளவை ஜில்லாகோர்ட்டு களேயாகும். இதன் நீதிபதிக்கு டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் என்று பெயர். இதிலும் சிவில், கிரிமினல் வழக்குகள் விசாரிக் கப்படுகின்றன.

ஜில்லாகோர்ட்டுக்கு கீழ்ப்பட்டவை சப் கோர்ட்டு கள் ஆகும். சப்கோர்ட்டுக்கு கீழ்ப்பட்டவை முனிசீப் கோர்ட்டுகளேயாகும். சப் கோர்ட்டிலும் முனிசீப் கோர் ட்டிலும் சிவில் வழக்குகளே விசாரிக்கப்படுகின்றன.

மேற்கூறிய நியாயஸ்தலங்களைத் தவிர வேறு நியாயஸ் தலங்களும் உள. அவற்றுள் மாஜிஸ்திரேட் கோர்ட்டுகள் ஒருவகை ஆகும். சாதாரண ஊர்களிலுள்ள மாஜிஸ்தி ரேட்டுக்கு அதிக அதிகாரமேயில்லை. ஒவ்வொரு ஜில்லாவி லுள்ள மாஜிஸ்திரேட்டுக்கும் டிஸ்டிரிக்ட் கலெக்டரே தலைவ ராவர். இவரை **ஜில்லா மாஜிஸ்திரேட்** என்றும் அழைப் பது உண்டு. பெரிய நகரங்களுக்கென, நகர மாஜிஸ் திரேட்டுகளும், பிரசிடென்சி மாஜிஸ்திரேட்டுகளும் ஏற்பட் டுள்ளனர்.

ஜில்லா பரிபாலனம்

ஒவ்வொரு ஜில்லாவுக்கும் கலெக்டரே அரசாங்கத்தாரின் தலைவராவர். ஜில்லாவின் நிலவரி சம்பந்தமான விஷயங்கள் யாவற்றையும் கலெக்டரே கவனித்து வருகிறார். ஜில்லா மாஜிஸ்திரேட் என்ற ஹோதாவில் கிரிமினல் வழக்குகளை விசாரிக்க இவருக்கு அதிகாரமுண்டு. பொதுவாக ஜில்லாவின் எல்லா விஷயங்களையும் கலெக்டரே மேல்பார்வை பார்த்து வருகிறார்.

ஜில்லாக்கள் பல தாலூக்காக்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தாலூக்காவிலும் டெபுடிகலெக்டர் என்ற ஒரு அதிகாரி உண்டு.

போலீஸ் இலாகா

அமைதி எங்கும் குடிகொண்டிருக்கச் செய்யவும், கலகங்களை அடக்குவதற்கும் ஒவ்வொரு மாகாணத்திலும் போலீஸ் இலாகா ஏற்பட்டிருக்கிறது. இதன் முக்கிய உத்தியோகஸ்தர் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆவர். இவருக்குக் கீழ் பல டெபுடி இன்ஸ்டெக்டர் ஜெனரல்கள் உளர். இவர்கள் மாகாண சம்பந்தமான போலீஸ் விவகாரங்கள் யாவற்றையும் கவனித்து வருகிறார்கள். இவர்களுக்கு கீழ் ஒவ்வொரு ஜில்லாவிலும் டிஸ்டிரிக்ட் சூபரின்டென்டென்டு, டெபுடி சூபரின்டென்டென்டுகள் முதலிய அதிகாரிகள் உளர். இவர்களுக்கு கீழ் இன்ஸ்பெக்டர்களும், சப் இன்ஸ்பெக்டர்களும் வேலை செய்துவருகிறார்கள்.

கல்வி இலாகா

நாம் இதுவரையில் அறிந்துகொண்ட சரித்திரப்பாடங்களிலிருந்து நம் நாடு முன்னேற்ற மடைந்திருந்த காலங்

களிலெல்லாம் கல்வியும் அபிவிருத்தி யடைந்திருந்தது என்று அறிந்துகொண்டோம். நாலந்தா, முதலிய இடங்களிலிருந்த கல்வி நிலயங்கள் நம் தேசத்திற்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்தனவென்றும், மூகம்மதிய, மொகலாய, பிரிட்டிஷ் அரசாங்கங்களிலும் கல்வி அபிவிருத்தி அடைந்திருக்கின்றனவென்றும் அறிந்துகொண்டோம். இனி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கல்வி சம்பந்தமாக நமக்கு அளித்திருக்கும் நன்மைகள் என்னவென்று கவனிப்போம்.

வாரன் ஹேஸ்டிங்ஸ், பென்டிங், கர்ஸன் முதலியவர் நம் தேசத்தார் கல்வியில் அபிவிருத்தியடைய வேண்டுமென்று பாடுபட்டனர். அவர்களுடைய மூயற்சியினுல் பல கல்லூரிகளும், கல்விச்சாலைகளும், சர்வ கலாசாலைகளும் ஏற்பட்டு ஆங்கிலக்கல்வியை இந்தியருக்கு போதித்து வருகின்றன.

இக்காலத்தில் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு கல்வி மந்திரியிருக்கிறுர். இவர் மாகாணக் கல்வியின் பொறுப்பை ஏற்றுள்ளார். இவர் அவ்வப்பொழுது இருக்கும் கல்வி நிலையைப்பற்றி சட்டசபையில் எடுத்துச் சொல்லி வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்யும்படி செய்கிறுர். அலிகார், காசி முதலிய இடங்களிலுள்ள சர்வ கலாசாலைகளின், விவகாரங்கள் மட்டும் இன்னும் மத்திய அரசாங்கத்தின் மேற்பார்வையில் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு பிரதான கல்வி அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறுர். இவரையே **டைரெக்டர் அப் பப்ளிக்-இன்ஸ்ட்ரக்ஷன்** என்று அழைக்கிறோம். இவர் கவர்மெண்டு பள்ளிக்கூடங்களிலுள்ள உபாத்தியாயர்களையும், கல்வி இன்ஸ்பெக்டர்களையும் மேற்

பார்வை பார்த்து வருகிறார். கல்வி இன்ஸ்பெக்டர்களில் இரண்டு வகையினர் உண்டு. ஜில்லாக் கல்வி இன்ஸ்பெக்டர்கள் என்பவர்கள் ஒரு வகையினர். இவர்களையே டிஸ்டிரிக்டு எடுகேஷனல் ஆபீஸர்கள் என்கிறோம். இவர்களுக்கு கீழ் உள்ள அநேக டெபுடீ இன்ஸ்பெக்டர்கள் இன்னொருவகை. இவர்கள் ஆங்காங்குள்ள பள்ளிக்கூடங்கள் சரியாக நடைபெறுகின்றனவா என்று கவனித்து வருகின்றனர். டைரெக்டர், கல்வி மந்திரியின் ஏற்பாடுகளை நடைபெறச் செய்யும் பொறுப்புள்ளவர்.

பல துறைகளிலும் அபிவிருத்தி

தற்காலத்தில் நம் நாடு எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தியடைந்திருக்கிறது. இந்தியாவின் எல்லா பாகங்களும் இருப்புப் பாதைகளினால் இணைக்கப் பட்டிருக்கின்றன. போக்கு வரத்து சாதனங்களும் அதிகரித்திருக்கின்றன. தந்தி, டெலிபோன் போன்ற புதிய சாதனங்கள் ஏற்பட்டிருப்பது வியாபாரத்திற்கு மிகவும் அனுகூலமாயிருக்கிறது.

விவசாயம் மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கிறது. ஆயினும் இன்னமும் அபிவிருத்தியடைய இடமிருக்கிறது. மேல் நாட்டினரைப் போல் விவசாய அபிவிருத்திக்கென நூதன முறைகளைக் கையாளுவது அவசியமாகும்.

கல்வி பெரிதும் இக்காலத்தில் அபிவிருத்தியடைந்திருக்கிறது. சென்னை ராஜதானியில் மட்டும் சுமார் 400 உயர்தரப் பள்ளிக்கூடங்களிருக்கின்றன. சுமார் 50 காலேஜுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஐந்து சர்வ கலா சாலைகளும் நம் மாகாணத்திலுள்ளன. இவை சென்னை சர்வ கலாசாலை, ஆந்திரர் சர்வ கலாசாலை, அண்ணாமலைச்

சர்வ கலாசாலை, மைசூர் சர்வ கலாசாலை, திருவாங்கூர் சர்வ கலாசாலை என்பனவாம். இது போலவே மற்ற மாகாணங்களிலும் கல்வியில் பெரிதும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் படிக்கத் தெரியாதவர்கள் எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே இருக்கிறது. இதைக் குறைப்பதற்கு அரசாங்கத்தார் முயற்சிப்பார்களென்று நாம் எல்லோரும் நம்புகிறோம்.

மக்களின் தேக சௌக்கியத்தைப் பாதுகாப்பதற்கெனவும் பல வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் மேனாட்டு வைத்திய முறையைப் பின்பற்றி வரும் பல பெரிய வைத்தியசாலைகள் இருக்கின்றன. சென்னையிலுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரி இவற்றில் ஒன்றாகும். எல்லா கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள மக்களுக்கு அரசாங்கத்தார் இலவசமாக வைத்திய உதவியை அளித்து வருகின்றனர், தொத்து வியாதிகள் பரவவொட்டாமல் தடுப்பதற்கென அரசாங்கத்தார் பல ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர்.

கைத் தொழிலிலும் இந்தியா சிறிது சிறிதாக அபிவிருத்தியடைந்து வருகிறது. ஆயினும் இத் துறையில் நம் நாடு மேல் நாடுகளைப் போல் அவ்வளவு சிறந்து விளங்கவில்லை. இதற்குக் காரணம் நம்மில் பெரும்பாலோர் விவசாயத்தைப் பின் பற்றியிருப்பதேயாகும். ஆயினும் சமீப காலத்தில் இந்தியரும் பொருள்கள் உற்பத்தி செய்யும் விஷயத்தில் ஊக்கம் கொண்டிருக்கிறார்களென்பதை நிரூபிக்க **டாடா** என்பவர் தோன்றி பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார். இவை இருக்குமிடத்துக்கு டாடா நகரென்று பெயர். மைசூரில் பலகாலம் திவானாயிருந்த **ஸர் எம். விச்வேச்வரய்யா** என்பவர் நம்

தேசத்து பணக்காரர்களுக்கு வேண்டிய மோட்டார் வண்டிகளை நம்நாட்டிலேயே செய்து கொள்ளலாம் என்று கூறியுள்ளார். அத்துடன் நில்லாமல் தாம் கூறியவற்றை உண்மையாக்குவதற்குப் பாடுபட்டு வருகின்றார்.

ஸ்தல சுய ஆட்சி

ரிப்பன் பிரபு காலத்தில் ஸ்தல சுய ஆட்சி ஆரம்பிக்கப்பட்டதென்று முன்பே அறிந்து கொண்டீர்கள். இது இப்பொழுது நன்றாக அபிவிருத்தி அடைந்துவருகிறது. ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களில் மூன்று வகைகள் உள. அவையாவன : முனிசிபாலிடிகள், லோகல் போர்டுகள், பஞ்சாயத்துகள். இவை ஒவ்வொன்றிற்கும் பல அலுவல்கள் உள. முனிசிபாலிடிகள், ஜில்லாபோர்டுகள், பஞ்சாயத்துகள் இவற்றிலுள்ள நிர்வாக சபைகளில் பொதுமக்கள் தேர்ந்தெடுத்த அங்கத்தினர்களே இருக்கின்றனர்.

அரசாங்கத்துக்குப் பலவிதங்களில் வருமானம் கிடைக்கின்றன. அவற்றில் முக்கியமானவை நிலவரி, கள், சாராயம், கஞ்சா முதலியவற்றினின்று வரி, ரிஜிஸ்டிரேஷன் முதலியனவாம். இந்திய அரசாங்கத்திற்கு மொத்தவருமானம் சுமார் 120 கோடியாகும். இவ்வருமானத்தில், அரசாங்க சிப்பந்திகளுக்குக் கொடுத்ததுபோக மிஞ்சியுள்ளது பல பொதுக்காரியங்களுக்கும் செலவழிக்கப்படுகிறது.

இந்திய சமஸ்தானங்கள்

வெல்லெஸ்லி, டல்ஹௌஸி முதலியவர்கள் கையாண்ட முறைகளினால் இந்தியாவின் பெரும்பாகம் ஆங்கில அதிகாரத்துக்குக் கீழ்க்கொண்டு வரப்பட்டபோதிலும் ஒருபாகம் ஆங்கில ஆட்சிக்கு உட்படவில்லை. இவ்வாறு

ஆங்கில ஆட்சிக்குட்படாத பாகம் சிறியதாக இருந்தபோதிலும் அதில் 700 சுதேச சமஸ்தானங்கள் இருக்கின்றன. இவற்றில் பல மஹாராஷ்டிர அரசர்களாலும், பல முகம்மதிய அரசர்களாலும், பல ராஜபுத்ர அரசர்களாலும், பல சீக்கியர்களாலும், ஆளப்பட்டு வருகின்றன. இச்சமஸ்தானங்களில் முக்கியமானவை **ஹைதராபாத், பரோடா, ஜெய்பூர், உதயபூர், காஷ்மீர், நேபாளம், மைசூர், திருவாங்கூர்** முதலியவை. இவற்றில், தக்ஷிணத்திலுள்ள, முகம்மதிய சமஸ்தானமான ஹைதராபாத் எல்லாவற்றிலும் மிகப் பெரியதாகும். ஹைதராபாத் நைஜாம் மன்னர்கள் ஆதியில், சிறிதுகாலம் பிரெஞ்சுக்காரர்களுக்கு உதவி புரிந்தபோதிலும், பிறகு ஆங்கில வர்த்தகக் கம்பெனியின் அந்தரங்க நண்பர்களாக ஆனார்கள். ஹைதராபாத் எல்லாத் துறைகளிலும் இப்போது சிறந்து விளங்குவது தற்போதைய நைஜாமுடையதும், அவருடைய திவானுடையதுமான திறமைக்கும் ஊக்கத்துக்கும் எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

மைசூர் சமஸ்தானம் ஹிந்துவமிசத்தின் அரசருடைய ஆட்சிக்குட்பட்டிருக்கிறது. இதுவும் ஹைதராபாத்தைப்போலவே நன்கு ஆளப்பட்டு வருகிறது. கல்வி, நகரபரிபாலனம், கைத்தொழில் முதலிய துறைகளில் மைசூர் சிறந்து விளங்குகிறது. இவற்றிற்கு மைசூர் சர்வகலாசாலையும், மைசூரிலுள்ள பல தொழிற்சாலைகளுமே போதிய சான்றுகளாகும்.

திருவாங்கூர் அரசரும் ஹிந்து அரசவமிசத்தைச் சேர்ந்தவர். இவ்வரச வமிசத்தினர் ஆதிகாலம் முதல் ஆங்கிலேயருடன் நட்புப்பாராட்டி வருகின்றனர். இதுவும் மற்ற தென்னிந்திய சமஸ்தானங்களைப்போல் எல்

லாத் துறைகளிலும் முன்னணியில் இருக்கிறது. இங்கு சமீபத்தில் ஒரு சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்பட்டு எல்லாக் கலைகளும், சாஸ்திரங்களும் போதிப்பதற்கென ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

25. கடமைகளும் உரிமைகளும்

சரித்திரங் கற்பதால் நீங்கள் பல பழங்காலத்து விஷயங்களை அறிந்துகொள்வதுமல்லாமல், பிற்காலத்திலும் நம் தேசத்திலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கான அறிவையும் பெருகிறீர்கள். நாமனைவரும் தற்காலத்தில் நகரங்களிலோ, கிராமங்களிலோ வாழ்க்கையைக்கூடி நடத்துகிறோமல்லவா? அவ்வாறு வாழ்க்கை நடத்துவதால் பல நன்மைகள் உள்ளன. கோலர்கள், முதலிய ஆதிமக்கள் நாம் தற்போது வசிப்பதுபோல் கூடி வசிக்கவில்லை. அதனால் அவர்கள் ஒருவருக்கொருவர் கலந்து ஆலோசித்துத் தகுந்த வசதிகளை அமைத்துக் கொள்ளவும், எதிரிகளை எதிர்க்கவும் சக்தியற்றவர்களாயிருந்தனர். அதனால் அவர்களைவிடக் கட்டுப்பாடமைந்த ஜாதியாரால் அவர்களை ஜயிக்க முடிந்தது. ஆகவே நாம் சந்தோஷத்துடன் வாழ வேண்டுமானால் கட்டுப்பாடாக வாழவேண்டும். கட்டுப்பாடு இல்லாமற்போனால் சமூகத்தில் சச்சரவுகள் நேருவதுடன், சமூகத்தின் பலமும் குன்றிவிடுகிறது. நீங்கள் ஒரு பழைய கதையைக் கேட்டிருக்கலாம். ஒரு காலத்தில் கை, கால் முதலிய அவயவங்கள் சதியாலோசனை செய்தனவாம். கை சொல்லிற்று, "நான் கொஞ்சமும் இளைப்பாறுமல் வேலைசெய்துகொண்டே இருக்கிறேன். என்னுடைய உழைப்பாலல்லவா வயிறுக்கு உணவு கிடைக்கிறது?

நான் இல்லாமற்போனால் இந்த வயிறு பட்டினி கிடந்து சாகுமல்லவா?" இதுபோலவே காலும் தன்னைப் புகழ்ந்து பேசிக்கொண்டது, "நான் உடம்பைத் தூக்கிக்கொண்டு தினமும் அலைகிறேன். வேலை செய்யும் இடத்திற்கு உடம்பைத் தூக்கிச் செல்லாவிட்டால் வயிற்றின்பாடு என்ன ஆகும்? பட்டினி கிடந்து சாகுமல்லவா?" என்றது. இதைப் போலவே எல்லா அவயவங்களும் தற்பெருமை பாராட்டிக் கொண்டு வயிற்றைத் தூஷித்தன. பிறகு இவ்வவயவங்களெல்லாம் வயிற்றிற்காக வேலை செய்வதில்லை எனத் தீர்மானித்தன. வயிறு இவைகள் சொல்வதையெல்லாம் கவனித்துக்கொண்டு ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தது. அவயவங்கள் வேலை செய்யாததால் வயிறு வாடியது. வயிற்றில் உணவில்லாததால் அவயவங்களுக்கு சோர்வு ஏற்பட்டது. அப்பொழுதுதான் அவைகளுக்கு உண்மை புலப்பட்டது. அவைகள் தங்களுடைய நன்மைக்காக மட்டும் வேலை செய்யவில்லை என்றும், பொதுவாக வயிற்றிற்கு உணவு அளிப்பதால், தாங்களும் பலத்துடன் இருக்கமுடிகிறதென்றும் உடனே உணர்ந்தன.

அதுபோலவே ஒவ்வொருவருக்கும் தனித்தனி வேலைகள் உள. ஒவ்வொருவரையும் அவரவர் துறையில் முக்கியமெனக் கொள்ளவேண்டும்; உயர்வு தாழ்வு என்ற பேதம் கூடாது. பொதுநன்மைக்காகப் பாடுபடுவதென்றால் என்ன? எப்படி நாம் பொது நன்மைக்காகப்பாடுபடலாம்? இவ்விரு கேள்விகளுக்குப் பதில் என்னவென்று ஆராய்வோம்.

நீங்கள் எல்லோரும் குடும்ப வாழ்க்கையை நடத்துகிறீர்கள். உங்களுடைய தாய்தந்தையர் உங்களுக்கு உணவு, உடை முதலியவற்றை அளித்துக் கல்வி கற்பிப்

பதற்காகப் பாடசாலைக்கும் அனுப்புகின்றனர். அவர்கள் உங்களைக் குழந்தைகளாயிருக்கும்போதே போஷிக்காமல் இருந்துவிடுகின்றனர் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது நீங்கள் பிழைத்திருக்க சக்தியற்றவர்களாவீர்கள். உங்கள் ஆசிரியர்கள் உங்களுக்கு அறிவைப் புகட்டாமல் இருந்தால் உங்களால் பிற்காலத்தில் உயர்ந்த வாழ்க்கையை நடத்தமுடியாது. ஆகவே நாம் ஒருவருக்கொருவர் உதவி புரிந்துகொண்டிருக்கிறோம் அல்லவா ?

குடும்பத்தில் வாழ்வதற்காகவும், கல்வி கற்பதற்காகவும், உங்களுக்கு ஏற்பட்ட கடமைகளைப்போலவே சமூகத்தில் இருந்து வாழ்வதற்கும் சில கடமைகள் உங்களுக்கு ஏற்பட்டுள்ளன. ஏனெனில் பல குடும்பங்கள் சேர்ந்தல்லவா ஒருசமூகம் உண்டாகிறது ? சமூகம் விதித்திருக்கும் சிறந்த எல்லா கட்டுப்பாடுகளையும் அனுசரித்தே நாம் நடக்கவேண்டும்.

கிராமங்களிலும் நகரங்களிலும் நாம் குடியிருக்கிறோமல்லவா ? நம்மிடம் வந்து தொழில்வரி என்றும், வீட்டுவரி என்றும், சொல்லிப் பணத்தைச் சிலர் வாங்கிக்கொண்டு போகிறார்கள். அதனால் நமக்கு என்ன நன்மை ? நாம் ஏன் அந்த வரிகளைக் கட்டவேண்டும் ? இவற்றை ஆராய்வோம். இந்த வரிப்பணங்களெல்லாம் பொதுவான சில இடங்களுக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன. அங்கிருப்பவர்கள் பொதுஜனங்களின் சுகாதார விஷயமாகவும், கல்வி அபிவிருத்தி விஷயமாகவும் அநேக நன்மைகளைச் செய்கின்றனர். அவர்கள் உண்மையாக நம்முடைய நன்மையையே பொழுதும் செய்பவர்கள். அவர்கள் நம்மாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

அநேக கிராமங்களும், நகரங்களும் சேர்ந்தது ஒரு மாகாணம். மாகாணத்தில் நடக்கும் பொதுவான எல்லாக் காரியங்களையும் கவனிப்பதற்கென சட்டசபை ஏற்படுத்தப் பட்டுள்ளது என்றும் அதைப்போலவே பல மாகாணங்கள் கொண்ட நம் தேசத்தின் பொதுக் காரியங்களைக் கவனிப்ப தற்கென ஒரு சட்டசபையும் ஏற்பட்டுள்ளது என் றும் முன்னமேயே அறிந்துகொண்டோம். இச்சபைகளை யும் நமக்குப் பொறுப்புள்ளதாகச் செய்யவேண்டும். இவை களின் அதிகாரங்களையும் அதிகரிக்கச் செய்யவேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்தில் உள்ள நல்ல அம்சங்களை நம் தேச அரசியலிலும் அமைக்கவேண்டும். அதற்கான முயற்சிகளை நம் துரைத்தனத்தாரும் செய்து வருகின்றனர். நம் தேச ஜனங்களிடமே ஆட்சியை விட்டுவிடவேண்டும் என்பது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் எண்ணம். அவ் வெண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேறி வருகிறது.

நாமனைவரும் அரசியலில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமானல் நமக்குப் பொது வாழ்க்கையைப்பற்றியும், அரசியலைப்பற்றியும், பூரண ஞானம் வேண்டும். நமக்கும் நம்மைச் சுற்றியிருப்பவருக்கும், நமக்கும் நம் மாகாணத்தவ ருக்கும், நமக்கும் நம் தேசத்தினருக்கும் இடையேயுள்ள சம்பந்தத்தை அறிந்துகொள்ளுதல் அவசியம். பொது நலத்திற்காக சுயநலத்தை விட்டுவிட நாம் பழக வேண்டும்.

இந்தியாவில் பல்வேறு மதத்தினரும், வகுப்பினரும் உளர். இவர்களெல்லோரும் பாரததேசத்தின் புதல்வ ரெனவே தங்களைக் கருதிக்கொள்ள வேண்டும். மதம் பெரியதுதான். ஒவ்வொருவரும் தம் மதத்தைக் கடைப் பிடித்து ஒழுகவேண்டியது அவசியம்தான். ஆயினும் தேச நன்மையை மட்டும் முதன்மையாக நாமெல்லோரும் கருத

வேண்டும். இதையும் தவிர ஒரு மதத்தினர் மற்றொரு மதத்தினரை தூஷிக்கக்கூடாது. அவர்களைத் துன்புறுத்தக்கூடாது. மேலும் ஒவ்வொரு மதத்தினரும் பிற மதக் கோட்பாடுகளிலுள்ள நல்ல அம்சங்களை மட்டும் கிரகித்துக் கொள்ளவேண்டும். இதனால் மத ஒற்றுமை ஏற்படும். இது வேதான் சுவாமி விவேகாநந்தருடைய கருத்தும் ஆகும்.

"கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்?" என்னும் சொல்லுக்கிணங்க நாமும் நம் தேச விஷயங்களில் மட்டும் சிரத்தை காட்டி உலகத்திற்குப் பொதுவான விஷயங்களில் சிரத்தை காட்டாமலிருப்பது நல்லதல்ல. தற்காலத்தில் போக்குவரத்து சாதனங்கள் அதிகமாய்விட்டன. வெகுதூர தேசங்களுக்கெல்லாம் வெகு துரிதமாய் இப்போது செல்லமுடியும். ஆகவே ஒரு தேசத்தில் நடக்கும் சம்பவங்கள் இன்னொரு தேசத்தை வெகு சீக்கிரம் பாதிக்கும். பல தேச வர்த்தமானங்களையும் நாம் அறிந்து கொண்டு நம் தேசம் முன்னேற்றமடைவதற்கான வழிகளை நாம் கையாளவேண்டும். இனி உலகம் முழுதும் சமாதானம் நிலவவேண்டும் என்று அமைக்கப்படும் எந்தத் திட்டத்திற்கும் நாம் பூரண ஆதரவளிக்கவேண்டும்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்னும் அமுத வாக்கியங்களின் பொருளைச் சிந்தியுங்கள்.

எல்லாம் வல்ல இறைவன் நமக்கும், நமது துரைத்தனத்தாருக்கும் நல்லறிவையும், மெய்யுணர்ச்சியையும் ஊட்டி, இந்தியா சுய ஆட்சியைப் பெறவும் நாமும் நமது தேசமும் இன்னும் முன்னேற்றத்தையடைந்து சிறப்புற்று ஓங்கி விளங்கவும் அனுக்கிரஹம் செய்வாராக!

அநுபந்தம்

மஹாராணியாரின் மஹாசாஸனம்

ஆட்சியைக் கைக்கோள்ளல்

" இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, அயர்லாந்து, வேல்ஸ் ஆகிய நாடுகளுக்கும், ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களிலுள்ள ஆங்கிலேய நாடுகளுக்கும் அரசியான விக்டோரியா மஹாராணியாகிய நாம், பல சிறந்த காரணங்களை முன்னிட்டு நமது பார்லிமென்ட் சபையாரின் ஆமோதனைப்படி, இதுவரையில் நம் பொருட்டு கிழக்கு இந்திய கம்பெனியாரால் பரிபாலிக்கப்பட்டு வந்த நமது இந்திய ராஜ்யத்தை இனி நாமே நேரில் ஆட்சி செய்யத் தீர்மானித்திருப்பதனால், நாம் இந்திய அரசாட்சியைக் கைக்கொண்டுவிட்டோம் என்னும் விஷயத்தை இதனால் பிரசுரம் செய்கிறோம்."

குடிகள்

" இந்தியக் குடிகள் உண்மையான உள்ளன்பும், நன்றியறிவும் பொருந்தி நமக்கும், நமக்குப் பின் பட்டத்துக்கு வரும் நமது சந்ததியாருக்கும், அப்போதைக்கப்போது நமது இந்திய நாட்டின் பரிபாலனத்திற்காக நாம் நியமித்தனுப்பும் அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிந்து நடந்தொழுகவேண்டுமென்று நாம் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்."

உத்தியோகஸ்தர்கள்

"கிழக்கிந்திய கம்பெனியரால் நானாவிதமான ஸிவில் மிலிடரி உத்தியோகங்களில் நியமிக்கப்பட்டு, இப்பொழுது வேலைபார்த்து வருகின்ற பற்பல உத்தியோகஸ்தர்களையும் நாம் நமது அபீஷ்டத்திற்குட்பட்டும், இனி ஏற்படும் சட்ட திட்டங்களுக்குட்பட்டும் அந்த அந்த வேலைகளிலேயே காயப்படுத்துகிறோம்."

சுதேச அரசர்கள்

"கம்பெனியார் சுதேச மன்னர்களுக்கு அளித்திருக்கும் வாக்குகளையும், உடன்படிக்கைகளையும் நாம் ஒப்புக்கொண்டு, அவற்றின்படியே கொஞ்சமும் பிறழாமல் நாமும் நடந்து வருவோம். அந்த மன்னர்களும் அவ்வாறே பழைய ஏற்பாடுகளையொட்டியும், உடன்படிக்கைகளைக் கவனித்தும் எம்மிடத்து நடந்துகொள்வார்களென்றும் நாம் நம்புகிறோம்."

"இப்பொழுது நமக்குள்ள ராஜ்யத்தின் விஸ்தீரணத்தை இன்னமும் பெருக்க வேண்டுமென்னும் விருப்பம் நமக்கில்லை. பிறர் நமது நாட்டில் தூராக்கிருதமாய்ப் பிரவேசிக்கவாவது, நமது அதிகாரத்தை மீறி நடக்கவாவது நாம் இடந்தராததுபோல், சுதேச மன்னர்களின் ராஜ்யங்களைக் கவர்ந்துகொள்ளவும் நாம் உடன்படோம்."

"நமது சுதந்திரங்களையும், பெருமையையும், கௌரவத்தையும் நாம் பாராட்டி வருவதை யொத்துச் சுதேச மன்னர்களின் சுதந்திரங்களையும், பெருமையையும், கௌரவத்தையும் நாம் அபிமானித்துக் கொண்டாடுவோம். அவர்களும், எமது பிரஜைகள்போலவே, சமாதானத்தினாலும் நேர்மையான செங்கோலினாலும் உண்டாகும்

க்ஷேமத்தையும், அபிவிருத்தியையும் அடைந்து வரவேண்டு மென்பது எமது விருப்பம்."

கடமைகள்

"நமது மற்றைய குடிகளுக்கு நாம் எவ்வாறு நடக்கக் கடமைப்பட்டிருக்கிறோமோ, அவ்வாறே நாம் நமது இந்தியப் பிரஜைகளிடத்தும் நடந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். கடவுளது கிருபையை முன்னிட்டு, நாம் அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை உண்மையாகவும் ஒழுங்காகவும், மனப்பூர்வமாகவும் நிறைவேற்றிவருவோம்."

"நாம் கிறிஸ்தவமதத்தில் ஈடுபட்டு, அதனுடைய கொள்கைகளின் அநுஷ்டானத்தினல் கிடைப்பனவாகிய நன்மைகளைப் பெற்று வந்தாலும், நமது மதக் கொள்கைகளை நமது பிரஜைகளும் கொண்டொழுகும்படி செய்யவேண்டுமென்னும் ஆவல் நமக்கில்லை. அன்றியும், அவரவர்கள் கொண்டொழுகும் மதம் காரணமாக நமது குடிகளுக்கு அநுகூலமாவது பிரதிகூலமாவது உண்டாகாதபடியும் எல்லோரும் சட்ட முன்னிலையில் சமமாகக் கருதப்பட்டும் வருவதோடு, நமது அதிகாரத்திற்குட்பட்ட உத்தியோகஸ்தர்கள் எவ்விதத்தாலும் நமது பிரஜைகளின் மதக் கொள்கைகளிலாவது, அநுஷ்டானங்களிலாவது தலையிட்டுக் கொள்ளக்கூடாது என்பது எமது ஆக்ஞை."

"ஜாதிமத வேற்றுமைகளைக் கருதாமல், கல்வி, யோக்கியதை, நடுநிலைமை முதலிய குண விசேஷங்கள் பொருந்தியுள்ளவர்கள் எவ்விதமான பக்ஷபாதமுமில்லாமல், அவரவர்களுடைய யோக்கியதை முதலிய குணங்களுக்குத்

தக்கபடி நமது துரைத்தன உத்தியோகங்களில் நியமிக்கப் பட்டு வரவேண்டும் என்பது நமது விருப்பம்."

சட்டங்கள் செய்யும் முறை

" தமது முன்னோர்களிடமிருந்து தமக்குக் கிடைத்துத் தாங்கள் பாரம்பரியமாய் அநுபவித்து வரும் பூஸ்திதியை நமது இந்தியப் பிரஜைகள் எவ்வளவு பரிவுடன் பார்த்து வருகிறார்களென்பது எமக்குத் தெரியுமாதலால், யாம் எமது துரைத்தனத்திற்கு நியாயமாய்க் கிடைக்கவேண்டிய வரியை வசூலித்துக்கொண்டு, அவர்களுடைய சுதந்திரங்களைக் காப் பாற்றிவர விரும்புகிறோம். தொன்று தொட்டு இருப் பனவாகிய அவர்களுடைய உரிமைகளையும் பழக்கவழக்கங் களையும் ஒட்டியே சட்டங்கள் செய்யப்பட்டு வரவேண்டு மென்பதும் எமது அபீஷ்டம்."

நன்மைகள்

"(கடவுளது கிருபையினால் நாட்டில் திரும்பவும் அமைதி உண்டானபிறகு) இந்து தேசத்திய கைத்தொழில் களையும், பொது நன்மைக்கான பல நற்காரியங்களையும் அபிவிருத்தி செய்வதோடு, குடிகளின் நன்மைகளை நாடியே ராஜ்யத்தைப் பரிபாலனஞ் செய்யவேண்டுமென் பது எமது ஆவல். அவர்களுடைய நன்மையே நமது பலம்; அவர்களுடைய திருப்தியே நமது பாதுகாப்பு; அவர்களுடைய நன்றியறிதலே நமக்குச் சிறந்த வெகு மதி. எல்லாம் வல்ல கருணைக் கடலாகிய கடவுள் நமது பிரஜைகளுக்கு நன்மை உண்டாகுமாறு நாம் நடக்க உத்தேசித்தபடி நடந்துவரும்வண்ணம் அருள் புரிவாராக."

கவர்னர் ஜெனரல்கள்

வங்காள கவர்னர் ஜெனரல்கள் என்ற பட்டம் இருந்தபோது

1774. வாரன் ஹேஸ்டிங்ஸ்
1786. காரன்வாலிஸ்
1793. ஸர் ஜான் ஷோர்
1798. வெல்லெஸ்லி பிரபு
1805. காரன்வாலிஸ் (இரண்டாந்தடவை)
1807. மின்டோ
1813. ஹேஸ்டிங்ஸ் பிரபு
1823. ஆமர்ஸ்ட்

இந்திய கவர்னர் ஜெனரல்கள் என்ற பட்டம் இருந்தபோது

1828. பென்டிங் பிரபு
1836. ஆக்லந்து பிரபு
1842. எல்லென்பரோ பிரபு
1844. ஹார்டிஞ்ஜு பிரபு
1848. டல்ஹௌஸி பிரபு

வைஸ்ராய்கள்

1858. கானிங் பிரபு
1862. எல்ஜின் பிரபு
1864. ஸர் ஜான் லாரென்ஸ்
1869 மேயோ பிரபு
1872. நார்த்புருக்
1876. லிட்டன் பிரபு
1880. ரிப்பன் பிரபு
1884. டப்ரீன் பிரபு
1888. லான்ஸ்டௌன் பிரபு
1894. இரண்டாம் எல்ஜின் பிரபு
1899. கர்ஸன் பிரபு
1905. இரண்டாம் மின்டோ
1910. ஹார்டிஞ்ஜு பிரபு
1916. செம்ஸ்போர்டு பிரபு
1921. ரீடிங் பிரபு
1926. இர்வின் பிரபு
1931. வில்லிங்டன் பிரபு

தற்பொழுது: **லின்லித்கோ பிரபு**

பெடரல் சட்டசபையில் பிரிட்டிஷ் இந்தியர்களின் எண்ணிக்கை

மாகாணங்களும் வகுப்புகளும்	கௌன்ஸில் அப் ஸ்டேட்டில் எண்ணிக்கை	பெடரல் அசெம்பிளியில் எண்ணிக்கை
மதராஸ்	20	37
பம்பாய்	16	30
வங்காளம்	20	37
ஐக்கிய மாகாணங்கள்	20	37
பஞ்சாப்	16	30
பீஹார்	16	30
மத்திய மாகாணமும் பீராரும்	8	15
அஸ்ஸாம்	5	10
வடமேற்கு எல்லைப்புற மாகாணம்	5	5
ஒரிஸ்ஸா	5	5
ஸிந்து மாகாணம்	5	5
பிரிட்டிஷ் பலூசிஸ்தானம்	1	1
டில்லி	1	2
அஜ்மீர் (மெர்வாரா)	1	1
குடகு	1	1
ஆங்கிலோ இந்தியர்கள்	1	—
ஐரோப்பியர்கள்	7	—
இந்திய கிறிஸ்தவர்கள்	2	—
கவர்னர் ஜெனரலால் தேர்ந்தெடுக்கப்படும் மெம்பர்கள்	6	—
மாகாணங்களிலிருந்து, தேர்ந்தெடுக்கப்படாத மெம்பர்கள்	—	4
மொத்தம்	156	250

மாகாண சட்டசபைகளில் அங்கத்தினரின் எண்ணிக்கை

மாகாணங்களின் பெயர்	லெஜிஸ் லேடிவ் அசெம்பிளி	லெஜிஸ்லேடிவ் கௌன்ஸில்	
		குறைந்தது	அதிகபக்ஷம்
மதராஸ்	215	54	56
பம்பாய்	175	29	30
வங்காளம்	250	63	65
ஐக்கிய மாகாணங்கள்	228	58	60
பஞ்சாப்	175	—	—
பீஹார்	152	29	30
மத்திய மாகாணமும் பீராரும்	112	—	—
அஸ்ஸாம்	108	21	22
வடமேற்கு எல்லைப்புற மாகாணம்	50	—	—
ஒரிஸ்ஸா	60	—	—
ஸிந்து மாகாணம்	60	—	—

இந்திய அரசாங்கத்தினரின் சராசரி வருஷ வருமானமும் செலவும்

மாகாணம்	ஜனத்தொகை கோடிக் கணக்கில்	வரவு லக்ஷக் கணக்கில்	செலவு லக்ஷக் கணக்கில்
1. மதராஸ்	4.40	15,58·04	15,77·37
2. பம்பாய்	1·80	12,39·80	11,99·47
3. வங்காளம்	5·01	12,14·39	11,74·16
4. ஐக்கிய மாகாணங்கள்	4·84	11,92·00	12,29·26
5. பஞ்சாப்	2·36	11,27·06	10,83·55
6. பீஹார்	3·24	4,57·93	476·03
7. மத்திய மாகாணம்	1·53	4,70 72	481·25
8. அஸ்ஸாம்	·86	2,53·37	292·16
9. வடமேற்கு எல்லை மாகாணம்	·24	1,75·33	179·82
10. ஒரிஸ்ஸா	·83	1,70·36	155·56
11. ஸிந்து மாகாணம்	·39	4,00·35	360·04
	25·50	92,33·77	91.55·07

மத்திய இந்திய அரசாங்கம்—தற்போதுள்ளபடி

- சக்கரவர்த்தி
  - பார்லிமெண்ட் சபை
    - மந்திரி சபை
      - இந்திய காரியதரிசி
        - கவர்னர் ஜெனரல்
          - பெடரல் சட்டசபைகள்
            - பெடரல் அசெம்பிளி
            - பெடரல் கௌன்ஸில்
          - மந்திராலோசனை சபை
          - பெடரல் கோர்ட்

மாகாண அரசாங்கம்

- கவர்னர்
  - மாகாண சபைகள்
    - அசெம்பிளி
    - கௌன்ஸில்
  - மந்திரிகள் சபை
  - ஹைகோர்ட்
    - ஜில்லா கோர்ட்
      - சப்கோர்ட்
        - முன்சீப் கோர்ட்

பயிற்சிக் கேள்விகள்

தொகுதி 1

1. வாரன்ஹேஸ்டிங்ஸ் வருவதற்கு முன் இந்தியாவின் நிலைமை எவ்வாறு இருந்தது?
2. முதல் மைசூர் யுத்தத்தின் காரணங்கள் யாவை? அதன் முடிவு என்ன?
3. வாரன்ஹேஸ்டிங்ஸ் கவர்னராய் இருந்தபோது செய்த சீர்திருத்தங்கள் யாவை?
4. வாரன்ஹேஸ்டிங்ஸ் வைத்துக்கொண்டு இருந்த அன்னிய சம்பந்தத்தையும் அதன் விளைவுகளைப்பற்றியும் சுருக்கி எழுதுக.
5. ரெகுலேடிங் ஆக்ட் ஏற்பட்ட சம்பவங்கள் யாவை?
6. ரெகுலேடிங் ஆக்டின் முக்கிய அம்சங்கள் யாவை? இந்தச் சட்டம் எவ்விதத்தில் குறைபாடு உடையதாக இருந்தது?
7. முதல் மஹாராஷ்டிர யுத்தத்திற்குக் காரணம் யாது? இந்த யுத்தத்தின் முடிவு யாது?
8. இரண்டாவது மைசூர் யுத்தம் எவ்வாறு ஏற்பட்டது? அதன் முக்கிய சம்பவங்கள் யாவை? அதன் முடிவு யாது?
9. வாரன்ஹேஸ்டிங்ஸ் குற்றம் சாட்டப்பட்டதின் முக்கிய காரணங்கள் யாவை?
10. ஹேஸ்டிங்ஸ் காலத்தில் கம்பெனியின் செல்வாக்கு எவ்வாறு அதிகரித்தது?
11. காரன்வாலிஸ் எந்நோக்கங்களுடன் கவர்னர் ஜெனரலாக ஆனார்?
12. காரன்வாலிஸ், உத்தியோகஸ்தர்களின் இடையே இருந்த தீமைகளை எவ்வாறு நீக்கினார்?
13. சாசுவத நிலவரி ஏற்பாடு என்றால் என்ன? அதை ஏன் காரன்வாலிஸ் ஏற்படுத்தினார்? அந்த ஏற்பாட்டின் நல்ல அம்சங்கள் யாவை? குறைபாடுகள் யாவை?
14. மூன்றாவது மைசூர் யுத்தத்தின் காரணங்கள் யாவை? இது எவ்வாறு முடிந்தது?
15. ஸர் ஜான் ஷோர் காலத்தில் மஹாராஷ்டிரர் எந்நிலையில் இருந்தனர்?
16. வெல்லெஸ்லி எத்தகைய நோக்கங்களுடன் கவர்னர் ஜெனரலாக ஆனார்? அவர் வரும்போது இந்தியாவின் நிலை எவ்வாறு இருந்தது?

17. கடைசி மைசூர் யுத்தத்தின் காரணங்கள் யாவை? மைசூரில் வெல்லெஸ்லி செய்த ஏற்பாடுகள் யாவை?
18. இரண்டாம் மஹாராஷ்டிர யுத்தத்திற்குக் காரணங்கள் யாவை? இது எவ்வாறு முடிவு அடைந்தது?
19. வெல்லெஸ்லி நாடு சேகரிப்பதற்குக் கையாண்ட முறை யாது? அதைக் கையாண்டதால் சேகரிக்கப்பட்ட நாடுகள் யாவை?
20. ரஞ்சிட்சிங் என்பவர் யார்? அவருடன் ஆங்கிலேயர் செய்த ஏற்பாடுகள் யாவை?
21. மின்டோ பாரஸிகத்துடனும் ஆப்கானிஸ்தானத்துடனும் செய்து கொண்ட ஏற்பாடுகள் யாவை?
22. ஹேஸ்டிங்ஸ் காலத்தில் ஏற்பட்ட நேபாள யுத்தத்தின் காரணங்கள் யாவை? அது எவ்வாறு முடிந்தது?
23. பிண்டாரிகள் யாவர்? அவர்களை ஹேஸ்டிங்ஸ் எவ்வாறு அடக்கினார்?
24. ஹேஸ்டிங்ஸ் மஹாராஷ்டிர அதிகாரத்தை அடியோடு எவ்வாறு தொலைத்தார்?
25. ஹேஸ்டிங்ஸ் செய்த முக்கிய சீர்திருத்தங்கள் யாவை?

தொகுதி 2

1. ஆமர்ஸ்ட் காலத்தில் ஏற்பட்ட பர்மா யுத்தத்தின் காரணங்களும், விளைவுகளும் யாவை?
2. வில்லியம் பென்டிங் கம்பெனியில் செய்த பொருளாதார சீர்திருத்தங்கள் யாவை?
3. வில்லியம் பென்டிங் செய்த மற்ற சீர்திருத்தங்கள் யாவை?
4. ஆக்லந்து காலத்தில் ஆங்கிலேயருக்கும் ஆப்கானியருக்கும் இடையே ஏற்பட்ட யுத்தத்திற்குக் காரணம் யாது?
5. எல்லென்பரோ ஆப்கானிஸ்தான விஷயமாக எவ்வாறு நடந்து கொண்டார்?
6. எல்லென்பரோ ஸிந்துவையும் குவாலியரையும் கைப்பற்றிய விவரம் யாது?
7. ஹார்டிஞ்ஜூ காலத்தில் ஏற்பட்ட சீக்கிய யுத்தத்திற்குக் காரணங்கள் யாவை?
8. லாகூர் உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள் யாவை?
9. ஹார்டிஞ்ஜூ பஞ்சாபை பரிபாலிப்பதற்காகச் செய்த ஏற்பாடுகள் யாவை?

10. டல்ஹௌஸி காலத்தில் ஏற்பட்ட இரண்டாம் சீக்கிய யுத்தத்தின் காரணங்களும் முடிவும் யாவை ?
11. இரண்டாம் பர்மிய யுத்தம் ஏன் ஏற்பட்டது ? அதனால் ஆங்கிலேயருக்குக் கிடைத்த நாடுகள் யாவை ?
12. டல்ஹௌஸி கையாண்ட முறை யாது ? இதைக் கையாண்டதினால் டல்ஹௌஸி சேர்த்த நாடுகள் யாவை ?
13. டல்ஹௌஸியின் காலத்தில் சேர்க்கப்பட்ட மற்ற நாடுகள் யாவை ?
14. டல்ஹௌஸியின் முக்கிய சீர்திருத்தங்கள் யாவை ?
15. கானிங் ஆப்கானியரோடு செய்த ஏற்பாடுகள் யாது ?
16. சிப்பாய்க் கலகத்தின் முக்கிய காரணங்கள் யாவை ? அதை அடக்குவதற்கு ஆங்கிலேயருக்கு உதவி புரிந்தவர் யாவர் ?
17. சிப்பாய்க் கலகத்தின் முக்கிய விளைவுகள் யாவை ?
18. மஹாராணியாரின் சாஸனத்தின் முக்கிய அம்சங்கள் யாவை ?
19. கானிங் செய்த சீர்திருத்தங்கள் யாவை ?
20. எல்ஜின்பிரபு காலத்தில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சி யாது ?
21. லாரென்ஸ் காலத்தில் ஏற்பட்ட பூடானிய யுத்தத்தைப்பற்றி எழுதுக. அது எவ்வாறு முடிந்தது ?
22. லாரென்ஸ் செய்த முக்கிய சீர்திருத்தங்கள் யாவை ?
23. லாரென்ஸ் ஆப்கானிஸ்தான விஷயத்தில் கையாண்ட கொள்கை யாது ?
24. மேயோவின் சீர்திருத்தங்கள் யாவை ?
25. மேயோ ஆப்கானிஸ்தான விஷயமாக அனுசரித்த கொள்கை யாது ?

தொகுதி 3

1. நார்த்புரூக் பரோடாவில் செய்த ஏற்பாடுகள் யாவை ?
2. நார்த்புரூக் செய்த முக்கிய சீர்திருத்தங்கள் யாவை ?
3. இரண்டாம் லிட்டன் பிரபு பஞ்ச நிவாரணத்துக்காகச் செய்த ஏற்பாடுகள் யாவை ?
4. இரண்டாம் லிட்டன் செய்த சீர்திருத்தங்கள் யாவை ?
5. லிட்டன் பிரபு ராஜத்துரோகமான பத்திரிகைகளை எவ்வாறு அடக்கினார் ?
6. இரண்டாம், மூன்றும் ஆப்கானிய யுத்தங்களின் காரணங்களும் முடிவுகளும் யாவை ?

7. ரிப்பன் மைசூரில் செய்த ஏற்பாடுகள் யாவை?
8. ரிப்பன் இயற்றிய சீர்திருத்தங்கள் யாவை?
9. டப்ரீன் காலத்தில் ஏற்பட்ட பாஞ்ச்டே சம்பவம் என்பது யாது?
10. டப்ரீன் செய்த சீர்திருத்தங்கள் யாவை?
11. டப்ரீன் பர்மாவை எவ்வாறு கைப்பற்றினார்?
12. இந்திய தேசீய காங்கிரஸ் ஏற்பட்ட காலம் யாது?
13. லான்ஸ்டௌன் செய்த முக்கிய சீர்திருத்தங்கள் யாவை?
14. இரண்டாம் எல்ஜின் காலத்தில் ரஷ்யாவோடு செய்யப்பட்ட ஏற்பாடு யாது?
15. எல்ஜின் காலத்தில் இந்தியருக்கு நேர்ந்த துன்பங்கள் யாவை? அவற்றை நீக்க எல்ஜின் செய்தது என்ன?
16. வடமேற்கெல்லைப்புற மாகாணம் ஏற்பட்ட காலம் யாது? எல்லைப்புற விஷயமாகக் கர்ஸன் பிரபு கையாண்ட கொள்கை யாது?
17. திபெத் மீது கர்ஸன் படையெடுத்ததின் காரணம் யாது?
18. கர்ஸன் செய்த சீர்திருத்தங்கள் யாவை?
19. வங்காள பிரிவினையைப் பொது மக்கள் ஆதரிக்காதது ஏன்?
20. மின்டோ காலத்தில் ஏற்பட்ட கலகங்கள் யாவை? அவை எவ்வாறு அடக்கப்பட்டன?
21. மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் யாவை?
22. ஹார்டிஞ்ஜு காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட பெரிய சம்பவம் யாது? இந்தியர் எவ்விதங்களில் ஆங்கிலேயருக்கு உதவி புரிந்தனர்?
23. 1919-ம் வருஷத்திய இந்திய சட்டத்தின் அம்சங்கள் யாவை?
24. 1935-ம் வருஷத்தின் இந்திய சட்டத்தினால் அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள முக்கிய மாறுதல்கள் யாவை?

Printed at the Liberty Press, G.T., Madras.

= தமிழ் மலர்ச்சி

III. F B

1. கற்றதை மற்றது மேல் கற்கப்படுவது ஏன் இதனை எடுக்கும்?

2. பரதனைச் சிந்திக்க இக்கன். அடைந்த இன்னல்கள் யாவை?

3. “காலும் கனிதாலும்” எப்பொழுது?

4. “வெலிகண் கொட்காடு” இதனை செல்றிவது என்ன?

5. இலக்கணக் குறிப்பு தா
“அவன் செயும் வகை, மைந்தனாலும் செயலையும் ஆண்டவன் செயலையும் போலாம்!”

III F A

1. திருவள்ளுவர், பாரதி இவர்கள் ஒற்றுமை, வேற்றுமை கூறு?

2. பாரதியின் பண் மகிழ்ந்தார் யார்? இதை எவ்விடத்து கூறுகிறார் ஐய?

3. “இருபது கோடிகள் இறைஞ்சுதி ஏக்கு இவனால் போலாம்” மொழிப்பொருள் எழுதுக. யாரிடம் யார் என்று கூறு.

4. “வல்லுநர் அந்தமின்மையம்” யாரை? ஏன்

5. இலக்கணக் குறிப்பு தா
இளமை தொட்டு கேட்டு இவ்வுல வாழைக்குத் தொல் இத்திகழ்வது

8 3 3

உ சிவமயம்

ஸ்ரீ அருணைய விலாசம்

சிவம்!

அன்புடையார்

V ராஜுவன்

கோட்டைஜன் கோட்டை

சுப்பராயபிள்ளை

History — M. R.

Geography



நம்சரித்திரத்தில் கேள்விபதில்